# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

25 SILVER JUBILEE 1992 - 2016-17 வெள்ளி விழா ஆண்டு

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்"

மார்ச் 2026 | பங்குனித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 34 | March - 2026 | Issue - 5 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR

- 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - தலையங்கம்
- அதிகாரியின் நியமன உத்தரவை நீண்ட காலமாகத் தடுத்ததற்காக மத்திய அரசுக்கு 5 லட்சம் ரூபாய் அபராதம்
  - இந்திய உச்சநீதிமன்றம்
- உயர்நீதிமன்ற உத்தரவில் தலையிட திடமான காரணம் கிடைக்கவில்லை
  - இந்திய உச்சநீதிமன்றம்
- 'குற்றம் காமத்தின் விளைவு அல்ல, காதலின் விளைவு': குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையே திருமணம் நடந்ததைக் குறிப்பிட்டு, போக்சோ தண்டனை ரத்து
  - இந்திய உச்சநீதிமன்றம்
- மூன்றாவது பிரசவம் என்று சொல்லி பொது பணியாளரின் பேறுகால சலுகைகளை தடை செய்யக் கூடாது
  - சென்னை உயர்நீதிமன்றம்
- பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தம் குறிப்பிட்ட நிவாரணம் பெறுவதற்கான அடிப்படை ஆகாது
  - சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு)

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

மார்ச் 2026 http://epaper.sattakadir.com பங்குனித் திங்கள் இதழ் 2026


## பொருளடக்கம்


1. 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் – தலையங்கம் 5
2. அதிகாரியின் நியமன உத்தரவை நீண்ட காலமாகத் தடுத்ததற்காக மத்திய அரசுக்கு 5 லட்சம் ரூபாய் அபராதம் – இந்திய உச்சநீதிமன்றம் 12
3. உயர்நீதிமன்ற உத்தரவில் தலையிட திடமான காரணம் கிடைக்கவில்லை – இந்திய உச்சநீதிமன்றம் 22
4. ‘குற்றம் காமத்தின் விளைவு அல்ல, காதலின் விளைவு’: குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையே திருமணம் நடந்ததைக் குறிப்பிட்டு, போக்சோ தண்டனை ரத்து – இந்திய உச்சநீதிமன்றம் 29
5. அடமானமும் அது தீர்க்கப்படுதலும் – சென்னை உயர்நீதிமன்றம் 32
6. பாகப்பிரிவினை வழக்கில் சில சொத்துக்கள் அதிகார எல்லை வரம்பிற்கு வெளியே உள்ளதென சட்டப்பூர்வ அனுமதி பெறாமல் தொடர்வது செயல்முறையை விழலாக்கும் – சென்னை உயர்நீதிமன்றம் 38
7. 1937வது ஆண்டு சட்டம் கீழ் பாத்தியதையுள்ள இந்து ஆணின் சொத்தில் பாகப்பிரிவினை கோரிடலுக்கு 1956இன் இந்து வாரிசுரிமை சட்டம் பொருத்தப்பட முடியாது. – சென்னை உயர்நீதிமன்றம் 43
8. சான்றுகளை கருதி பார்க்கும் முறை – சென்னை உயர்நீதிமன்றம் 50
9. மூன்றாவது பிரசவம் என்று சொல்லி பொது பணியாளரின் பேறுகால சலுகைகளை தடை செய்யக் கூடாது – சென்னை உயர்நீதிமன்றம் 55
10. காப்புரிமையும் கண்டுபிடிப்புகளும் – சென்னை உயர்நீதிமன்றம் 58
11. பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தம் குறிப்பிட்ட நிவாரணம் பெறுவதற்கான அடிப்படை ஆகாது – சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 63
12. AI யுகத்தில் தொழில் உறவுகள் சட்டம் வேலை பாதுகாப்பை சமநிலைப்படுத்த வேண்டும் – கோபால் கிருஷ்ணா ராய் 69
13. 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 4/2009) – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 71
14. 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 8/2007) – தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் 79

## சட்டக்கதிர்

*ஆசிரியர் வெளியிடுபவர்:*
முனைவர் வே.இரா.சே.சம்பத்

*சிறப்பு ஆலோசனைக் குழு:*
*மூத்த வழக்கறிஞர்கள்:*
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

*சட்ட/தமிழ் வல்லுநர்கள்:*
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

*வழக்கறிஞர்கள்:*
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

*சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:*
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

*மொழி பெயர்ப்பாளர் குழு:*
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்
திரு.மா.வெற்றிவேல்

*அலுவலகப் பணிக்குழு:*
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு.வி.கதிரவன்

*வடிவமைப்பு:* வாசன் அச்சகம், சென்னை


| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை **(Cheque)**, வங்கி வரைவுக் கேட்போலை **(DD)** மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை **(Money Order)** மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு
(12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-

நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-

தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-

சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-

தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-

சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-

சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-

உன்னுள் என்னைப் பார் ரூ.150/-

உலகெங்கும் கலைஞர் ரூ.300/-

"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக்
காசோலை **(Cheque)**,
வங்கி வரைவுக் கேட்போலை **(DD)**
மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி
நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.


**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com


**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

பங்குனித் திங்கள் இதழ்

சட்டம் – 34 மார்ச் 2026 கதிர் – 5


## 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்

### அரசியல் கட்சிகளின் அறிக்கையில் சேர்க்க வேண்டிய முக்கியத் திட்டங்களும் செயல்பாடுகளும் கருத்துக்களும்

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான தேர்தல் இந்த 2026ஆம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நடைபெற உள்ளது. தமிழக மக்கள் எப்போதும் விழிப்புடனும் கடமை உணர்வுடனும் தேர்தலை அணுகுபவர்கள். தமிழக மக்களுக்குத் தேவைப்படுகிற சில பயனுள்ள திட்டங்களை அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் சேர்க்கலாம்.

1. ஊராட்சி, நகராட்சி மற்றும் பல்கலைக்கழகங்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள் பங்கேற்கும் வகையிலும் பங்கு அளிக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் கட்டாயம் மாநிலச் சட்ட மேலவை அமைத்திட உரிய நடவடிக்கை வேண்டும்.
2. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் 38 பொதுப் பல்கலைக்கழகங்கள் அனைத்து வசதிகளுடன் மற்றும் அனைத்து துறைகளுடன் அமைக்க வேண்டும்.
3. சென்னைப் பல்கலைக் கழகத்தில் "சமூக நீதித் துறை" ஒன்றினை உருவாக்கிட வேண்டும்.
4. சென்னை பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த தென்கிழக்கு ஆசியவியல் வரலாற்றைத் துறையினை மீண்டும் உருவாக்கிட வேண்டும்.
5. சென்னை பல்கலைக்கழக தரமணி வளாகத்தில் இயங்கும் உயர் மருத்துவக்கல்வித் துறையுடன் ஓர் மருத்துவ பள்ளி மற்றும் பல்கலைக்கழக மருத்துவமனை உருவாக்க வேண்டும். இதன் வழி முதுநிலை மருத்துவப் படிப்புகள் ஆராய்ச்சி உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் பொதுவாக அனைத்து பல்கலைக்கழகளிலும் பல்கலை மருத்துமனை உள்ளது.
6. ஆராய்ச்சிக் கல்வியையும், உயர்கல்வியையும் ஊக்குவிக்கும் விதத்தில் பல்கலைக் கழகத்திற்கான நிதி நல்கையை மாநில அரசு இருமடங்காக உயர்த்திட வேண்டும்.
7. இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது இரண்டு பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகளை உருவாக்க வேண்டும்.
8. தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்கு மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும்.
9. ஊராட்சிகளில் உள்ள படிப்பகம்–நூல் நிலையங்களை மேம்படுத்தவும் நூல்கள், இதழ்கள் வாங்க தமிழ்நாடு அரசே நிதி ஒதுக்கி வாங்கி விநியோகிக்க வேண்டும்.
10. CBSE பள்ளிகள் தொடங்க அல்லது தொடர்ந்து நடத்த வேறு மாநில மாணவர்கள் குறைந்தது 20 சதவீதம் இருந்தால் மட்டுமே அனுமதிக்க வேண்டும். அந்தப் பள்ளியில் மாநில ஆட்சி மொழியான தமிழை ஒரு பாடமாக இருக்க வேண்டும் என தமிழக சட்டப் பேரவையில் சட்டம் கொண்டு வர வேண்டும்.
11. அனைத்துக் கிராமங்களிலும் இ–சேவை மையங்கள் நிறுவ வேண்டும்.
12. ஏழை மக்களுக்கு இலவசமாகச் சட்ட உதவி அளித்திட ஊக்கத் திட்டங்களை அறிவிக்கவும், வட்ட அளவில் செயல்படுத்தவும் இலவச சட்ட ஆலோசனை மையம் உருவாக்கிட வேண்டும்.

இதனைத் தொண்டு நிறுவனங்கள் பிற தன்னாட்சி அமைப்புகள் நடத்திட நிதியுதவி அளித்திட வேண்டும்.

13. அரசு ஊழியர்களைக் காரணமின்றி, அவர்கள் விருப்பம் இன்றி மாறுதல் செய்வதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும்.

14. லஞ்சம், முறைகேடுகளை கண்காணித்துத் தடுத்திடவும் மேலும் தீவிரமான கண்காணிப்புக் குழுக்களை வட்டம் தோறும் அமைத்திட வேண்டுகிறோம்.

15. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரிலும் 500 படுக்கைகளைக் கொண்ட அனைத்து வசதிகளும் கூடிய சிறப்பு மருத்துவமனைகளைஅமைக்க வேண்டும் அல்லது உருவாக்க முன் வருபவர்களுக்கு அரசு நிலத்தை இலவசமாக தர திட்டம் வகுக்க வேண்டும்.

16. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் திருமணக் கூடங்களை அமைக்க வேண்டும்.

17. வீட்டு வசதி வாரியத்தின் கீழ் தமிழ்நாட்டின் அனைத்து நகராட்சிகளிலும், தாலுகா தலைமை நகரத்திலும், ஒன்றியத் தலைநகரத்திலும் உயர்தரமான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை உருவாக்கிட வேண்டும்.

18. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் லாப நோக்கில் வணிக நோக்கில் இயங்கும் திட்டங்களுக்கு தடை விதிக்க வேண்டும்.

19. இந்தியா முழுவதும் மாநிலத் தலைநகரங்களிலும் ‘தமிழ்நாடு இல்லங்களை’ உருவாக்கிட வேண்டும். மேலும் இதன் வழி தமிழ்ப் பண்பாடு, நாகரிகம், மொழி, உணவு, தங்க இடம், மாநாட்டுக் கூடம் என அனைத்தும் மற்ற மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

20. வெளிநாட்டில் தமிழர்கள் வாழ்கின்ற நகரங்களில் ‘தமிழ்நாடு இல்லங்களை’ உருவாக்கிட வேண்டும். இந்த இல்லத்தில் மொழி, பண்பாடு, கலை, உணவு, தங்க இடம், மாநாட்டுக் கூடம் என அனைத்தும் இருக்கும் வண்ணம் அவை அமைதல் வேண்டும். இதனை வெளிநாட்டு தமிழர்கள் ஏற்படுத்திட நிர்வகிக்க ஊக்குவிக்க வேண்டும். நிதி உதவியும் வழங்கிட வேண்டும்.

21. அமெரிக்காவில் வாஷிங்டன் டிசி தலைநகரில் அமையவிருக்கும் “உலகளாவிய தமிழ்நாடு இல்லம்” தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்கி பங்குதாரராக இருக்க வேண்டும்.

22. தமிழ்மொழி, இனம், கலை, இலக்கியம், பண்பாடு என அனைத்து நிலைகளிலும் தமிழ் சமூகத்திற்குப் பெரும் பங்களிப்பு செய்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் பன்னாட்டு நிலையில் நேரு விருதினைப் போல் அறிஞர் அண்ணா பன்னாட்டு விருதினை உருவாக்கிட வேண்டும். 50 லட்சம் விருதுத் தொகையுடன் பாராட்டுப் பத்திரமும் வழங்கிட வேண்டும். இதற்கு பேரறிஞர் அண்ணா ஜனநாயகக் காவலர் பன்னாட்டு விருது என பெயரிடலாம்.

23. ஜவ்வாது மலை, ஏலகிரி மலைவாழ் மக்களுக்காக “மலைவாழ் மலை வளர்ச்சி வாரியம்” ஒன்றினை அமைக்க வேண்டும்.

24. சென்னை நகர நெரிசலைக் குறைக்கச் சென்னைக்கு அருகாமையிலேயே ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில் புதிய நகர்களை சென்னையை உருவாக்க வேண்டும். மகாபலிபுரம் – சென்னை – தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர்–திருவள்ளூர் இடையே உள்ள பகுதியில் புதிய நகரை அமைத்திட வேண்டும்.

25. ஒவ்வொரு நகராட்சியிலும் 100 அறைகளைக் கொண்ட தங்கும் விடுதிகளை சுற்றுலாத்துறை ஒத்துழைப்புடன் நிறுவிட உரிய முயற்சி எடுக்க வேண்டும். இந்த தங்கும் விடுதிகளில் சைவ, அசைவ உணவுகங்கள், மாநாட்டுக் கூடம், உள்விளையாட்டுக் கூடம், சந்தை கடைகள், வாகனம் நிறுத்துமிடம் உள்ள 3 நட்சத்திர வசதி உடையதாய் அவை அமைந்திடல் வேண்டும். தனியார் முன் வரும் வகையில் அரசு நிலங்களை இந்தத் திட்டத்திற்கு வழங்கிட வேண்டும்.

26. உயர்நீதிமன்றக் கூடுதல் வழக்கு மொழியாகத் தமிழ்மொழியைச் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

27. தென்னிந்திய மக்களின் நுழைவாயில் நகரமான சென்னை நகரைத் தென்னிந்திய மக்கள் அனைத்து முக்கியப் பணிகளுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றனர். உச்சநீதிமன்றக் கிளை சென்னையில் அமைய வேண்டும் என விரும்புகின்றனர். டெல்லிக்கு விமானத்திலோ, இரயிலிலோ செல்ல நேரமும் பணமும் அதிகமாகச் செலவாகிறது. இதனால் சாதாரண மக்கள் டில்லிக்குச் செல்லப் பெரிதும் அஞ்சுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றக் கிளையை சென்னையில் அமைத்திடச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றம் என்கிற புதிய அமைப்பினை உருவாக்கி உயர்நீதிமன்றத்திற்கும் உச்சநீதிமன்றத்திற்கும் இடையே இந்த நீதிமன்றம் இயங்கிடவும் இந்த மேல் முறையீட்டு நீதிமன்றம் சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி என நான்கு பெரு நகரங்களில் அமைய அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

28. சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாகத் தமிழ்நாட்டைச் சார்ந்தவரையே நியமித்திடச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

29. எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஒரு நீதிபதி பதவி காலியானால் 100 நாட்களுக்குள் புதிதாக நீதிபதியை நியமிக்கச் சட்டவரையறை கொண்டுவர ஏதுவாகச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

30. இந்தியில் அனைத்துச் சட்டங்களையும் மொழி பெயர்ப்பது போல் தமிழ் மொழியில் அனைத்துச் சட்டங்களையும் மொழிபெயர்த்திட மத்திய அரசிடம் நிதி உதவி பெற வேண்டும்.

31. உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம் செய்வதில் 1993ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்த முறையினை அமுல்படுத்திட வேண்டும். நீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமனத்தில் மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும், உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் இணைந்து அனைத்து அமைப்புகளையும் ஒரு மனதாகத் தீர்மானிக்கிற பழைய முறையே சிறந்தது எனச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

32. மாநில மக்களைப் பாதுகாக்கின்ற எந்த ஒரு திட்டமும் மாநில அரசே நிறைவேற்றிக் கொள்ள சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

33. மாநிலத்தில் சுயாட்சியை உருவாக்கும் விதத்தில் பொதுப் பட்டியலில் உள்ள அதிகாரங்களை மாநிலத்திற்கு மாற்றச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

34. தென்னிந்திய மக்கள் பயன்படுத்தும் விதத்தில் சென்னை விமானங்கள் சென்னையிலிருந்து ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் கீழ்த்திசை நாடுகளுக்கும் நேரடியாகப் பறந்து செல்ல உரிய நடவடிக்கை வேண்டும். தற்போது சென்னை விமானங்கள் மும்பையில் அல்லது டெல்லி இறங்கித்தான் செல்லுகின்றன. சென்னையிலிருந்து ஐரோப்பா, அமெரிக்க நாடுகளுக்கு விமானம் நேரடியாகச் செல்லும் வசதி கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

35. விமானங்கள் தமிழ்நாட்டில் இருந்து புறப்படும். விமானத்தில் தமிழ் மொழியில் விமானச் செய்திகளை அறிவிக்கச் சட்டம் கொண்டு வர சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

36. சென்னை – காட்மாண்டு இடையே நேரடி விமானச் சேவை தொடங்க வேண்டும்.

37. சென்னையிலிருந்து தென் ஆப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரத்துக்கு வாரத்தில் மூன்று நாள் நேரடி விமான சேவையைத் தொடங்கிட வேண்டுகிறோம்.

38. சென்னை – பாட்னா இடையே நேரடி விமானச் சேவை தொடங்க விமான நிறுவனங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். புத்தமதத்தைச் சார்ந்த மக்கள் சென்னை வழியாக பாட்னா செல்ல இது உதவும்.

39. இந்திய மக்கள் அனைவரும் தலைநகருக்கு எளிதில் சென்று வரும் விதத்தில் தலைநகருக்குச் செல்லும் விமானக் கட்டணம் இந்தியா முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டும். குறிப்பாகத் தமிழக மக்களும், வடகிழக்கு மாநில மக்களும் குறைந்த கட்டணத்தில் எளிதில் டில்லி சென்று

வரவும் இந்த வகையில் இந்தியக் குடிமக்கள் அனைவரும் டில்லி சென்று வருவதில் சம அளவுக் கட்டணமே இருக்கும்படி செய்ய வேண்டும்.

40. தேசிய நெடுஞ்சாலையில் வசூலிக்கின்ற சுங்கக் கட்டணத் (Toll) தொகையினைப் பத்தாண்டுகள் முடிந்த திட்டத்திற்கு பாதியாகக் குறைத்திட வேண்டும்.

41. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மீட்டர் கேஜ் இரயில் பாதைகளையும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட வேண்டும்.

42. திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, செய்யாறு, திருவண்ணாமலை, ஜோலார்பேட்டை இவைகளை இணைக்கும் அகல இரயில் பாதை அமைக்க வேண்டும்.

43. புதுச்சேரி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய நகரங்களை இணைக்கின்ற அகல இரயில் பாதை அமைக்க வேண்டும்.

44. ஓசூர் – கிருஷ்ணகிரி குப்பம் பகுதிகளை இணைக்கும் இரயில் பாதை அமைத்திட வேண்டும்.

45. சென்னை – மாமல்லபுரம் – புதுச்சேரி – இரயில் பாதை அமைத்திட வேண்டும்.

46. இரயில்வேத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கென கல்வி நிலையங்களை ஜோலார்பேட்டையில் அமைத்திட வேண்டும். ஜோலார்பேட்டை தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய நான்கு மாநில ஊழியர்களும் ஒன்று சேருவதற்குத் தகுந்த இடமாகவும், இரயில்வேத் துறைக்கான சொந்த நிலம் அங்கு காலியாக உள்ளது என்பதாலும், ஜோலார்பேட்டையை இரயில்வேத் துறை வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் விதத்தில் கல்வி நிலையங்கள் அங்கு அமைய வேண்டும்.

47. கல்வி மாநிலப்பட்டியலில் இருந்து 1976ஆம் ஆண்டில் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டு விட்டது. இதனால் அந்தந்த மாநில மக்களின் மொழி, நாகரிகம், பண்பாடு அடையாளம் இவையனைத்தும் கல்வித்துறையில் பிரதிபலிக்கவில்லை. இதனால் அந்தந்த மாநில மக்கள் தங்கள் அடையாளங்களை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் கலாச்சாரச் சீரழிவு ஏற்பட்டு வருகிறது. இதனைத் தடுக்கும் பொருட்டு அந்தந்த மாநிலத்தின் பொறுப்பில் கல்வியை மாநிலப் பட்டியலில் மீண்டும் சேர்க்க வேண்டும் எனச் சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

48. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டில் ஒரு தேசியக் கல்வி நிறுவனம் அமைத்திட வேண்டும்.

49. தென்னிந்திய மக்கள் நலனுக்காகச் சென்னையில் எல்லா வெளிநாட்டுத் தூதரங்களும் அமைய வெளியுறவுத்துறை சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ரஷியா, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி, இலங்கை போன்ற நாடுகளுக்கான தூதரகங்கள் மட்டுமே உள்ளன. 186 நாடுகளின் தூதரகங்கள் டில்லியில் உள்ளன. 100 தூதரகங்கள் பம்பாயில் உள்ளன. சென்னையில் பத்துக்கும் குறைவான தூதரகங்களே உள்ளன. மற்ற நாடுகளுக்குச் செல்ல முன் அனுமதி பெற டில்லி அல்லது மும்பை செல்ல வேண்டியுள்ளது. இதனால் வெளிநாடு செல்பவர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஆகவே சென்னையில் எல்லா வெளிநாடுகளின் தூதரகங்களும் அமைய ஏற்பாடு செய்திட வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

50. தமிழக இளைஞர்கள் எளிதில் வெளிநாடு சென்று படிக்கவும், வேலைவாய்ப்புத் தேடவும், வேலூர், சேலம் ஆகிய இடங்களில் கடவுச்சீட்டு அலுவலகம் திறக்க வேண்டும்.

51. பாலாற்றில் தண்ணீர்விட கர்நாடக மற்றும் ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை தொடங்க மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்.

52. மும்பாய், டெல்லி விமான நிலையங்களுக்கு இணையாக சென்னை பன்னாட்டு விமான நிலையத்தை விரிவுபடுத்தும் பணிகளை விரைவுபடுத்திட உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

53. சென்னை, வேலூர், வாணியம்பாடி வரையில் தேசிய நெடுஞ்சாலையாக உள்ளது. அதேபோல சேலம், கோயம்புத்தூர், கொச்சின் தேசிய நெடுஞ்சாலையாக உள்ளது. வாணியம்பாடி – திருப்பத்தூர் அரூர் – சேலம் ஆகிய பகுதிகளைத் தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்து இந்த இரண்டு சாலைகளையும் மாற்றிட வேண்டும் என மத்திய அரசைக் கேட்க வேண்டும்.

54. மகளிருக்கு இட ஒதுக்கீடு செய்வதில் அரசியல் கட்சிகளே தன்னிச்சையாக 33% இட ஒதுக்கீடு வழங்கிடச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

55. ஜாதி அடிப்படையில் தேர்தலைச் சந்திக்கின்ற அரசியல் கட்சிகளுக்குத் தடை விதிக்க வேண்டும்.

56. தமிழ்நாட்டில் வேலூர், ஓசூர் ஆகிய நகரங்களில் உள்ள விமான நிலையத்தில் விமான சேவை தொடங்க வேண்டும்.

57. தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், தென் ஆப்பிரிக்கா, பிஜித் தீவுகள், பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில் தமிழ் தெரிந்தவரைத் தூதுவராக நியமிக்க மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டும்.

58. வேலூர் திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ள ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, ஜோலார்பேட்டை, செங்கம் போன்ற பகுதிகள் மிகவும் பின் தங்கி உள்ளதால் புதியதாக ஒரு மலைவாழ் பல்கலைக்கழகம் தொடங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

59. தேசிய நெடுஞ்சாலைத் துறையை அந்தந்த மாநில அரசுகளிடம் ஒப்படைக்க மாநிலச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

60. மாநிலத்தில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களில் அந்தந்த மாநில ஆட்சி மொழியினையே மத்திய அரசு அலுவல் மொழியாக மாற்றிட வேண்டுகிறோம்.

61. தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசாங்கத்தின் அனைத்து அலுவலகங்களிலும் தமிழைக் கூடுதல் ஆட்சி மொழியாக அறிமுகப்படுத்த வேண்டுகிறோம்.

62. ஒன்றிய மாநில உறவுகளைப் பற்றி மறுஆய்வு நடத்த நிரந்தர ஆணையம் ஒன்றினை அறிவித்திட ஒன்றிய அரசினை வற்புறுத்த வேண்டும்.

63. இந்திய மொழிகளில் இந்தி, வங்காளம், உருது என மூன்று மொழிகள் ஐக்கிய நாடுகள் மொழியாக உள்ளது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் ஆட்சி மொழியாக உள்ள தமிழையும் ஐக்கிய நாடுகள் மொழிகள் பட்டியலில் சேர்த்திட இந்திய அரசாங்கத்தினை வற்புறுத்திட வேண்டும்.

64. வீடு இல்லாதவர்கள், ஒன்றிய மாநில அரசாங்கம் கட்டியுள்ள வாடகைக் குடியிருப்பில் வாடகைக்குத் தங்க 10 சதவீத வீடுகளை பொது ஒதுக்கீடு செய்ய சட்டம் கொண்டு வர வேண்டுகிறோம்.

65. அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி அலுவலகம் தமிழ்நாடு அரசு செலவில் கட்டித் தர வேண்டும். இந்த அலுவலகம் ஒருங்கிணைந்த அலுவலகமாய் அமைதல் வேண்டும்.

66. தமிழ்நாட்டின் நிர்வாகமான சட்டம் இயற்றுதல், நிர்வாகம், நிதி வழங்குதல் என மூன்று துறை களுக்கும் தனித்தனி வளாகம் அமைப்பு இருந்திடல் வேண்டும். அதுவே ஜனநாயக நாட்டில் உள்ள அமைப்பாகும். ஆனால் தமிழ்நாட்டில் 1918 ஆம் ஆண்டிலிருந்து சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் ஒன்றாகவே இணைந்து ஒரே வளாகத்தில் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டின் சட்டமன்றக் கட்டிடம் மற்றும் நிர்வாக கட்டிடம் தனித்தனி வளாகமாக அமைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி அலுவலகங்கள், ஆளுகட்சி, எதிர்க்கட்சி அலுவலகங்கள் மற்றும் அது தொடர்பான அனைத்துப் பணிகளும் சட்டமன்ற வளாகத்தில் அமைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

67. தென் தமிழ்நாட்டை மேம்படுத்த அனைத்து வசதிகளுடன் கூடிய ‘குளச்சல்’ துறைமுகத்தை உருவாக்க வேண்டும்.

68. கோவை, உதகை, திருப்பூர் , ஈரோடு, கரூர், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்காக கோவையில் உயர்நீதிமன்றக் கிளை தொடங்கிட வேண்டும்.

69. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என அனைத்துத் தமிழ்நாட்டின் ஆட்சி மொழியான தமிழ்மொழியினை ஒரு பாடமாக எடுத்துப் படிக்க உரிய சட்டம் கொண்டு வர வேண்டும்.

70. ஒன்றிய அரசுப் பல்கலைக்கழகங்களில் கல்வி அறிஞர்களை வேந்தர்களாக நியமிப்பதுபோல் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஆளுநருக்குப் பதிலாக கல்வி அறிஞர்களை வேந்தராக நியமித்திட வேண்டும்.

71. ஒன்றிய அரசுப் பல்கலைக்கழகங்களில் ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சரகமே துணை வேந்தரை நியமிப்பது போல் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் மாநில அமைச்சரவையே துணை வேந்தரை நியமிக்கச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

72. தமிழ்நாட்டின் உள்ள அனைத்து பொது பல்கலைக்கழக வளாகத்தில் சட்டம், மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் என அனைத்து துறைகளையும் உருவாக்க உயர்கல்விக்கான உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். (பெரும்பாலும் ஒவ்வொரு வளாகத்திலும் 1000 ஏக்கர் உள்ளது. பல்கலைக்கழகம் எந்த துறையை வேண்டுமானாலும் தொடங்கலாம் என சட்டம் உள்ளது).

73. தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், சட்டம் என அனைத்து துறைகளையும் உருவாக்கி தமிழில் பாடம் சொல்லித் தர ஏற்பாடு செய்திட வேண்டும்.

74. துணைவேந்தர்கள் எந்த ஓர் பணிக்காகவும், கோப்புகளை இணைவேந்தர் வழியாக முறைப்படி அனுப்ப வேண்டும் என சட்டத்திருத்தம் கொண்டு வர வேண்டும்.

75. அரசு வாரியங்களில் துறை சார்ந்த செயலாளர்களே பகுதி நேர இயக்குநர்களாக நியமிக்காமல், சட்டத்தின்படி தன்னாட்சி இயக்குநர்களாக வல்லுநர்களை நியமிக்க வேண்டும். ஒருபோதும் அரசு செயலாளர்கள் தங்களுக்கு கீழ் இயங்கும் வாரியங்கள்/தன்னாட்சி அமைப்புகளில் இயக்குநர்களாகவோ உறுப்பினர்களாகவோ இருக்கக் கூடாது. அப்போதுதான் எடுக்கக் கூடிய முடிவுகள் ஆக்கப்பூர்வமாகவும் புதிய சிந்தனை கொண்டதாக அமையும். இதைதான் கம்பெனிகள் சட்டமும் கூறுகிறது.

76. அனைத்து கிராமங்களில் உள்ள சுடுகாடு, இடுகாடுகளில் சடலங்களை எடுத்து செல்ல பாதை அடைத்து தர வேண்டும்.

77. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு ஈமச் சடங்கை நடத்திட அரசே தனி அமைப்பினை உருவாக்க வேண்டும்.

78. சாலை நடைப்பாதை நடப்பவர்களுக்கே சொந்தம். எனவே அந்த நடைபாதையில் அரசு நிறுவனங்களோ தனியாரோ மின் வாரியமோ தொலைபேசித் துறையோ போக்குவரத்து துறையோ பால் கடையோ வேறு எந்த வித கடைகளோ அமைத்தல் சட்டப்படி குற்றம் என அறிவிக்க வேண்டும்.

80. உலகத் தமிழர் ஆராய்ச்சி நிறுவனத்தை மாநில ஆராய்ச்சிப் பல்கலைக்கழகமாக உயர்த்திட வேண்டும்.

81. தமிழ் இணையக் கல்வி கழகத்தை (Tamil Virtual Academy) கூட்டுறவுச் சட்டத்தில் பதிவு செய்ததை மாற்றி அரசின் தன்னாட்சி நிறுவனமாக உயர்த்த வேண்டும்.

82. பல்கலைக்கழகங்களின் தன்னாட்சியில் அரசோ, ஆளுநரோ தலையிடாவண்ணம் கல்வி பணி நடைபெறவும் சிண்டிகேட் தன் அவர்களோ முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பு எனவும் சட்டம் கொண்டு வர வேண்டும்.

– ஆசிரியர்

# அதிகாரியின் நியமன உத்தரவை நீண்ட காலமாகத் தடுத்ததற்காக மத்திய அரசுக்கு 5 லட்சம் ரூபாய் அபராதம்

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.விக்ரம் நாத்**
**மாண்புமிகு நீதிபதி திரு.சந்தீப் மேத்தா**
**நீ.பே.(உ) எண் 1180/2025**
**நாள்: 30 ஜனவரி 2026**
**(2026 Livelaw (SC) 97)**

## தீர்ப்பு

1. விசாரணை செய்யப்பட்டது.

2. தற்போதைய வழக்கு, இலக்கு வைத்து ஒரு குறிப்பிட்ட துறைசார்ந்த பழிவாங்கும் நடவடிக்கை, தீய எண்ணம் கொண்ட செயல்கள் மற்றும் நீண்டகாலமாகத் தொடரும் துன்புறுத்தல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-வது பிரிவின் கீழ் இந்த நீதிமன்றத்தின் அசாதாரண அதிகார வரம்பைப் பயன்படுத்த மனுதாரரைத் தூண்டியுள்ளது.

3. இந்த மனுதாரர் இராணுவ நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட உடல் ஊனத்தின் காரணமாகப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் ஆயுதப்படை வீரர் ஆவார்.

4. பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் குடிமைப்பணித் தேர்வில் பங்குபெற்று வெற்றி பெற்றார். அவர் 1990-ஆம் ஆண்டில் பொதுப் பிரிவின் கீழ் இந்திய வருவாய்ப் பணிக்கு நியமிக்கப்பட்டார். 2012-ஆம் ஆண்டில் வருமான வரி ஆணையராக உயர் பதவிக்கு பதவி உயர்வு பெற்றது உட்பட, எவ்விதக் களங்கமும் இல்லாத சேவைப் பதிவைப் பெற்றிருந்த மனுதாரர், வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர் (கணக்காளர்) பதவிக்கு விண்ணப்பித்தார். இந்த நீதிமன்றத்தின் கௌரவமிக்க அமர்வு நீதிபதி தலைமையிலான தேடல் மற்றும் தேர்வுக் குழுவால் அவர் நேர்காணல் செய்யப்பட்டார். அந்தக் குழு மனுதாரரை மதிப்பீடு செய்து, அகில இந்திய தகுதிப் பட்டியலில் அவருக்கு முதலிடம் அளித்தது. மனுதாரரின் இந்த வெற்றி, எதிர்மனுதாரர்கள் தரப்பு அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. அதன் தொடர்ச்சியாக நடந்த நிகழ்வுகளே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-வது பிரிவின் கீழ் இந்த நீதிப்பேராணை கோரும் மனுவைத் தாக்கல் செய்ய வழிவகுத்தன.

5. தற்போதைய நீதிப்பேராணை கோரும் மனு, மற்றவற்றுடன் பின்வரும் நிவாரணங்களைக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது:-

i) SLP(C) No.22596/2017 மற்றும் M.A. 2557/2019 ஆகியவற்றில் 15.11.2017 மற்றும் 09.09.2020 தேதியிட்ட உத்தரவுகளின்படி, நான்கு வாரங்களுக்குள் மனுதாரரின் வழக்கை பரிசீலிக்க தேடல் மற்றும் தேர்வுக் குழுவை மறுசீரமைப்பு செய்ய ஒரு செயல்முறை அறிவுறுத்தும் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான நீதிப்பேராணை, உத்தரவு அல்லது வழிகாட்டலை வழங்க வேண்டும். அதன் மூலம் நியமன அதிகாரி அதன் பிறகு இரண்டு வாரங்களுக்குள் முடிவெடுக்க முடியும்.

ii) ஆண்டுகளுக்கு முன்பு தேடல் மற்றும் தேர்வுக் குழு-யால் (2013 அறிவிப்பு) பரிந்துரைக்கப்பட்டு, பின்னர் 3 தேடல் மற்றும் தேர்வுக் குழு-களை எதிர்கொண்ட மனுதாரருக்கு நீதி கிடைக்கும் வகையில், முழுமையான கோப்பை வரவழைத்து, இந்த மாண்புமிகு நீதிமன்றத்தின் 15.11.2017 தேதியிட்ட தீர்ப்பின்படி (S.L.P. Civil No.22596/2017) ஆவணக் கட்டுகளை கொணரச் செய்யும், செயலுறுத்தக் கோரும் அல்லது பொருத்தமான நீதிப்பேராணை வழங்க வேண்டும்.

**வழக்கின் பின்னணி**

6. இந்த விவகாரம் பல கட்ட வழக்குகளைக் கடந்து வந்த ஒரு சிக்கலான வரலாற்றைக் கொண்டு உள்ளது. எனவே அதன் உண்மைப் பின்னணியைச் சற்றே விரிவாகக் குறிப்பிடுவது அவசியமாகிறது. அதன்படி, இந்த நீதிப்பேராணை கோரும் மனுவைத் தீர்ப்பதற்குத் தேவையான தொடர்புடைய உண்மைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

அ. பணிப் பின்னணி மற்றும் ஆரம்பத் தேர்வு செயல்முறை

7. மனுதாரர் 1980–ஆம் ஆண்டில் இந்திய ராணுவத்தில் நிரந்தர அதிகாரியாக சேர்க்கப் பட்டார். ராணுவ நடவடிக்கைகளின் போது அவருக்கு ஏற்பட்ட உடல் ஊனத்தின் காரண மாக, அவர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதன்பிறகு, அவர் 1989–ல் குடிமைப்பணித் தேர்வில் தேர்ச்சி பெற்று, 1990–ஆம் ஆண்டு பொதுப் பிரிவின் கீழ் இந்திய வருவாய்ப் பணிக்கு நியமிக்கப்பட்டார். வருமான வரித் துறையில் பணியாற்றிய காலத்தில், அவர் பல்வேறு பதவிகளை வகித்தார். ஜனவரி 12, 2012 அன்று ஆணையர் பதவிக்கு பதவி உயர்வு பெற்றார். அவரது முழுப் பணிக் காலத்திலும் எந்தவிதக் களங்கமும் இல்லாத சேவைப் பதிவைப் பராமரித்து வந்தார்.

8. 2014–ஆம் ஆண்டில், மனுதாரர் வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர் (கணக்காளர்) பதவிக்கு விண்ணப்பித்தார். அப்போதைய கௌரவமிக்க நீதிபதி திரு. டி.எஸ். தாகூர் தலைமையில், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், சட்டச் செயலாளர் மற்றும் வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முன் நேர் காணலுக்கு அழைக்கப்பட்டார்.

9. அனைத்து வேட்பாளர்களையும் மதிப்பீடு செய்த பிறகு, தேடல் மற்றும் தேர்வுக் குழு மனு தாரருக்கு அகில இந்திய அளவில் முதலிடத்தை வழங்கியது. இருப்பினும், அந்தப் பரிந்துரையை மீறி, மனுதாரருக்கு எதிராக சில பாதகமான புலனாய்வுப் பிரிவு தகவல்கள் இருப்பதாகக் கூறி, அவருக்குப் பணி நியமனக் கடிதத்தை வழங்க எதிர்மனுதாரர்கள் மறுத்து விட்டனர். அந்தத் தகவல்கள் மனுதாரருக்கும் அவரது பிரிந்த மனைவிக்கும் இடையிலான வழக்கு தொடர்பானவை என்று கூறப்படுகிறது.

10. 2016–ஆம் ஆண்டில், மனுதாரர் இந்திய அரசின் இணைச் செயலாளராக நியமிக்கப் படுவதற்கு அமைச்சரவையின் நியமனக் குழு வால் தகுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

ஆ. பணி நியமனம் நிறுத்தி வைக்கப்பட்ட தால் எழுந்த வழக்குகள்

11. தேடல் மற்றும் தேர்வுக் குழுவால் தகுதிப் பட்டியலில் முதலிடம் அளிக்கப்பட்டும் முறை யான பணி நியமனக் கடிதம் வழங்கப்படாததால் அதிருப்தியடைந்த மனுதாரர், லக்னோவில் உள்ள மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தார் (OA No. 95 of 2016). இந்த வழக்கில் பிப்ரவரி 10, 2017 அன்று தீர்ப்பாயம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதில், கூறப்படும் உளவுத்துறை பணியக அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் தேடல் மற்றும் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரரின் பணி நியமனக் கோரிக்கையை அக்குழு இறுதி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட்டது.

12. அதனைத் தொடர்ந்து, மீண்டும் கூட்டப் பட்ட தேடல் மற்றும் தேர்வுக் குழு ஏப்ரல் 26, 2018 அன்று தனது கருத்தைப் பதிவு செய்தது. அதில், எதிர்மனுதாரர்கள் உருவாக்கிய தடை களை நிராகரித்ததுடன், வருமான வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினர் (கணக்காளர்) பதவிக்கு மனுதாரரின் தகுதியை மீண்டும் உறுதிப்படுத்தியது.

13. இதற்கிடையில், தீர்ப்பாயத்தின் 10 பிப்ரவரி 2017 தேதியிட்ட உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ கிளையில் மேல்முறையீடு செய்தனர் (WP No. 8648 of 2017). உயர்நீதிமன்றம் மே 30, 2017 அன்று அந்த மனுவைத் தள்ளுபடி செய்த துடன், தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மனுதாரரின் தகுதியை மறுபரிசீலனை

செய்யும் பணியை மூன்று மாதங்களுக்குள் முடிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தர விட்டது.

14. உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் இந்த நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர் (SLP (Civil) No. 22596 of 2017). அந்த மனு நவம்பர் 15, 2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதுடன், உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இ) கண்காணிப்பு, ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் கட்டாய ஓய்வு

15. 2017 நவம்பர் 29 அன்று, மனுதாரரின் அலுவலகத்தில் ஒரு கண்காணிப்பு ஆய்வு நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, எதிர்மனுதாரர்கள் 2018 ஜனவரி 31 அன்று மனுதாரருக்கு ஒரு விளக்கக் கடிதத்தை வழங்கினர். அதற்கு முன்னதாகவே, 2018 ஜனவரி 21 அன்று, மனுதாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கண்காணிப்புச் சான்றிதழ் நிறுத்தி வைக்கப்பட்டது. மனுதாரர் இவ்விரு நடவடிக்கைகளையும் எதிர்த்துத் தீர்ப்பாயத்தில் தனித்தனி மனுக்களைத் தாக்கல் செய்தார். தீர்ப்பாயம் தனது இடைக்கால உத்தரவில், இந்த விளக்கக் கடிதமானது வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினர் பதவிக்கான மனுதாரரின் பரிசீலனையைத் தடுக்கவோ அல்லது பாதிக்கவோ கூடாது என்று குறிப்பிட்டது. பின்னர் மே 4, 2018 அன்று வழங்கிய மற்றொரு இடைக்கால உத்தரவில், கண்காணிப்புச் சான்றிதழ் நிறுத்தி வைக்கப் பட்டதும் அத்தகைய நியமனத்திற்குத் தடையாக இருக்காது எனத் தீர்ப்பாயம் தெளிவுபடுத்தியது. தீர்ப்பாயத்தின் இந்த இடைக்கால நிவாரணத்தை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை (SLP), 2019 மார்ச் 29 அன்று உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

16. இடைப்பட்ட காலத்தில், ஏப்ரல் 11, 2018 அன்று, துறையால் பராமரிக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய நேர்மை கொண்ட அதிகாரிகள் பட்டியலான 'அக்ரீட் லிஸ்ட்'-ல் மனுதாரரின் பெயர் சேர்க்கப்பட்டது. இதனை எதிர்த்து மனுதாரர் மூன்றாவது முறையாகத் தீர்ப்பாயத்தை அணுகியபோது, அவருக்கு ஆதரவாக இடைக் கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இறுதியில், மார்ச் 6, 2019 அன்று வழங்கிய பொதுவான தீர்ப்பின் மூலம், மனுதாரரின் பெயரை அந்தப் பட்டியலில் சேர்த்ததையும், அவருக்கு கண்காணிப்புச் சான்றிதழ் மறுக்கப்பட்டதையும் தீர்ப்பாயம் ரத்து செய்தது. மேலும், மனுதாரரின் பெயரை வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய உறுப்பினர் பதவிக்கு நியமிக்க தகுதியான அதிகாரியிடம் பரிந்துரைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. ஆனால், எதிர்மனுதாரர்கள் பிடிவாதமாக இந்தத் தீர்ப்பை அமல்படுத்தாமல் மீண்டும் உயர்நீதிமன்றத்தை அணுகினர். அந்தத் தீர்ப்புக்கு உயர்நீதிமன்றம் எவ்வித இடைக்காலத் தடையும் விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

17. உயர்நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தின் உத்தரவுகள் தொடர்ந்து மதிக்கப்படாததால், மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளைத் தொடர்ந்தார். மனுதாரரின் பெயரை இரண்டு வாரங்களுக்குள் நியமன அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் என்ற உத்தரவை எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றத் தவறினர். கால அவகாசம் கோரி அவர்கள் தாக்கல் செய்த மனுவையும் தீர்ப்பாயம் நிராகரித்தது. ஆகஸ்ட் 13, 2019 அன்று உயர் நீதிமன்றம், அப்போதைய மத்திய நேரடி வரிகள் வாரிய தலைவரை இந்த வழக்கில் ஒரு தரப்பாகச் சேர்க்க அனுமதித்ததுடன், நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது.

18. நீதிமன்றத்தில் இந்த விவகாரத்தைத் தவிர்ப்பதற்காக, மனுதாரரின் பெயரை நியமனக் குழுவிற்கு அனுப்பும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாகக் கூறி எதிர்மனுதாரர்கள் வாய்தாக்களைப் பெற்றனர். இறுதியில், 2019 மே 31 அன்று அவர்களுக்கு இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டு, ஜூலை 9-க்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

19. இந்த இடைப்பட்ட காலத்தில், 2019 ஜூன் 17 அன்று மனுதாரருக்கு எதிராக ஒரு

குற்றச்சாட்டு குறிப்பாணையை வழங்கிய எதிர் மனுதாரர்கள், 2019 ஜூலை 1 அன்று அவரைப் பணி இடைநீக்கம் செய்தனர்

20. 2019 ஜூலை மாதம், மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய துறைசார் பதவி உயர்வுக் குழு, மனுதாரரை முதன்மை ஆணையர் பதவிக்கு உயர்த்துவது குறித்துப் பரிசீலித்தது. இருப்பினும், நிலுவையில் இருந்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் காரணம் காட்டி, மனுதாரர் தொடர்பான முடிவு 'மூடி முத்திரை வைக்கப்பட்ட உறையில்' வைக்கப்பட்டது. இதற் கிடையில், குற்றச்சாட்டு குறிப்பாணையை எதிர்த்து மனுதாரர் தாக்கல் செய்த மனுவில் அவருக்கு இடைக்காலப் பாதுகாப்பு கிடைத்தது.

21. மேற்கண்ட வழக்குகள் நிலுவையில் இருந்தபோதே, மனுதாரர் 2020 ஜனவரியில் ஓய்வு பெறவிருந்த நிலையில், அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே (செப்டம்பர் 27, 2019), அடிப்படை விதிகளின் 56(j) பிரிவைப் பயன்படுத்தி அவரைத் துறையிலிருந்து கட்டாய ஓய்வு பெறச் செய்தனர். இதனால் நவம்பரில் வெளியான பதவி உயர்வுப் பட்டியலில் அவர் பெயர் இடம்பெறவில்லை.

22. தீர்ப்பாயத்தின் உத்தரவை நிறை வேற்றுவது போன்ற ஒரு போலித் தோற்றத்தை ஏற்படுத்த, பணியாளர் மற்றும் பயிற்சித் துறை, 2019 செப்டம்பர் 9 அன்று ஓர் அலுவலகக் குறிப்பாணையை வெளியிட்டது. அதில், மனு தாரரின் வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயப் பணிக்கான நியமனக் கோப்பை மீண்டும் தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முன் வைக்க உத்தரவிடப்பட்டது.

23. 2020 ஜனவரி 9 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவில், ஆகஸ்ட் 29, 2014-க்குப் பிறகு உருவான புதிய ஆதாரங்கள் உட்பட அனைத்துத் தகவல்களையும், மனு தாரரின் தகுதியை முடிவு செய்ய தேடல் மற்றும் தேர்வுக் குழு பரிசீலிக்கலாம் என்று குறிப்பிட்டது.

24. எதிர்மனுதாரர்களின் இத்தகைய நடவடிக்கைகளைச் சட்டப்படி எதிர்க்க மனு தாரருக்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது.

25. இதன்பின்னர், மனுதாரர் மூன்றாவது முறையாக தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முன் தோன்றினார். ஆனால், மனுதாரருக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் கட்டாய ஓய்வு குறித்த நீதிமன்ற விசாரணைகள் முடியும் வரை அவரது தகுதியைப் பரிசீலிப்பதை அக்குழு ஒத்திவைத்தது.

ஈ) ஒழுங்கு நடவடிக்கை மற்றும் அதன் தொடர்ச்சியான நடைமுறைகள் மீதான நீதிமன்ற ஆய்வு.

26. செப்டம்பர் 27, 2019 தேதியிட்ட கட்டாய ஓய்வு உத்தரவையும், அந்த நடவடிக்கையில் தலையிட மறுத்து 2 ஜனவரி 2020 அன்று முறையீட்டுக் குழு பிறப்பித்த உத்தரவையும் எதிர்த்து, மனுதாரர் டெல்லியில் உள்ள மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வில் (OA No.703 of 2020) வழக்குத் தொடர்ந்தார். அந்த மனு 9 டிசம்பர் 2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை உயர்நீதிமன்றமும் 31 மே 2022 அன்று உறுதி செய்தது.

27. உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பை எதிர்த்து, மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் (உச்ச நீதிமன்றம்) மேல்முறையீடு (C.A. No. 6161 of 2022) செய்தார். அந்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம், 3 மார்ச் 2023 அன்று வழங்கிய தீர்ப்பில், எதிர்மனு தாரர்களின் செயல்பாடுகள் குறித்து மிகக் கடுமையான கண்டனங்களைப் பதிவு செய்தது. அதன் முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:

'36. மனுதாரருக்கு ஆதரவாகத் தீர்ப்பாயமும் உயர்நீதிமன்றமும் தொடர்ச்சியான உத்தரவு களைப் பிறப்பித்த நிலையிலும், அவருக்கு கண்காணிப்புச் சான்றிதழை வழங்காமல் இழுத்தடிக்க எதிர்மனுதாரர்கள் முடிவு செய்தனர். இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர வேண்டிய நிலைக்கு மனுதாரர் தள்ளப்பட்டார். உயர் நீதிமன்றமும் தீர்ப்பாயமும் நீதிமன்ற உத்தரவு களை வேண்டுமென்றே மீறியதற்காக அதிகாரி களுக்கு நோட்டீஸ் அனுப்பின. உயர்நீதிமன்ற விசாரணையின் போது, ஒருபுறம் 31 மே 2019 வரை கால அவகாசம் கோரி மனுதாரரின்

பெயரை நியமனக் குழுவிற்கு அனுப்புவதாகக் கூறிக்கொண்டே, மறுபுறம் 17 ஜுன் 2019 அன்று அவருக்கு ஒரு குற்றச்சாட்டு குறிப்பாணையை வழங்கி, 1 ஜுலை 2019 அன்று அவரைப் பணி இடைநீக்கம் செய்தனர்.'

'37. மனுதாரருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகளைத் தர்க்கரீதியான முடிவுக்குக் கொண்டு செல்லாமல், திடீரென அவரை கட்டாய ஓய்வில் அனுப்பியதால், அக்குற்றச்சாட்டு களுக்குள் ஆழமாகச் செல்ல இந்த நீதிமன்றம் விரும்பவில்லை. இருப்பினும், மேலோட்டமாகப் பார்க்கும்போது அக்குற்றச்சாட்டுகள் – மனைவி யுடனான குடும்பத் தகராறு அதாவது ஒரு குடியிருப்பு மனை வாங்கியது, மற்றும் அவர் மீது மனைவி சுமத்திய இருதார மணம் தொடர்பானவை. ஆனால், ஆவணங்களின்படி அந்த மனை மனுதாரரால் வாங்கப்படவில்லை, அவரது சகோதரரால் வாங்கப்பட்டது என்பது தெளிவாகிறது. மேலும் குடும்பத் தகராறு விவாகரத்து மூலம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதையும், அந்தப் புகார்கள் நிரூபிக்கப்பட வில்லை என்பதையும் 15 ஜுலை 2015 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணையின் மூலம் எதிர்மனுதாரர்களே அறிந்திருந்தனர். மூன்றாவது குற்றச்சாட்டான அனுமதி இன்றி நீதிமன்றம் சென்றது என்பதும் வலுவற்றது. 17 ஜுலை 2019–ல் தொடங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை களை, மூன்றே மாதங்களில் (27 செப்டம்பர் 2019) கட்டாய ஓய்வு உத்தரவு மூலம் எதிர் மனுதாரர்களே கைவிட்டுள்ளனர்.'

''38. ... சட்டத்தின் ஆட்சி என்பது ஒரு சிறந்த சமூகத்தின் அடிப்படை. நிர்வாக அமைப்பில் பழி வாங்கும் உணர்வோ அல்லது தீய எண்ணமோ இருந்தால் அது சமூக ஒழுங்கின் அஸ்திவாரத்தையே தகர்த்துவிடும். அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்துவது தொடர்பான சட்டங்கள் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சட்ட வரம்புகளை மீறியோ அல்லது தனிப்பட்ட உள்நோக்கத்துடனோ எடுக்கப்படும் எந்தவொரு தன்னிச்சையான நடவடிக்கையும் நீதிமன்ற ஆய்வின் முன் நிற்க முடியாது, அவை ரத்து செய்யப்பட வேண்டும்.''

''39.... ஆவணங்களைப் பரிசீலித்ததில் மனுதாரரின் வாதங்களில் உண்மை இருப்பதை நாங்கள் காண்கிறோம். அடிப்படை விதி 56(j)–ன் கீழ் ஒரு அரசு ஊழியரைப் பொது நலன் கருதி ஓய்வு பெறச் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு அதிகாரம் இருந்தாலும், மனுதாரருக்கு 50 வயது முடிந்த பிறகு எந்தக் காலத்திலும் எடுக்காத இந்த முடிவை, அவரது பணிக் காலத்தின் இறுதி மூன்று மாதங்களில் எடுத்தது ஏன்? ஜுலை 2019 வரை மனுதாரருக்கு 'மிகச்சிறந்தவர்' என்று தரவரிசை வழங்கி, அவரது நேர்மை 'சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது' எனச் சான்றளித்த எதிர்மனுதாரர்கள், அடுத்த மூன்றே மாதங்களில் தலைகீழாக மாறி அவரை கட்டாய ஓய்வில் அனுப்பியது ஏன் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. 10–க்கு 9 மதிப்பெண்கள் பெற்ற ஒரு அதிகாரியை, அவர் ஓய்வு பெற இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில், பொது நலன் என்ற போர்வையில் கட்டாய ஓய்வில் அனுப்பியது செல்லாது. இந்த உத்தரவு தண்டனை வழங்கும் நோக்கம் கொண்டது மற்றும் நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகளைச் குறுக்கு வழியில் முடித்து அவரை உடனடியாகப் பணியிலிருந்து நீக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும். இது பொது நலனுக் கான சோதனை சார்ந்தது அல்ல.''

அடிப்படை யில், 31 மே 2022 தேதியிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பைத் ரத்து செய்வது என்றும், மனுதாரரைக் கட்டாய ஓய்வில் அனுப்பிய 27 செப்டம்பர் 2019 தேதியிட்ட எதிர் மனுதாரர்களின் உத்தரவைத் தள்ளுபடி செய்வது என்றும் தீர்மானிக்கப்படுகிறது. இதன் விளைவாக, மனுதாரர் மீது விதிக்கப்பட்ட கட்டாய ஓய்வு உத்தரவினால் ஏற்பட்ட அனைத்துப் பாதகமான விளைவுகளும் ரத்து செய்யப்படுகின்றன. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, மேற்கண்ட நிபந்தனை களுடன் தீர்வு காணப்படுகிறது. இரு தரப்பினரும் தத்தமது வழக்கிற்கான செலவு களைத் தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

28. 15 மார்ச் 2024 அன்று, எதிர்மனு தாரர்கள் வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினர்களை நான்கு ஆண்டு

காலத்திற்கு நியமிக்க விண்ணப்பங்களைக் கோரி புதிய அறிவிப்பை வெளியிட்டனர். மனுதாரர், இந்த நீதிமன்றம் 3 மார்ச் 2023 அன்று வழங்கிய தீர்ப்பை அமல்படுத்தக் கோரி வருவாய்த் துறை செயலாளரிடம் பலமுறை முறையிட்டார். இருப்பினும், எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. இத்தகையச் சூழலில், 'கேப்டன் பிரமோத் குமார் பஜாஜ் –எதிர்– XXX மற்றும் பலர்' என்ற தலைப்பில் நீதிமன்ற அவமதிப்பு மனுவை (Cont.P (Civil) No. 210 of 2024) இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மனுதாரர் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

29. 29 ஜூலை 2024 தேதியிட்ட உத்தரவின் மூலம், நீதிமன்றத் தீர்ப்பை வேண்டுமென்றே அவமதித்ததற்காக அப்போதைய வருவாய்த் துறைச் செயலாளரை ('அந்த அதிகாரி') நேரில் முன்னிலையாக இந்த நீதிமன்றம் உத்தர விட்டது. அந்த அதிகாரி இந்த அவமதிப்பு நடவடிக்கையில் நிபந்தனையற்ற எழுத்துப்பூர்வ மன்னிப்புக் கோரினார். 5 ஆகஸ்ட் 2024 தேதியிட்ட உத்தரவில், மனுதாரருக்குச் சேர வேண்டிய அனைத்துப் பலன்களையும் 15 ஆகஸ்ட் 2024–க்குள் வழங்க எதிர்மனு தாரர்களுக்கு இந்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

30. இதற்கிடையில், 2 ஆகஸ்ட் 2024 அன்று மத்திய நேரடி வரிகள் வாரியம் மனு தாரருக்கு வழங்கப்பட்டிருந்த குற்றச்சாட்டு குறிப்பாணையைத் தானாகவே முன்வந்து ரத்து செய்தது.

31. இருப்பினும், மனுதாரரை வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய உறுப்பினராக (கணக்காளர்) நியமிப்பதற்கான எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. மாறாக, பரிந்துரைக்கப் பட்ட நடைமுறையின்படி, இந்த நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதி தலைமையிலான நான்காவது முறையாக மறுசீரமைக்கப்பட்ட தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முன் தோன்றுமாறு மனுதாரர் மீண்டும் அழைக்கப்பட்டார்.

உ. நான்காவது தேடல் மற்றும் தேர்வுக் குழு மற்றும் தற்போதைய நீதிப்பேராணை கோரும் மனு

32. 1 செப்டம்பர் 2024 அன்று நடைபெற்ற நான்காவது தேடல் மற்றும் தேர்வுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மனுதாரர், ஒரு விஷயத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். மனுதாரரின் நீண்டகாலப் போராட்டத்தைத் தடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவரும், மனு தாரரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர் கொண்டவருமான 'அந்த அதிகாரி', அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டி ருந்தார்.

33. அதன் பிறகு, நவம்பர் 2025–ல் தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகளின்படி, அக்குழு வால் மனுதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டது.

34. 1 செப்டம்பர் 2024 தேதியிட்ட தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முடிவுகளால் (இதை மனுதாரர் நவம்பர் 2025–ல் பெற்றார்) அதிருப்தி யடைந்த மனுதாரர், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 32–வது பிரிவின் கீழ் இந்த நீதிப் பேராணை கோரும் மனுவைத் தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

35. 2 டிசம்பர் 2025 அன்று எதிர்மனுதாரர் களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. 16 டிசம்பர் 2025 அன்று இந்திய ஒன்றிய அரசின் சார்பில் வழக்கறிஞர் ஆஜராகி, விளக்கம் பெறவும் பதில் மனு தாக்கல் செய்யவும் இரண்டு வார கால அவகாசம் கோரினார். மனுதாரரை இப்போ தாவது வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினராக நியமிக்கப் பரிசீலித்தால், அவருக்கு மிகக் குறுகிய பணிக்காலமே எஞ்சியிருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, மேற்கொண்டு கால அவகாசம் வழங்கப்படாது என்று அன்றைய தினமே தெளிவுபடுத்தப்பட்டது. நோட்டீஸ் அனுப்பப்பட்டு வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், 15 ஜனவரி 2026 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படவோ அல்லது எவரும் ஆஜராகவோ இல்லை. அதன் படி, நேரில் ஆஜரான மனுதாரரின் வாதங்களைக் கேட்டறிந்ததோடு, ஆவணங்களை யும் நாங்கள் கவனமாகப் பரிசீலித்தோம்.

**விவாதம் மற்றும் பகுப்பாய்வு**

36. மேலே குறிப்பிடப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, எதிர்மனுதாரர்கள் ஒவ்வொரு நிலையிலும் திட்டமிட்டு மனுதாரருக்குத் தடைகளை உருவாக்கியுள்ளனர். ஒன்று சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது அல்லது பல்வேறு நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் பிறப்பித்த உத்தரவுகளை மதிக்கத் தவறுவது எனச் செயல்பட்டுள்ளனர். இந்த வழக்கிலும் கூட, இந்த நீதிமன்றத்தின் நேரடி உத்தரவு இருந்தபோதிலும் பதில் மனு தாக்கல் செய்யாமல் காலம் கடத்தியது. அவர்களின் அலட்சியத்தைக் காட்டுகிறது. மனுதாரர் 70 வயதை நெருங்கி வருவதால் (பதவிக்கான அதிகபட்ச வயது வரம்பு), அவருக்கு எஞ்சியிருக்கும் மிகக் குறுகிய கால வாய்ப்பையும் தட்டிப்பறிக்க வேண்டும் என்பதே துறை அதிகாரிகளின் எண்ணமாக இருந்துள்ளது.

37. மனுதாரர் தனது மனுவில், துறை அதிகாரிகள் தன் மீது தனிப்பட்ட பழிவாங்கும் உணர்வுடனும், தீய எண்ணத்துடனும் செயல்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். 2014-ல் தகுதிப் பட்டியலில் முதலிடம் பெற்றும், வேண்டுமென்றே தடைகள் உருவாக்கப்பட்டன. அது மட்டுமின்றி, அவரது கறையற்ற பணியைக் கட்டாய ஓய்வு மூலம் முடிவுக்குக் கொண்டு வர முயன்றனர் (அதை இந்த நீதிமன்றம் ஏற்கனவே ரத்து செய்துவிட்டது). இந்த 'சார்புநிலை' மற்றும் 'பழிவாங்கும் போக்கு' குறித்த மனுதாரரின் வாதங்களை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை. ஏனெனில் அவர்கள் எவ்விதப் பதில் மனுவையும் தாக்கல் செய்யவில்லை.

38. நான்காவது தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவர், ஏற்கனவே மனுதாரரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எதிர்மனுதாரராகச் சேர்க்கப்பட்ட அதே 'அதிகாரி' ஆவார். அந்த அதிகாரி தன் மீது கொண்ட முன்விரோதத்தால் பாரபட்சமாகச் செயல்பட்டார் என்று மனுதாரர் வாதிட்டார்.

39. தேடல் மற்றும் தேர்வுக் குழுவின் முடிவுகள் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எடுக்கப்படுபவை என்பதால், அந்த அதிகாரி குழுவில் இருந்தது செயல்முறையின் நேர்மை குறித்த நியாயமான சந்தேகத்தை எழுப்புகிறது. முந்தைய இரண்டு தேடல் மற்றும் தேர்வுக் குழுக்கள் மனுதாரரைப் பரிந்துரைத்த நிலையில், இந்த முறை நிராகரிக்கப்பட்டிருப்பது, அந்த அதிகாரியின் பங்களிப்பால் 'சார்புநிலை' இருந்திருக்கலாம் என்ற மனுதாரரின் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது என்று வாதிடப்பட்டது.

40. ஆவணங்களையும், 3 மார்ச் 2023 தேதியிட்ட இந்த நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பையும் பரிசீலித்ததில், மனுதாரருக்குக் கடுமையான அநீதி இழைக்கப்பட்டிருப்பதை நாங்கள் உணர்கிறோம். ஐ.ஆர்.எஸ் அதிகாரியாகப் பதவி உயர்வுகள் பெற்று வந்தவரை, சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மூலம் முடக்க முயன்றுள்ளனர். அந்தக் குற்றச்சாட்டுகள் இறுதியில் கைவிடப்பட்டன. இருப்பினும், அதைக் காரணமாகக் கொண்டு அவரை கட்டாய ஓய்வில் அனுப்பியது அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தீய எண்ணம் கொண்டது என்று இந்த நீதிமன்றம் ஏற்கனவே பதிவு செய்துள்ளது.

41. அந்த அதிகாரி தற்போது ஒரு முக்கியமான பதவியில் இருப்பதால், அவரது பங்களிப்பு குறித்து நாங்கள் கருத்து கூற விரும்பவில்லை. இருப்பினும், அவரை தேடல் மற்றும் தேர்வுக் குழுவில் உறுப்பினராகச் சேர்த்தது, இயற்கை நீதிக்கு எதிரானது. மனுதாரருடன் ஏற்கனவே சட்டப் போராட்டத்தில் இருந்த ஒரு அதிகாரி, அவரைத் தேர்வு செய்யும் குழுவில் இருப்பது, நடுநிலையான விசாரணை நடக்குமா என்ற அச்சத்தை உருவாக்குகிறது. அவர் குழுவின் ஒரு உறுப்பினர் மட்டுமே என்றாலும், ஒரு அவமதிப்பு வழக்கின் பிரதிவாதி அதே வழக்காடியைத் தேர்வு செய்யும் பணியில் இருப்பது சட்டப்படி நியாயமற்றது.

**சார்புநிலை கோட்பாடு**

42. இது தொடர்பாக, குஜராத் அரசு -எதிர்- ஆர்.ஏ.மேத்தா (2013) வழக்கில் இந்த நீதிமன்றம் கூறியுள்ள பின்வரும் கருத்துக்கள் முக்கியமானவை:

58. சார்புநிலை என்பது ஒரு அதிகாரியின் அல்லது நீதிபதியின் மனதில் இருக்கும் முன்கூட்டிய எண்ணங்கள் ஆகும். அத்தகைய சூழலில் ஒரு நேர்மையான விசாரணையை எதிர்பார்க்க முடியாது. ஒரு நீதிபதி அல்லது

அதிகாரி தனிப்பட்ட உணர்வுகளுக்கு அப்பாற் பட்டுச் சிந்திக்க வேண்டும். சார்புநிலை குறித்த அச்சம் நியாயமானதாக இருக்க வேண்டும். 'எவரும் தனது சொந்த வழக்கில் நீதிபதியாக இருக்க முடியாது' என்ற சட்ட முதுமொழியில் இருந்தே இந்தக் கோட்பாடு பிறக்கிறது. உண்மை யான சார்புநிலை இருக்கிறதோ இல்லையோ, ஒரு சராசரி மனிதனின் பார்வையில் அங்கு பாரபட்சம் நடக்க வாய்ப்புள்ளது என்று தோன்றினால் மட்டுமே போதும், அந்த நடவடிக்கை செல்லாததாகிவிடும்.

59. பாரபட்சம் நடந்ததற்கான நேரடி ஆதாரம் இருந்தால் வழக்கு இன்னும் வலிமையாகும். ஆனால் நேரடி ஆதாரம் என்பது கட்டாய நிபந்தனையல்ல. சம்பந்தப்பட்ட நபரின் மனதில் எழும் அச்சம் நியாயமானதா என்பதே முக்கியம். அத்தகைய அச்சம் இருக்கும் பட்சத்தில், அந்தத் தீர்ப்போ அல்லது உத்தரவோ அதன் நடுநிலைத் தன்மையை இழந்து வலுவற்றதாகிவிடும்.

60. இது போன்ற சிக்கல்களை முடிவு செய்யும்போது, நீதிமன்றம் பொதுமக்களின் பார்வையில் இருந்து அந்த விவகாரத்தைப் பார்க்க வேண்டும். சார்புநிலை இருக்கிறதா என்பதை அந்தச் சூழலின் அடிப்படையில் புறநிலையாக ஆராய வேண்டும்.

இந்த நீதிமன்றத்தின் மேற்கண்ட அவதானிப்புகள் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துகின்றன: ஒரு தேர்வு அல்லது தீர்ப்பு வழங்கும் அதிகாரி நேர்மையாகச் செயல்படுவது மட்டும் போதாது, அவர் நேர்மையாகச் செயல்படுவது வெளியே தெரியவும் வேண்டும். மதிப்பீடு செய்யும் பணி யில் இருப்பவருக்குத் தனிப்பட்ட தொடர்போ, முந்தைய முன்விரோதமோ இருந்தால், அங்கு சார்புநிலை கோட்பாடு பொருந்தும். இது ஒருதலைப்பட்சமான முடிவுகளைத் தவிர்க்க உதவுவது மட்டுமல்லாமல், நிர்வாகத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவும் அவசியம்.

43. அலகாபாத் உயர் நீதிமன்றம் சைல்ஜா ஸ்ரீவஸ்தவா –எதிர்– பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் (1992) என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பை நாம் இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்:

'15. தேர்வுக்குழு மற்றும் மத்திய குறைதீர்ப்பு வாரியத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள தாக மனுதாரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். மனுதாரர்களின் முக்கியக் குற்றச்சாட்டுகள் 4–வது எதிர்மனுதாரருக்கு எதிராகவே இருந்தன. அவ்வாறிருக்கையில், 4–வது எதிர்மனுதாரர் அதே குறைதீர்ப்பு வாரியத்தில் உறுப்பினராக இருந்தது அந்த வாரியத்தின் நடவடிக்கைகளை முற்றிலும் செல்லாததாக்குகிறது. நீதி வழங்கப் படுவது மட்டும் போதாது. அது வழங்கப்படுவது வெளிப்படையாகத் தெரியவும் வேண்டும் என்பது நிர்வாகச் சட்டத்தின் நன்கு நிறுவப்பட்ட கொள்கையாகும். தனக்கு எதிரான புகார்கள் இருக்கும்போது, அந்த அதிகாரி அந்தத் தேர்வு நடைமுறையிலிருந்து தன்னைத் தற்காப்பு கருதி விலக்கிக்கொண்டிருக்க வேண்டும்.

16. ஏ.கே. கிரைபக் –எதிர்– இந்திய ஒன்றியம் (1969) வழக்கில், ஒரு தேர்வு வாரியத்தின் உறுப்பினரே அந்தத் தேர்வில் ஒரு வேட்பாளராக இருந்தால், அது அந்த வாரியத்தின் முழு நடவடிக்கையையும் பாதிக்கும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த அதிகாரி மற்ற உறுப்பினர்களின் முடிவில் தலையிடவில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்தாலும், நீதிமன்றம் அதை ஏற்கவில்லை. 'ஒரு குழு விவாதத்தில், ஒவ்வொரு உறுப்பினரும் மற்றவர் மீது செல்வாக்கு செலுத்துவது இயல்பு; குறிப்பாக அந்த உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவராக இருந்தால், அவரது சார்புநிலை நுட்பமான முறையில் மற்றவர்களின் முடிவைப் பாதிக்கும்' என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

17. ஜி. சரணா –எதிர்– லக்னோ பல்கலைக் கழகம் (1976) வழக்கில், 'ஒரு நபர் சார்புநிலை யுடன் செயல்பட வாய்ப்புள்ளது என்று நம்புவ தற்கு நியாயமான காரணங்கள் உள்ளனவா என்பதே முக்கியம்' என்று கூறப்பட்டது. குழு முடிவுகளில் உறுப்பினர்கள் கணினிகளைப் போலச் செயல்படுவதில்லை. மனித இயல்பின் படி ஒருவரின் கருத்து மற்றவரைப் பாதிக்கும்.

18. ஜே. மஹாபாத்ரா – கோ –எதிர்– ஒடிசா மாநிலம் (1984) வழக்கில், பள்ளி மற்றும்

கல்லூரி நூலகங்களுக்கான புத்தகங்களைத் தேர்வு செய்யும் குழுவில், தேர்வுக்காகச் சமர்ப்பிக்கப் பட்ட புத்தகங்களின் ஆசிரியரே உறுப்பினராக இருந்தது அந்தத் தேர்வு முறையையே செல்லாத தாக்கியது.

19. கே. செல்லையா –எதிர்– தலைவர் (1973) வழக்கில், மனுதாரரைப் பணிநீக்கம் செய்த அதே தலைவர், அந்தப் பணிநீக்கத்திற்கு எதிரான மேல்முறையீட்டைப் பரிசீலித்த வாரியத்திலும் உறுப்பினராக இருந்தார். அந்த மேல்முறையீட்டு முடிவு செல்லாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

20. கீர்த்தி தேஷ்மங்கர் –எதிர்– இந்திய ஒன்றியம் (1991) வழக்கில், தேர்ந்தெடுக்கப் பட்ட வேட்பாளரின் மாமியார் தேர்வுக்குழுவில் இருந்தது அந்தத் தேர்வைச் செல்லாததாக்கியது. இதில் ‘உண்மையான சார்புநிலை’ இருப்பதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை; சார்பு நிலை இருப்பதற்கான ‘நியாயமான வாய்ப்பு’ இருந்தாலே போதும்.

21. ஹால்ஸ்பரி இங்கிலாந்து சட்டங்கள் தொகுப்பில், ‘நீதி வழங்கும் குழுவில் ஒருவருக்கு அந்த விவகாரத்தில் நேரடித் தொடர்பு அல்லது ஆதாயம் இருந்தால், மற்ற உறுப்பினர்களுக்கு அத்தகைய தொடர்பு இல்லா விட்டாலும், அந்த முழு நடவடிக்கையும் ரத்து செய்யப்படும். அந்த நபர் மற்றவர்களின் முடிவில் உண்மையில் செல்வாக்கு செலுத்தினாரா என்பதை நீதிமன்றம் ஆராய வேண்டியதில்லை’ என்று குறிப்பிடப் ட்டுள்ளது.

22. ரெக்ஸ் –எதிர்– பார்ன்ஸ்லி (1976) வழக்கில், ‘திரைக்குப் பின்னால் என்ன நடந்தது என்பது மனுதாரருக்குத் தெரியாது. தனக்கு எதிரான ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பது மட்டுமே அவருக்குத் தெரியும். எனவே, அவர் முன்வைக்கும் ஆட்சேபனைகளை ஒரு சாதாரண சிவில் வழக்கைப் போலக் குறுகிய நோக்கில் பார்க்கக் கூடாது’ என்று கூறப் பட்டுள்ளது.

23. மேற்கண்ட தீர்ப்புகளிலிருந்து, சார்பு நிலை விதி தொடர்பான பின்வரும் கோட்பாடுகள் உருவாகின்றன:

உண்மையான சார்புநிலையை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை:

பாரபட்சம் அல்லது சார்புநிலை இருப்பதற் கான ஒரு ‘நியாயமான அச்சம்’ இருந்தாலே அந்தத் தேர்வு நடைமுறையை ரத்து செய்ய அது போதுமானது. இயற்கை நீதிக் கோட்பாட்டின்படி, அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதற்கான நேரடி ஆதாரத்தை விட, வெளிப்புறத் தோற்றத்தில் அது நியாயமற்றதாகத் தெரிகிறதா என்பதே முக்கியம். ஒரு உறுப்பினர் தகுதி யற்றவர் என்றாலும் முழு நடைமுறையும் பாதிக்கும்: தேர்வுக் குழுவின் ஒரு உறுப்பினர் மட்டும் சார்புநிலை விதியின் கீழ் தகுதியற்றவராக இருந்தாலும், முழுத் தேர்வு முறையும் செல்லாத தாகிவிடும். ஏனெனில், அந்தத் தகுதியற்ற உறுப்பினர் மற்றவர்களின் முடிவில் எந்த அளவிற்குச் செல்வாக்கு செலுத்தினார் என்பதை அறிய முடியாது. தன்னை விடுவித்துக் கொள்ளுதல்: சார்புநிலை விதியால் தகுதியிழந்த நபர், அந்தத் தேர்வு நடைமுறையிலிருந்து தன்னைத் தானாகவே விலக்கிக்கொள்ள வேண்டும். பரிந்துரைக்கும் அமைப்பிற்கும் இது பொருந்தும்: ஒரு பரிந்துரை வழங்கும் அமைப்பின் உறுப்பினரிடம் சார்புநிலை இருந்தாலும், அந்த நடவடிக்கைகள் செல்லாத தாகும்.

44. சட்டத்தின் ஆட்சியே ஒரு சீரான சமூகத்தின் அடித்தளமாகும். பொதுப் பணிகளில் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சார்புநிலை அல்லது தீய எண்ணம், அந்தச் சமூக ஒழுங்கின் வேரையே அறுப்பதாகும். சட்டப்பூர்வ அல்லது நிர்வாக அதிகாரம் அதன் நோக்கத்திலிருந்து விலகி, தேவையற்ற காரணங்களால் அல்லது சட்டப்பூர்வ உள் நோக்கத்துடன் பயன்படுத்தப்பட்டால், அதை ஏற்க முடியாது. இத்தகையச் சூழலில், நீதிமன்ற ஆய்வு என்பது எடுக்கப்பட்ட முடிவை மட்டு மல்ல, அந்த முடிவு எடுக்கப்பட்ட ‘செயல் முறையையும்’ நோக்கியதாகும்.

45. மேலும், எதிர்மனுதாரர்கள் பதில் மனு தாக்கல் செய்யாததால், மனுதாரரின் குற்றச் சாட்டுகள் மறுக்கப்படாமல் உள்ளன. மனுதாரரின் விண்ணப்பத்தைப் பரிசீலித்தபோது, அனைத்து உண்மைகளும் தேடல் மற்றும் தேர்வுக்

குழுவின் (குஇகுஇ) முன் வைக்கப்பட்டிருக்காது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரரால் அந்த 'அதிகாரி' நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொண்டார் என்ற உண்மை அக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப் பட்டிருக்க வாய்ப்பில்லை. நேர்மையான முறையில் செயல்படவும், சார்புநிலை குறித்த அச்சத்தைப் போக்கவும், அந்த அதிகாரி மதிப்பீட்டு நடைமுறையிலிருந்து தானாகவே விலகியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியது, சார்புநிலை குறித்த சந்தேகத்தை உறுதிப் படுத்துகிறது.

**இறுதி உத்தரவு மற்றும் நிவாரணம்**

46. எனவே, 1 செப்டம்பர் 2024 அன்று நடைபெற்ற தேடல் மற்றும் தேர்வுக் குழுக் கூட்டத்தின் முடிவுகள் (மனுதாரரை வருமான வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாய உறுப்பினராகப் பரிந்துரைக்காத பகுதி மட்டும்) இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன. மனுதாரரின் விண்ணப்பத்தை மீண்டும் பரிசீலிக்க, இன்றைய தேதியிலிருந்து நான்கு வாரங் களுக்குள் புதிய தேடல் மற்றும் தேர்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதை (மனுதாரர் 1) உறுதி செய்ய வேண்டும். அந்தப் புதிய குழுவில் சர்ச்சைக்குரிய 'அந்த அதிகாரி' இடம் பெறக்கூடாது. இந்தக் குழுவின் முடிவு, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

47. இந்த விவகாரத்தில் எதிர்மனுதாரர்கள் காட்டிய கடும் காலத்தாமதம், மனுதாரரின் பாதையில் அவர்கள் உருவாக்கிய திட்டமிட்டத் தடைகள் மற்றும் பழிவாங்கும் போக்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரர் களுக்கு ரூ.5 லட்சம் அபராதம் விதிக்கப் படுகிறது. இந்தத் தொகையை நான்கு வாரங் களுக்குள் நீதிமன்றப் பதிவேட்டில் செலுத்த வேண்டும், பின்னர் அது மனுதாரருக்கு வழங்கப்படும்.

48. இந்த மனு மேற்கண்ட உத்தரவுகளுடன் முடித்து வைக்கப்படுகிறது.

49. நிலுவையில் உள்ள இதர மனுக்கள் ஏதேனும் இருப்பின், அவையும் இத்துடன் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## குற்ற வழக்கு இருந்தால் பாஸ்போர்ட்டை புதுப்பிக்க நீதிமன்றம் அனுமதி அவசியம்

### 3 நீதிபதிகள் அமர்வு உத்தரவு

குற்ற வழக்கு நிலுவையில் இருந்தால் பாஸ்போர்ட்டை புதுப்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் அனுமதி பெறுவது அவசியம் என்று மதுரை உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது. கோவையை சேர்ந்த ஜவகர்ராஜன், மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், எனது பாஸ்போர்ட்டை புதுப்பித்து தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விண்ணப்பித்து இருந்தேன். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே பாஸ்போர்ட்டை புதுப்பித்து தர உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ஸ்ரீமதி கே.கே.ராம கிருஷ்ணன் ஆகிய 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரணை செய்தது.

மனுதாரர் இந்திய பாஸ்போர்ட் வைத்தி ருக்கிறார். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் பாஸ்போர்ட்டை புதுப்பித்து தரக் கோரி ஆன்லைனில் விண்ணப்பித்து உள்ளார். காவல்துறையின் அறிக்கையில், அவர் மீது வழக்கு நிலுவையில் இருப்பதாக தெரிய வந்ததால் அது தொடர்பாக விளக்கம் கேட்டு அவருக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளனர். அதற்கு மனுதாரர் அளித்த பதிலில், தன் மீதான புகார் பொய்யானது என்றும், விசாரணைக்கு ஒத்துழைப்பதாகவும் விளக்கம் அளித்தும், அவரது பதில் ஏற்கப்பட வில்லை. எனவே அந்த நோட்டீசை ரத்து செய்து, பாஸ்போர்ட்டை மீண்டும் புதுப்பித்து தரக் கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறார்.

பாஸ்போர்ட் சட்டத்தின்படி குற்ற வழக்கு நிலுவையில் இருந்தால், பாஸ்போர்ட் வழங்க மறுக்கலாம். இருப்பினும், சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் அனுமதி இருந்தால், பாஸ்போர்ட் வழங்க வழியுள்ளது. எனவே குற்ற வழக்கு நிலுவையில் இருப்பவர்கள், பாஸ்போர்ட்டை பெற சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறுவது கட்டாயம்.

கொடூர குற்றச் செயல் புரிந்தவர்கள் தப்பி செல்வதை தடுக்கும் விதமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மனுதாரருக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் நீதிமன்றத்தின் அனுமதியை பெறாமல் பாஸ்போர்ட்டை புதுப்பிக்கு மாறு மனுதாரர் கோர இயலாது. எனவே மனுதாரர், சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகி உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்க வேண்டும். பாஸ்போர்ட்டை புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்கும் நடவடிக்கையும் புதிய பாஸ்போர்ட்டை புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்கும் நடவடிக்கையும் புதிய பாஸ்போர்ட் பெறுவதற்கான சட்ட விதிகளுக்கு உட்பட்டதுதான். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தனர்.

**நன்றி: தினத்தந்தி 12.02.2026**

# உயர்நீதிமன்ற உத்தரவில் தலையிட திடமான காரணம் கிடைக்கவில்லை

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை : மாண்புமிகு நீதிபதி திரு.ஜே.பி.பர்திவாலா**
**மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.மகாதேவன்**
**சிறப்பு விடுப்பு மனு (உ) எண் 11442/2023**
**2025(3)சிடிசி 520**

**அம்ருதீன் அன்சாரி (இறந்தவர்)ச.பி. மூலமாக மற்றும் பிறர்** ...**மனுதாரர்கள்**

**-எதிர்-**

**அப்சல் அலி மற்றும் பிறர்** ...**எதிர்மனுதாரர்கள்**

## ஆணை

**நீதிபதி ஜே.பி.பர்திவாலா**

1.விசாரணை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் திருப்பி யகற்றிய முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தின் ஆணையை நீக்கறவாக்கிக் கொண்டு இங்குள்ள எதிர்மனுதாரர்களால் [அசல் வாதிகள்] இரண்டாவது மேல்முறையீடு எண் 424/2005இல் பிலாஸ் பூரிலிலுள்ள சட்டிஸ்கர் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 24.10.2019 தேதிய தீர்ப்புரையி லிருந்து ஆணையிலிருந்தும் இந்த மனு உருவாகிறது.

2.வசதியின் பொருட்டு, இங்குள்ள மனு தாரர்கள் அசல் எதிர்வாதிகளாகவும் இங்குள்ள எதிர்மனுதாரர்கள் அசல் வாதிகளாகவும் குறிப்பிடப்படுவார்கள்.

இந்த மனுவுக்கு வழி ஏற்படுத்தும் பொருண்மைகள் சுருக்கமாக கூறப்படுகிறது.

ஏ.இந்த வழக்கின் சரித்திரம் இவ்வாறு போன்றமைகிறது. முதலாவது, விளம்புகைக்கும் கிரய பத்திரத்தை ரத்தாக்கலுக்கும், நிரந்தர உறுத்துப் கட்டளைக்கும் ஆன உரிமையியல் வழக்கு எண் 37ஏ/1996ஐ சட்டிஸ்கர், சர்குஜ மாவட்டம் ரமனுகஞ், உரிமையியல் நீதிபதியின் நீதிமன்றத்தில் அசல் வாதிகளின் தந்தை தொடுத்தார். வழக்கு 1908 இன் உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச்சட்ட [சுருக்கமாக உவிதொச] வகுமுறை 9 விதி 2இன் வகையங்கள் கீழ் தள்ளுபடியானது என் பொருட்கூறுகளி லிருந்து தெரிகிறது. இந்த சந்தர்ப்பத்தில் வாதி களின் தந்தை வழக்கு மீட்டளிப்புக்காக வகுமுறை 9 விதி 4 கீழான விண்ணப்பத்தை தாக்கலிட்டார். உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழான சொன்ன விண்ணப்பம் தள்ளுபடியானது. விஷயம் மேலே எடுத்துச் செல்லப்பட வில்லை. உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழ் தாக்கலான விண்ணபத்தை நிராகரித்துக் கொண்டு விசாரணை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட ஆணை இறுதிநிலை அடைந்தது.

பி. பின்னராக அதே பரிகாரங்களுக்காக வழக்கு எண் 27ஏ/2001ஐ சட்டிஸ்கர், சர்குஜ மாவட்டம் ரமனுகஞ், 1வது வகுப்பு உரிமை யியல் நீதிபதியின் நீதிமன்றத்தில் அசல் வாதிகள் சட்டப்பூர்வ வாரிசுகள் தாக்கலிட்டார்கள்.

சி. விசாரணை நீதிமன்றம் கீழ் வரும் எழுவினாக்களை வனைந்தது:

1. வழக்குடன் இணைக்கப்பட்ட பிற்சேர்க்கை ஏ இல் சொல்லப்படும் தாவா சொத்தில் வாதிகள் சொத்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்களா?

2. நிறைவேற்றப்பட்ட 19.12.1986 தேதிய கிரய ஆவணம் போலியாகவும் ஜோடனையாக வும் சட்டவிரோதமாகவும் உள்ள நிலையில் வாதிகள் மீது தாக்கம் கொண்டிருக்கவில்லையா?

3. தாவா சொத்தில் பாத்தியதை கோரலி லிருந்து அல்லது நுழைவதிலிருந்து அல்லது அதில் இடைஞ்சல் ஏற்படுத்தலிலிருந்து 1-5வது எதிர்வாதிகளையும் அவர்களது உறவினர்களை யும் நண்பர்களையும் ஊழியர்களையும்

முகவர்களையும் தடுத்து நிறுத்தும் நிரத்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணைக்கு வாதிகளுக்கு பாத்தியதையுண்டா

4. அமரர் அகமத் அலியின் மகள்கள் வழக்கில் தேவையான தரப்பினர்கள் ஆவார்களா?

5. தற்போதைய வழக்கில் முன்தீர்ப்பு முரண் தடை கோட்பாடு பொருத்தத்தக்கதா?

6. வழக்கில் குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படுகிறதா?

7. பரிகாரம் மற்றும் செலவு தொகைகள் என்ன?

i) முன்சொன்ன ஏழுவினாக்களிலும் வாதிகளுக்கு சாதகமாக விடையளிக்கப்பட்டது.

இ.விசாரணை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்புரையாலும் தீர்ப்பாணையாலும் துயருற்ற அசல் எதிர்வாதிகள் அதை முதலாவது மேல் முறையீட்டில் மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்த்தார்கள். முதலாவது மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப் பட்டு விசாரணை நீதிமன்றத்தால் இயற்றலான தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் நீக்கறவானது.

எஃப்) முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்புரையிலும் தீர்ப்பாணையிலும் மனநிறைவடையாது வாதிகள் உயர் நீதிமன்றத்துக்கு மேல்முறையீடில் சென்றனர்.

ஜி. உயர்நீதிமன்றம் பரிசீலிப்புக்காக கீழ் வரும் எழுவினாக்களை வனைந்தது.

i) குறிப்பாக, விசாரணை நீதிமன்றத்தின் விடுப்புடன் பற்றாக்குறை நீதிமன்ற கட்டணம் தீர்ப்பாணை பெற்றவரால் செலுத்தப்பட்டுள்ளது என்ற பொருண்மை பரிசீலனையில். விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தீர்ப்பாணை பெற்றவர் பற்றாக்குறை நீதிமன்ற கட்டணத்தை வைப்பீடு செய்யாததால் தீர்ப்பாணை நிறைவேற்றப்படுதல் இயலாததாகிறது என முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் தீர்ப்புரைத்தல் நியாயமாகுமா

ii) முன்கூட்டிய வழக்கு அதே தரப்பினர்கள் இடையிலானதாகவும் அதே பரிகாரத்துக்கும் ஆனது என்பதற்கு சாட்சியம் ஏதுமற்ற நிலையில், இப்போதைய வழக்கு நிலையுறுத்தத்தக்கதாக இருந்ததில்லை என்ற முதலாவது மேல் முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்பு நியாயமானதாகுமா?

iii) அது எதிர்வாதிகளால் மறுப்பாகியிருக்கவில்லை என்ற பொருண்மை பின்னொளியில் சான்றொப்ப சாட்சிகளை விசாரித்தல் மூலமாக அது நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை என்ற அடிப் படையில் அவரது உரிமையை வாதிகளுக்கு சாதகமாக சா.1.இன் வகின் தாவா என அழைப்பாகும் பட்டா வைத்திருந்த அப்துல் ரசக் துறந்திருந்தார் என்ற மேல்முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்பு புறக்கணிக்கப்பட இயலுமா?

எச்) உயர்நீதிமன்றம் இரண்டாவது மேல் முறையீடை ஏற்றுக் கொள்கையில் மேல் சொன்ன அனைத்து எழுவினாக்களையும் வாதிகளுக்கு சாதகமாக தீர்மானித்தது. முதலாவது மேல்முமுறையீடு நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் நீக்கறவாக்கப் பட்டு விசாரணை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் மீட்டாளிப்பானது.

4.மேலே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் அசல் எதிர்வாதிகள் இந்த நீதிமன்றத்தில் இப்போதைய மனுவுடன் உள்ளார்கள்.

5.அசல் எதிர்வாதிகள் ங்மனுதாரர்கள்சி சார்பில் முன்னிலையாகும் வழக்குரைஞர் திரு. அபினவ் ஜெகனாதனையும் 1-2வது எதிர் மனுதாரர்கள் [அசல் வாதிகள்] சார்பில் முன்னிலையாகும் முதுநிலை வழக்குரைஞர் குமாரி வி.மோகனாவையும் கேட்டறிந்தோம்.

6.முப்பரிமா பணிந்துரைகளை எதிர்வாதிகள் [மனுதாரர்கள்] சார்பில் முன்னிலையாகும் வழக்குரைஞர் வைத்துள்ளார். முதலாவதாக, அவரது கூற்றுப்படி உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அத்தகைய ஆணை உயர்நீதிமன்றத்தில் எதிர்க்கப்படாது இறுதி நிலையை அடைவதால் அப்போது அதே வழக்குமூலத்துக்காகவும் அதே பரிகாரங்களுக்கும் ஆன இரண்டாவது வழக்கு நிலையுறுத்தக்கதல்ல ..[சா.பி1] ஆகும் வஜீப் தாவா ஆவண சாட்சியத்தின் மதிப்பு தொடர்பாக அவரது இரண்டாவது பணிந்துரை உள்ளது. அவரது கூற்றுப்படி 1882இன் சொத்துரிமை மாற்றல் சட்டப் பிரிவு 6(ஏ) உடன் வாசிப்பாகும்

முகமதியர் சட்ட நெறியின் கடைசி கோடபாடு பிரிவு 54ஆல் 1952இன் வஜீப் தாவா பாதிப்புறு வதாக சொல்லப்படவியலும் என அவர் கூறுகிறார். பதிவற்ற ஆவணமான அது சொத்து மீது செல்லும் பாத்தியத்தை நிலைநாட்டல் நோக்கத்துக் காக சாட்சியமாக வாசிக்கப்பட்டிருந்திருக்க கூடாது எனவும் அவர் பணிந்திட்டார். மூன்றாவது, வாதி களால் தாக்கலான புதிய வழக்கு முன் தீர்ப்பு முரண்தடை கோட்பாடால் பாதிப்புறுவதாக சொல்லப்படவியலும்.

7. மறுபுறத்தில் குறையுறு தீர்ப்பினை ஆணையம் இயற்றலில் சட்டநெறி பற்றி பேச்சின்றி, எவ்வித சட்டநெறி பிழையும் உயர் நீதிமன்றத்தால் இழைக்கப்பட்டுள்ளதாக சொல்லப் படவியலாது என வாதிகளுக்காக முன்னிலை யான முதுநிலை வழக்குரைஞர் குமாரி வி மோகனா பணிந்திட்டாள். வழக்கு செல்லத் தக்கதானது எனவும் அது உவிதொச வகுமுறை 9 விதி 4இன் வகையம் எதனாலும் பாதிப்பாக வில்லை எனவும் உயர்நீதிமன்றம் கருத்து ரைத்தல் சரியானதாகும் என அவள் பணிந் திட்டாள். வாஜீ தாவா [சா.பி1] ஆவணம் பொறுத்தளவில் அனைத்து கூறுகளிலும் அது உயர் நீதிமன்றத்தால் பரிசீலிப்பாகியுள்ளது என அவள் பணிந்திட்டாள். மேலே குறிப்பாடான அத்தகைய சந்தர்ப்பங்களில் மனுவில் தகுதிப் பாடற்ற நிலையில் அது தள்ளுபடியாக்கப் படலாம் என முதுநிலை வழக்குரைஞர் வேண்டினாள்.

**பகுப்பாய்வு**

8. தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்களை கேட்டறிந்தும் பதிவா வணத்திலுள்ள பொருட்கூறுகளை ஆராய்ந்தி ருந்தும் உள்ள்தில் எங்களது பரிசீலனையில் கீழ் வரும் எழுவினாக்கள் உருவாகின்றன.

உவிதொச வகுமுறை 9 விதி 4 பிரிவு கீழ் வழக்கு மீட்டளிப்புக்கான மனு தள்ளுபடிக்குப் பின்பாக புதிய வழக்கு நிலையுறுத்தத்தக்கதா?

பிறழ்கைக்காக வழக்கு தள்ளுபடியான பின்பாக புதிய வழக்கு முன் ஹீர்ப்பு முரண்தடை யால் தடையாகிறதா?

9.உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழ் வருமாறு வாசிப்பாகிறது :

வகுமுறை 9: முன்னிலையாதலும் முன்னிலை யாகாமையின் விளைவுகளும்

4. புதிய வழக்கை வாதி கொணரலாம் அல்லது நீதிமன்றக் கோப்பில் வழக்கை மீட்டளிக்கலாம். விதி 2 அல்லது 3 கீழ் வழக்கு தள்ளுபடியாகும் நேர்வில், வாதி [காலவரம்பு சட்டநெறிக்கு உட்பட்டு] புதிய வழக்கைக் கொணரலாம் அல்லது தள்ளுபடியை நீக்கற வாக்கும் ஆணைக்காக அவர் விண்ணப்பிக்க லாம் (விதி 2 இல் குறிப்பாகும் அத்தகைய தவறுகை) அல்லது அவர் முன்னிலையாக மைக்காக நேர்வுகேற்ப போதுமான காரணம் இருந்தது என நீதிமன்றம் மனநிறைவு அடைந்தால் தள்ளுபடியாகும் ஆணையை நீதிமன்றம் பிறப்பித்து வழக்கு மேல்தொடரலுக் கான நாளை நிர்ணயிக்க வேண்டும்.''

10. பூதியோ –எதிர்– முசமத் பைகுந்தி (1921) 63 I.C. 239 வழக்கில் அரசு பேரவை தீர்ப்புரையில் நம்புகை வைக்கப்பட்டது என தெரிகிறது. சொன்ன தீர்ப்பில் உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழ் நிர்ணயிக்கப்பட்ட இரு தீர்வழிகளும் பரஸ்பரம் பிரத்தியேகமானவையாக இருக்க வில்லை என்ற பார்வையை கொண்டது. 'அல்லது' என்ற முற்சேர்க்கையை அரசு பேரவை உற்று நோக்கி கீழ்வருமாறு தீர்ப்பிட்டது.

''வகுமுறை 9, விதி 2 அல்லது 3 கீழ் அவரது வழக்கு தள்ளுபடியாகப் பெற்றிருக்கும் வாதிக்கு அனுமதியான இரு தீர்வழிகள் உண்டு எனவும் அவை புதிய வழக்கு கொணரல் அல்லது தள்ளுபடி நீக்கறவுக்கு விண்ணப்பித்தல் ஆகும் எனவும் ஆன இந்த கூறுகள் பரஸ்பரம் பிரத்தியேகமானவையாக உள்ளதா என்ற அம்சம் எழுப்பப்படுகிறது. இந்த அம்சம் பற்றி வகுமுறை 9 விதி 4இல் உள்ள சொற்கள் பொருளாதார ரீதியாக ஒன்றாகவே உள்ளன. சொல்லமைப்பு மகிழக் கூடியது அல்ல ''அல்லது'' என்ற சொல் பிரயோகம் பல் இடர்பாடுகளை ஏற்படுத்துகிறது. அல்லது என்ற சொல் பிரயோகம் உள்ள போதிலும் புதிய வழக்கை கொணர்தல் முதலாவது தீர்வழியாக வும் ஆணை நீக்கறவாதல் தீர்வழி இரண்டாவது தீர்வழியாகவும் ஆன பொருண்மைகள் உள்ள

போதிலும் கீழமை நீதிமன்றத்தின் கருத்து சரியென நான் கருதுகிறேன். அவரது வழக்கு தவறாக தள்ளுபடியானதாக நம்பிக் கொண்டு அந்த ஆணையை நீக்கறவாக்க நீதிமன்றத்துக்கு வந்து வெற்றியடைய தவறும்போது அதே பொருண்மைகள் பேரில் வேறு ஒரு வழக்கை கொணர அனுமதிக்கப்படாத தண்டனைக்காக அவர் காப்பீடு செய்கிறார் என்ற அரத்தத்தை சொற்களுக்குள் புகுத்தி வாசிக்க என்னால் இயலாது. புதிய வழக்கு கொணரல் தீர்வழியை தேர்ந்தெடுத்தல் வாதி புதிய நீதிமன்ற கட்டணம் வாதி செலுத்தல தேவைப்பாடில் உட்படுத்துகிறது. அவரது வழக்கு மீட்டளிப்பாகவும் நீதிமன்ற கட்டணம் செலுத்தலுக்கும் உள்ள வாய்ப்பை ஒருவர் இயற்கையில் எடுத்துக் கொள்வார். அந்த வாய்ப்பை அவர் பிரயோகிக்க தவறுகை யில் அவர் அனைத்து தீர்வழிகளையும் இழப்பார் என்பது சட்டப் பேர்வையின் நோக்க மானது என தோன்றவில்லை அல்லது என்ற ஒற்றை சொல் பிரயோகம் மீது மேல்முறை யீட்டாளரின் முழுவாதமும் சார்ந்தமைகிறது. மேக்ல்முறையீட்டாளரின் வாதத்தை ஏற்பதற்கு போதுமான வலு உள்ளது என நான் எண்ண வில்லை. ஆகையால் இந்த மேல்முறையீடை நான் செலவு தொகையுடன் தள்ளுபடியாக்கு கிறேன்.''

11. உவிதொச வகுறை 9 விதி 4இன் பொருள் விளக்கம் தொடர்பாக அரசு போர்வை யால் எடுக்கப்பட்ட கருத்துடன் நாங்கள் இணங்குகிறோம்.

12. உவிதொச வகுமுறை 9 விதி 8 யையும் வகுமுறை 9விதி 9யையும் கருத்தில் வைத்துக் கொண்டு உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழ் தாக்கலான விண்ணப்ப நிராகரிப்புக்கு பின்னரும் கூட புதிய வழக்கு நிலையுறுத்தத்தக்கது என்ற கருத்தை முன்வைக்க மற்றொரு காரணம் உண்டு.

13. உவிதொச வகுமுறை 9 விதி 8 கீழ் வருமாறு வாசிப்பாகிறது.

''8. எதிர்வாதி மட்டுமே முன்னிலையாகும் பேர்தான் செயல்முறை: வழக்கு விசாரணைக் காக அழைக்கப்படும்போது எதிர்வாதி மட்டுமே ஆஜராகி வாதி ஆஜராகாத பட்சத்தில் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடியாக்கி ஆணையிட வேண்டும். கோரிக்கையை அல்லது அதன் பகுதியை எதிர்வாதி ஏற்றுக் கொண்டாலொழிய அத்தகைய விஷயத்தில் அத்தகைய ஏற்கை பேரில் எதிர் வாதிக்கு எதிராக நீதிமன்றம் ஆணை பிறப்பிக்க வேண்டும், கோரிக்கையின் பகுதி மட்டுமே ஏற்கப்பட்டிருக்கையில் எஞ்சியது தொடர்புற்ற அளவுக்கு வழக்கை அது தள்ளுபடியாக்க வேண்டும்.''

14.உவிதொச வகுமுறை 9 விதி 9 கீழ் வருமாறு வாசிப்பாகிறது.

9. வாதிக்கு எதிராக பிறழ்கை புதிய வழக்குக்கு தடையாகும் (1 வழக்கு முழுமை யாக அல்லது பகுதியாக தள்ளுபடியயாகும் போது, அதே வழக்குமூலம் தொடர்பாக புதிய வழக்கை தொடுத்தலிலிருந்து வாதி தடுக்கப்பட வேண்டும். ஆனால் தள்ளுபடியாணை நீக்கற வாக்கிட அவர் விண்ணப்பிக்கலாம். வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது அவர் ஆஜராகாமைக்கு போதுமான முகாந்திரம் இருந்தது என் அவர் நீதிமன்றத்தை திருப்திப் படுத்தினால் அது உகந்ததென கருதும்படி செலவு தொகை அல்லது வேறானது பற்றிய விதிமுறைகள் பேரில் தள்ளிபடியாக்கலை நீக்கறவாக்கிக் கொண்டு நீதிமன்றம் ஆணை இயற்ற வேண்டும். வழக்கை மேல்தொடரலுக்கு தேதியை அது நிர்ணயிக்க வேண்டும்

2. எதிர்தரப்புக்கு விண்ணப்பம் பற்றிய அறிவிப்பு சார்வாக்கப்பட்டாலொழிய இந்த விதி கீழ் எந்த ஆணையும் பிறப்பிக்கப்படக் கூடாது.''

15... காலவரம்புக்கு உட்பட்டு புதிய வழக்கு தாக்கலிடலை, உவிதொச வகுமுறை 9 விதி 4 தடையாக்கவில்லை என்பதை அதை எளிதாக வாசித்தல் காட்டுகிறது. அது நோக்கமாக இருந்தால் விதி 8 கீழ் வழக்கு தள்ளுபடியாகும் போது அதே வழக்குமூலம் பொறுத்து புதிய் வழக்கு தாக்கலிடலலிருந்து வாதி தடுக்கப்பட வேண்டும் என் மேலே குறிப்பிடப்பட்ட உவிதொச வகுமுறை 9 விதி 4 இதை ஒத்த வகையத்தை நாங்கள் கண்டறிந்திருப்போம்.

16.உவிதொச வகுமுறை 9 இன் விதி 4 இக்கும் விதி 9இக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு என்பது வகுமுறை 9 விதி 2 அல்லது

விதி 3 கீழ் வழக்கு தள்ளுபடி யாகையில் வழங்கப்படும் தீர்வழி உவிதொச வாகுமுறை 9 விதி 4 கீழ் வகைய்யப்பட்டுள்ளது ஆகும். இத்தகைய தள்ளுபடி நேர்வில் அதே வழக்கு மூலம் பேரில் வாதி புதிய வழக்கை கொணர் கிறார் அல்லது தள்ளுபடி உத்தரவு நீக்கறவுக்காக வும் வழக்கு மீட்டளிப்பாகவும் அவர் விண்ணப்பிக்க லாம். அப்படியிருக்கையில், வழக்கு உவிதொச வகுமுறை விதி 8 கீழ் தள்ளுபடியானால் வாதி அதே வழக்குமூலம் பேரிலான புதிய வழக்கை கொணரவியலாது. தள்ளுபடி ஆணை நீக்கறவு செய்தலுக்கும் வழக்கு மீட்டளிப்புக்காகவும் ஆன விண்ணபத்தை நகர்த்தல் மட்டுமே வாதிக்கு கிட்டும் ஒரே தீர்வழி ஆகும்.

17. உவிதொச வகுமுறை 9 விதி 2 அல்லது விதி 3 கீழ் வழக்கு தள்ளுபடியானாலும் கூட வாதி உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழ் அதே வழக்குமூலம்பேரில் புதிய வழக்கு தாக்கலிடலை தெளிவான சொற்களில் சட்டப்பேரவை தடுத் திருக்கவில்லை என்பதையும் அப்படியிருக்கை யில் உவிதொச வகுமுறை 9 விதி 8 கீழ் வழக்கு தள்ளுபடியாகும்/விஷயத்தில் புதிய வழக்கை வாதி தாக்கலிடலை உவிதொச் வகுமுறை 9 விதி 9 தடையாகிறது என்பதையும் முன்சொன்ன உவிதொச வகுமுறை 9 இன் விதி 4ஐயும் விதி 9 ஐயும் உவிதொச வகுமுறை 9 விதி 4 இனது மற்றும் விதி 9 இனது வையங்களை வெறுமன வாசித்தலிலிருந்து அப்பட்டமாக தெளிவாகும். வழக்கு மீட்டளிப்புக்காக உவிதொச் வகுமுறை 9 விதி 9 கீழ் விண்ணப்பத்தை தாக்கலுதலே அத்தகைய தள்ளுபடிக்காக வகைசெய்யப்படும் ஒரே தீர்வழியாகும்.

18. AIR 1929 Allahaabaad 131இல் அறிவிப்பான கோவிந்த் பிரசாத் –எதிர்– ஹர் கிஷண் வழக்கில் இரண்டாவது வழக்கின் செல்லுமை பற்றிய ஒத்த கேள்வி பரிசீலனை யில் எழுந்தது. வழக்கு விசாரணைக்காக அழைக்கப் பட்டபோது எந்த தரப்பினரும் முன்னிலை யாகாததன் விளைவாக வாதியால் தாக்கலான வழக்கு உவிதொச வகுமுறை 9 விதி 3 கீழ் தள்ளுபடியானது. வழக்கு மீட்டளிப்பாக வாதி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்து அந்த மீட்டளிப்பு விணணப்பம் தள்ளுபடியானது. வாது அடுத்து அதே வழக்கு மூலம் பேரிலான புதிய வழக்கை கொணர்ந்தார். வழக்கு நிலையுறுத் தக்கதல்ல என் தீர்ப்பிட்டுக் கொண்டு வழக்கை நீதிபதி தள்ளுபடியாக்கினார். அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் தாக்கலான உரிமையியல் சீராய்வு மனுவில் முந்தைய தீர்ப்புகளை (39.I.C 191-63.I.C 239) பின்பற்றிக் கொண்டு வழக்கு தள்ளுபடியாணையை நீக்கறவாக்கி வழக்கு செல்லத்தக்கது என நீத்பதி வெயர் தீர்ப்பிட்டார்.

19.ஒத்த கேள்வி பல்கேசியா –எதிர்– மஹந்த் பகவான் கிர் AIR 1937 Patna 9 வழக்கில் பட்டான் நீதிமன்ற இருநீதியர் அமர்வின் பரிசீலனையில் வந்தது. ஒத்த கருத்தை அந்த வழக்கிலும் வைத்துக் கொண்டு நீதிபதி ஜேம்ஸ் கருத்துரைத்ததாவது.

“A 9 Az 4இன் வகையங்கள் காரணத்தால் இப்போதைய வழக்கு தடையாவதாக கருதப்பட வேண்டும். என் இரண்டாவதாக திரு.குர்சைத் ஹிஸ்னன் வாதிடுகிறார். வழக்கு விதி 2 அல்லது விதி 3 கீழ் தள்ளுபடி செய்யப்படும் போது வாதி புதிய வழக்கை கொணரலாம் அல்லது தள்ளுபடியை நீக்கறவாக்கல் ஆணைக்காக அவர் விண்ணப்பிக்கலாம் என வ 9 வி 9 வகைசெய்கிறது. தள்ளுபடியாணை நீக்கறவாக விண்ணப்பிக்க அவருக்குள்ள உரிமையை பிரயோகித்திடலை வாதி தேர்ந்தெடுத்தால் அதன் மூலம் புதிய வழக்கு தொடுத்தலுக்கான உரிமையை அவர் பயன்படுத்தலில் தடுக்கப் படுகிறார் எனும் வகையில் இந்த இரு வகையங் களும் பர்ஸ்பரம் பிரத்தியேகமானவை ஆகும். என் திரு.குர்சைத் ஹிஸ்னன் வாதிடுகிறார். இந்த கூறில் திரு.குர்சைத் ஹிஸ்னனால் வைக்கப் படும் தீர்ப்புகள் இந்த வாதத்துக்கு எதிரிடையாக அமைகின்றன. [63 ic 239 of Stuart,J AIR 1926 All 678 of Daniels, J &50)All 837 of Weir. J அனைத்தும் அலகாபாத் உயர்நீதிமன்றத்தால் ஆனவையாகும். இந்த அனைத்து வழக்கு களிலும் விதி 4இன் மாற்றுமுறை வகையங்கள் பரஸ்பரம் பிரத்தியேகமாக இருக்கவில்லை எனவும் அவரது வழக்கு மீட்டளிப்புக்கான விண்ணப்பம் தள்ளுபடியாகப் பெற்றுள்ள வாதி புதிய வழக்கை தாக்கலிடலிலிருந்து தடுக்கப் படவில்லை எனவும் தீர்மானமாகியுள்ளது. நான் பெயரிட்டிருக்கும் நீதிபதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்திலிருந்து நாங்கள் வேறுபடுவதன்

நியாயத்தை புலப்படுத்தும் முகாந்திரம் எதனையும் நான் கருதவில்லை. வாதி புதிய வழக்கை கொண்ரலாம் அல்லது தள்ளுபடி நீக்கறவுக்காக அவர் விண்ணப்பிக்க லாம் என்பதற்கு விதியை நியாயமாக வாசித்தல் வகைசெய்கிறது என் எங்களுக்கு தோன்றுகிறது. அப்வர் நீதிமன்றத்தை திருப்திப்படுத்தி தள்ளுபடி யாணையை நீக்கறவாக்கும் உத்தரவை பெற்றால் அவர் அசல் வழக்கை மேல்தொடர லாம். தள்ளுபடியாணை நீக்கறவு செய்யும் உத்தரவுக்காக அவர் விண்ணபபித்திருந்து நீதிமன்றத்தை திருப்திப்படுத்த அவர் தவறி அவரது விண்ணப்பம் தள்ளுபடியாகுமானால் மாற்றுமுறை தீர்வழிக்கு அவர் விடப்படுகிறார். அதாவது அவர் காலவரம்பு சட்டநெறிக்கு உட்பட்டு அவர் புதிய வழக்கை தொடுக்கலாம்.''

20.சொன்ன கருத்துடன் இணங்கிக் கொண்டு நீதிபதி ரோலந்த் கருத்துரைத்தாவது:

நீதிபதி ரோலந்த்: நான் இணங்குகிறேன். உவிதொ வ 9 வி 3கீழான வழக்கு தள்ளுபடி, மறு விசாரணைக்கான விண்ணபத்தை தள்ளுபடி யுடன் இணைந்து, அதே வழக்குமூல அடிப்படை யிலான வழக்கை வாதி மீண்டும் தாக்கலிடலை தடுக்க செயலாற்றலாம் என்ற வாதக் குறிப்பாடில் சில சொற்களை சேர்க்க விரும்புகிறேன். உவிதொச பிரிவு 9 மேல்முறையீட்டாளர்களின் வாதத்துக்கு ஆபத்தானதாகும். அவற்றை புலனில் கொள்ளுதல் தெளிவாக அல்லது பூடகமாக தடையான வழக்குகள் விடுத்து, உரிமையியல் இயல்புள்ள அனைத்து வழக்கு களையும் விசாரித்திட நீதிமன்றங்கள் ஆள்வை கொண்டிருத்தல் வேண்டும் என இந்த பிரிவு அறிவிக்கிறது. எதிர்வாதியின் வருகையிலும் வாதி ஆஜாராகாத நிலையிலும் பிரிவு கீழ் அவரது வழக்கு தள்ளுபடியாகியிருக்கும் போது அதே வழக்குமூல அடிப்படையில் வாதி மீண்டும் வழக்கிடுவதை தடுத்துக் கொண்டு தரப்பினர்கள் இடையில் நீதிமுறையாக தீர்வுறுதியான வழக்கு களை தடையாக்கும் பிரிவு 11இன் அத்தகைய வகையங்களுக்கு அல்லது பிரிவு 8 கீழ் எதிர்வாதி ஆஜராகி வாதி முன்னிலையாகாத நிலையில் அதே வழக்குமூல அடிப்படையில் வாதி வழக்கிடலை தடுக்கும் வ9 வி 9இன் வகை யங்களுக்கு இது ஆட்பட்டதாகும். வகுமுறை 9 விதி 9 உடன் துவங்கிடும் இத்தகைய வகையம் இல்லாத நிலையில் அவரது வழக்கிடல் உரிமையை வ9வி4 பாதிக்காது விட்டாலும் கூட, வ9வி4 கீழான தள்ளுபடி வாதி மீண்டும் வழக்கிடுவதை தடையாக்கவில்லை என்பது எனது கருத்தாகும். தாக்கத்தில் புதிய வழக்கிடல் உரிமையை வி4 ஏற்படுத்தவில்லை. அதனால் அதை அறிவிக்கிறது. அதேசமயம் மாற்றாக அவரது அசல் வழக்கை வாதி மேலதொடரலை அது அனுமதிக்கிறது. முந்தைய விருப்பத் தேர்வை வாதி உரிமையாகக் கொண்டிருக்கிறார். வழக்கு தள்ளுபடிக்கு இட்டுச்சென்ற ஆஜாரா காமைக்கு அல்லது மற்ற பிறழ்கைக்கு அவரிடம் போதிய காரணம் இருந்தது என அவர் நீதிமன்றத்தை திருப்திப்படுத்த இயன்றால் மட்டுமே மற்ற விருப்பத்தேர்வு அவருக்கு கிட்டுவதாகிறது மற்ற கூறுகள் பற்றி நான் கூடுதலாக பேசிட ஏதுமில்லை''

21. வகுமுறை 9இல் உள்ளடங்கும் வகையங்கள் மற்றும் மேலே கலந்தாயப்பட்ட சட்டநெறி பின்னொளியில் உவிதொச வகுமுறை 9 விதி 4 கீழான தள்ளுபடி வழக்கு விஷயத்தில் புதிய வழக்கு தாக்கலிடுதல் அல்லது வழக்கு மீட்டளிப்பு விண்ணப்பம் ஆன இரு தீர்வழிகளை வாதி கொண்டுள்ளார். ஒரு தீர்வழி அவர் தேந்தெடுத்தால் மற்ற தீர்வழியை பயன்படுத்த லிலிருந்து அவர் விலக்கப்படவில்லை. இரு தீர்வழிகள் ஒரே நேரத்திலானதாக அமைந்து அவற்றில் எதனையும் விலக்காது.

22. உவிதொச வகுறை 9 விதிகள் 2 மற்றும் 3 கீழ் பிறழ்வில் வழக்கு தள்ளுபடிக்கு பின்னராக புதிய வழக்கு முன் தீர்ப்பு முரண் தடை கோட்பாடால் தடையாகிறதா என்ற அடுத்த கேள்வி [எண் 2] பரிசீலனையில் வருகிறது.

23.அதே வழக்குமூலத்துக்காக எவரும் இரு முறை அலைக்கழிக்கப்பட கூடாது எனவாகும் பொது சட்டநெறி கோட்பாடு அடிப்படையில் முன் தீர்ப்பு முரண் தடை கோட்பாடு உள்ளது. வழக்குக்கு இறுதிநிலை தரலுக்காக பொருத்தப் படும் கோட்பாடு இதுவாகும். இந்த கோட்பாடுபடி தீர்மனிக்கப்பட்ட ஒரு கேள்வி அல்லது அம்சம் இறுதிநிலை அடைகிறது. அது பின்னரான வழக்கில் மீண்டும் திறக்கப்பட்டும் மறுவிசாரணை யாகக் கூடாது. வேறு சொற்களில் ஒரு வழக்கில் உள்ளாகும் கேள்வி தகுதியுறு நீதிமன்றத்தில்

இறுதியாக தீர்வுறுதியாக்கப்படுமானால் அதே கேள்வி பின்னரான வழக்கில் மறுவழக்காடப்பட முடியாது. ஆகையால் முன் தீர்ப்பு முரண் தடை கோட்பாடை பொருத்தலுக்கு வழக்கில் தகுதியுறு நீதிமன்றத்தாலான கேள்வி இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

24.உவிதொச பிரிவு 2(9) இல் ''தீர்ப்புரை'' என்ற பதம் வரையறுப்பாகியுள்ளது. அது தீர்ப்பாணை அல்லது ஆணை காரணங்களாக நீதிபதியால் தரப்படும் விளக்கவுரையாகும்.

25.உவிதொச பிரிவு 2(2) கீழ் ''தீர்ப்பாணை'' என்ற பதம் கீழ் வருமாறு வரையறுப்பாகி யுள்ளது.

(2) தீர்வுறுதியாக்கலின் முறைசார் வெளிப்பாடு என தீர்ப்பாணை அர்த்தமளிக்கிறது. அது, அதனை தெரிவிக்கும் நீதிமன்றம் பொறுத்த ளவில், வழக்கில் முரணாகும் அனைத்து அல்லது எது விஷயங்கள் தொடர்பாகவும் தரப்பினர்களின் உரிமைகளை இறுதியாக தீர்மானிக்கிறது. அது முதல் நிலையில் அல்லது இறுதி நிலையில் இருக்கலாம். வழக்கு நிராகரிப்பாக பிரிவு 144 கீழான வழக்குரை நிராகரிப்பையும் கேள்வி எது பற்றி தீர்மானித்தலை யும் அது உட்படுத்துவதாக கருதப்பட வேண்டும். ஆனால் அது கீழ் வருவதை உட்படுத்தக் கூடாது.

(ஏ) உத்தரவில் மேல்முறையீடாகும் மேல் முறையீடில் தீர்வுறிதியாக்கல் அல்லது

(பி) பிறழ்கையிலான தள்ளுபடி ஆணை ஏதும்.''

26. தீர்ப்பாணை என்ற சொல்லை எளிதாக வாசித்தலிலிருந்து தீர்ப்பாணையை உருவ மைக்க வழக்கில் முரணாகும் அனைத்து அல்லது எது விஷயங்கள் தொடர்பாக தரப்பினர் களது உரிமையை இறுதியாக தீர்மானிக்கும் தீர்வுறுதியாக்கலின் முறைசார் வெளிப்பாடு இருத்தல் வேண்டும் என்பதும் ஆனால் பிறழ்கைக்காக ஓர் ஆணையிலிருந்து அல்லது தள்ளுபடியாக்கும் உத்தரவிலிருந்து மேல் முறையீடாக அமையும் மேல்முறையீடில் உருவாகும் தீர்வுறுதியாக்கல் எதனையும் தீர்ப்பாணை உட்படுத்தக் கூடாது என்பதும் அப்பட்டமாக தெளிவாகும். ஆகையால் குறிப்பாக உவிதொச வகுமுறை 9 விதி 2 அல்லது விதி 3 கீழ் வழக்கு தள்ளுபடி அல்லது பிறழ்வுக்காக விண்ணப்பம் வழக்கில் கோரப்படும் உரிமை உருவமைக்கப்படும் மறுப்புரை எதனது முறை சார் வெளிப்பாடாக இல்லை என்பது தெள்ள் தெளிவாகும். உவிதொச வகுமுறை 43 கீழ் வகைசெய்யப்பட்டவாறு வழக்கு அல்லது பிறழ்கைக்கான விண்ணப்பம் தள்ளுபடியும் மேல்முறையீடு செய்யதக்கதல்ல. உவிதொச வகுமுறை 43ஐ நாம் வாசித்தால் உவிதொச வகுமுறை 9 விதி 9 கீழ் அல்லது உவிதொச வகுமுறை 9 விட்க்ஹி 13 கீழ் இயற்றப்படும் ஆணைகள் மேல்முறையீடு செய்யதக்கவை என்பதை நாம் காணுவோம். ஆனால் உவி தொச வகுமுறை 9 விதி 4 கீழ் இயற்றப்பட்ட ஆணை மேல்முறையீடு செய்யதக்கவை அல்ல் என்பதையும் நாம் காணுவோம். உவிதொச வகுமுறை 9 விதி 2 அல்லது விதி 3 கீழ் வழக்கு அல்லது விண்ணப்பம் பிறழ்கைக்காக தள்ளுபடி யாணை தீர்வுறுதியாக்கலாகவோ அல்லது தீர்ப்பாணையாகவோ இருக்கவில்லை அது மேல்முறையீடு செய்யத்தக்கதாகவும் இருக்க வில்லை. அது அவ்வாறானால். தீர்வுறுதியாதால் அற்ற நிலையில் உவிதொச வகுமுறை 9 விதி 2 அல்லது விதி 3 கீழான வழக்கு தள்ளுபடி தீர்ப்புரை அல்லது தீர்ப்பாணை என்ற பதத்தின் தேவைப்பாடை பூர்த்தியாக்கவில்லை. ஆகையால், எங்களது பரிசீலிப்பான கருத்தில் அத்தகைய தள்ளுபடி உத்தரவு முன் தீர்ப்பு முரண்தடையாக செயல்பட இயலாத வகையில் செயல்படக் கூடாது.

27. [சா.பி1] வஜீப் தாவா ஆவணம் பொறுத் தளவில் உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட நியாயத்துடன் நாங்கள் இணங்குகிறோம்.

28.முன் சொல்லப்பட்டதன் பரிசீலனையில் உயர்நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட குறையுறு ஆணையில் தலையிடலுக்கு திடமான முகாந்திரம் எதனையும் நாங்கள் காணவில்லை. முடிவில் இந்த மனு தோல்வியுற்று இதன் மூலம் தள்ளுபடியாக்கப்படுகிறது.

28. நிலுவை விண்ணப்பங்கள் இருப்பின் தீர்வாக்கப்பட்டு அமைந்ததாகும்

**மொழியாக்கம் : பா.ஞானசேகரன்**

# ‘குற்றம் காமத்தின் விளைவு அல்ல, காதலின் விளைவு’: குற்றம் சாட்டப்பட்டவருக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையே திருமணம் நடந்ததைக் குறிப்பிட்டு, போக்சோ தண்டனை ரத்து

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.தீபாங்கர் தத்தா**
**மாண்புமிகு நீதிபதி திரு.அகஸ்டின் ஜார்ஜ் மாசி**
**உ.மே.மு. 679/2024**
**நாள் 28/10/2025**
**(2025 LiveLaw (SC) 1048)**

**கே.கிருபாகரன்** .. **மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**தமிழ்நாடு அரசு மற்றும் சிலர்** ...**எதிர்மனுதாரர்கள்**

குற்றவியல் சட்டம் – பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 – குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனையை ரத்து செய்தல் – இந்திய அரசியலமைப்பின் சரத்து 142–மேல்முறையீட்டாளரும் பாதிக்கப்பட்டவரும் திருமணம் செய்து கொண்டு ஒரு குழந்தை பெற்றிருக்கும் நிலையில், ‘முழுமையான நீதி’ வழங்கும் சரத்து 142–இன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 366 மற்றும் போக்சோ சட்டத்தின் பிரிவு 6 ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட குற்றத் தீர்ப்பை ரத்து செய்து தீர்ப்பளிக்கப்பட்டது – இந்திய தண்டனைச் சட்டம், 1872–இன் பிரிவு 366 மற்றும் போக்சோ சட்டம், 2012–இன் பிரிவு 6 ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டாளர் மீதான குற்றவியல் நடவடிக்கைகள், குற்றத் தீர்ப்பு மற்றும் தண்டனை உட்பட, அனைத்தையும் ரத்து செய்ய இந்திய அரசியலமைப்பின் சரத்து 142–இன் கீழ் உள்ள தனது அசாதாரண அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் பயன்படுத்தியது – ஒரு கொடூரமான குற்றத்திற்கான வழக்குகளை சமரசத்தின் அடிப்படையில் ரத்து செய்ய முடியாது என்று சட்டம் கூறினாலும், மனைவியின் கருணை மற்றும் பரிவுக்கான கோரிக்கையைப் புறக்கணிப்பது நீதியின் நோக்கத்தை நிறைவேற்றாது என்பதை உச்ச நீதிமன்றம் ஒப்புக்கொண்டது – இது சட்டம் நீதியின் காரணத்திற்காக வழிவிட வேண்டிய ஒரு வழக்கு–மேல்முறையீட்டாளர் தனது மனைவியையும் குழந்தையையும் கைவிடக்கூடாது மற்றும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் கண்ணியத்துடன் அவர்களைப் பராமரிக்க வேண்டும் என்ற குறிப்பிட்ட நிபந்தனைக்கு உட்படுத்தப்பட்டார் – மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

மேல்முறையீட்டாளருக்காக – திரு பிரசன்னா எஸ், வழக்கறிஞர், திகள்.இஞ்சிலா முஸ்லிம் ஜைதி, வழக்கறிஞர், திரு.பி.பிரசன்னா, வழக்கறிஞர்

எதிர்மனுதாரர்களுக்காக–திரு வி.கிருஷ்ண மூர்த்தி, மூத்த வழக்கறிஞர், திரு.சபரீஷ் சுப்பிரமணியம், வழக்கறிஞர், திரு.விஷ்ணு உன்னி கிருஷ்ணன், திரு.அஸ்கா ஷேக் காலியா, திருமதி ஜானவி தனேஜா, திரு.தனிஷ் சைஃபி, வழக்கறிஞர்கள்

## தீர்ப்பு

**நீதியரசர் தீபாங்கர் தத்தா**

‘சட்டத்தின் இறுதி நோக்கம் சமூகத்தின் நலனே ஆகும்.’ நு பெஞ்சமின் என். கார்டோசோ, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் இணை நீதியரசர்.

1. இந்தியத் தண்டனைச் சட்டம், 1872–ன் பிரிவு 366 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (போக்சோ), 2012–ன் பிரிவு 6 ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத் தக்கக் குற்றங்களுக்காக மேல் முறையீட்டாளர் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, அவருக்கு முறையே 5 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்பட்டது. இத்தகைய தண்டனைத் தீர்ப்பினால் அதிருப்தியடைந்த மேல்முறையீட்டாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு

செய்தார். அந்த மேல்முறையீடானது 13 செப்டம்பர் 2021 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் ஆணையின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

2. உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, மேல்முறையீட்டாள ருக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் இடையே 2021 மே மாதத்தில் திருமணம் நடைபெற்றது. பிப்ரவரி 6, 2024 தேதியிட்ட ஆணையின் மூலம், மேல்முறையீட்டாளரின் மனைவியின் நலனை உறுதிப்படுத்துமாறு தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவிற்கு இந்த நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, ஆணைக் குழுவின் உறுப்பினர் செயலர் மேல்முறை யீட்டாளரின் மனைவியுடன் கலந்துரையாடி ஓர் அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை யில், திருமணத்திற்குப் பிறகு மேல்முறை யீட்டாளருக்கும் அவரது மனைவிக்கும் ஒரு வயதிற்கும் குறைவான ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும், அவர்கள் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேல்முறையீட்டாளரின் மனைவி இந்த நீதிமன்றத்தில் ஒரு தற்சார்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதில் தான் மேல்முறையீட்டாளரைச் சார்ந்திருப்பதாகவும், அவருடனும் அவர்களின் திருமண உறவின் மூலம் பிறந்த குழந்தை யுடனும் மகிழ்ச்சியான, இயல்பான மற்றும் அமைதியான வாழ்க்கையை நடத்த விரும்புவ தாகவும் குறிப்பிட்டுள்ளார்.

4. இந்த வழக்கின் விசாரணையின் போது, இரு தரப்பினருக்கும் இடையிலான திருமண நல்லுறவு சீர்குலைவதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 142–ன் கீழ் இந்த நீதிமன்றத்திற்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேல் முறையீட்டாளரின் குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனையை ரத்து செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தையான புகார்தாரரின் கருத்தை முதலில் கேட்பது பொருத்தமானது என்று நாங்கள் கருதினோம். அவர் இன்று காணொலி காட்சி வாயிலாக எங்கள் முன் ஆஜரானார். எங்களு டைய கேள்விக்கு பதிலளித்த அவர், குற்றவியல் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தமிழில் தெரிவித்தார் (இதனை மாநில அரசின் மூத்த வழக்கறிஞர் திரு.கிருஷ்ணமூர்த்தி எங்களுக்கு விளக்கினார்).

5. மேல்முறையீட்டாளர் ஒரு கொடிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டுள்ளார் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கில் சட்ட நடவடிக்கைகளை ரத்து செய்ய வேண்டுமா என்பது மட்டுமே தற்போது முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரே கேள்வியாகும்.

6. ஒரு குற்றம் என்பது தனிநபருக்கு இழைக்கப் படும் தவறு மட்டுமல்ல, அது ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் எதிரான ஒன்று என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். ஒரு குற்றம் இழைக்கப்படும்போது, அது சமுதாயத்தின் கூட்டு மனசாட்சியை காயப்படுத்துகிறது. எனவே, சமுதாயம் அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மியற்றுபவர்கள் மூலம், இத்தகைய குற்றத்திற் கான தண்டனை என்னவாக இருக்க வேண்டும் என்பதையும், இத்தகைய குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க ஒரு குற்றவாளி எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிக் கிறது. இவ்வாறு, குற்றவியல் சட்டம் என்பது சமுதாயத்தின் இறையாண்மை விருப்பத்தின் வெளிப்பாடாகும். இருப்பினும், அத்தகைய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நடைமுறை யதார்த்தங்களிலிருந்து பிரிக்கப்பட்டதல்ல. நீதியை வழங்குவதற்கு நுணுக்கமான அணுகு முறை தேவைப்படுகிறது. இந்த நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கின் தனித்தன்மைக்கு ஏற்ப தனது முடிவுகளை வடிவமைக்கிறது: அவசிய மான இடங்களில் உறுதியுடனும் கண்டிப்புடனும், தேவைப்படும் இடங்களில் கருணையுடனும் செயல்படுகிறது. முடிந்தவரை ஒரு சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வருவதும் சமுதாயத்தின் நலனுக்கு உகந்தது. நீதியரசர் கார்டோசோவின் கூற்றிலிருந்து உத்வேகம் பெற்று, சட்டத்தின் நோக்கம் குற்றவாளியைத் தண்டிப்பது மட்டு மல்லாமல், சமூக ஒழுங்கில் நல்லிணக்கத்தை யும் மறுசீரமைப்பையும் உறுதி செய்வதும் ஆகும் என்று நாங்கள் கருதுகிறோம்.

7. இத்தகைய பார்வையை மனதில் கொண்டு, நீதி, குற்றத்தடுப்பு மற்றும் மறுவாழ்வு ஆகிய வற்றிற்கு இடையிலான போட்டி நலன்களை நாங்கள் சமநிலைப்படுத்த வேண்டியுள்ளது.

8. தகுந்த வழக்குகளில் ‘முழுமையான நீதியை’ வழங்குவதற்காக, அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்கள் இந்த நீதிமன்றத்திற்கு அசாதாரணமான அதிகாரத்தை வழங்கி யுள்ளனர். இந்த அரசியலமைப்பு அதிகாரம் மற்ற அனைத்து அதிகாரங்களிலிருந்தும் தனித்து நிற்கிறது; சட்டத்தை மிகக் கடுமையாகப் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய அநீதியான சூழல் களைத் தவிர்க்கவே இது உருவாக்கப்பட்டது.

9. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் படி, மேல்முறையீட்டாளர் ஒரு கொடிய குற்றத்தில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டுள்ளதால், மேல்முறையீட்டாளருக்கும் அவரது மனைவிக்கும் இடையிலான சமரசத்தின் அடிப்படையில் மட்டும் இந்த வழக்கின் நடவடிக்கைகளை ரத்து செய்ய முடியாது. ஆனால், கருணை மற்றும் இரக்கத்திற்காக மேல்முறையீட்டாளரின் மனைவி எழுப்பும் குரலைப் புறக்கணிப்பது, எங்கள் கருத்துப்படி, நீதியின் நோக்கத்தை நிறை வேற்றாது. சட்டத்தை மீறிய மிகக் கடுமையான குற்றவாளிகள்கூட, தகுந்த வழக்குகளில் நீதிமன்றங்களிடமிருந்து கருணையுடன் கூடிய நீதியைப் பெறுகிறார்கள். இங்குள்ள விசித்திர மான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நடைமுறை யதார்த்தம் மற்றும் இரக்கம் ஆகியவற்றை இணைக்கும் ஒரு சமநிலையான அணுகுமுறை அவசிய மாகிறது. மேல்முறையீட்டாளரும் பாதிக்கப்பட்ட வரும் சட்டப்பூர்வமாகத் திருமணமானவர்கள் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் ஒரு குடும்ப மாக வாழ்ந்து வருகின்றனர். போக்ஸோ சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய மேல் முறையீட்டாளரின் குற்றத்தைப் பரிசீலிக்கும் போது, அந்தக் குற்றம் காமத்தால் ஏற்பட்டதல்ல, மாறாக அன்பினால் விளைந்தது என்பதை நாங்கள் உணர்கிறோம். பாதிக்கப்பட்ட பெண்ணே, தான் சார்ந்திருக்கும் மேல்முறையீட்டாளருடன், அவர் மீது ‘குற்றவாளி’ என்ற அழிக்க முடியாத கறை இல்லாமல், அமைதியான மற்றும் நிலை யான குடும்ப வாழ்க்கையை வாழ விரும்புவ தாகத் தெரிவித்துள்ளார். கிரிமினல் நடவடிக்கை களைத் தொடர்வதும், மேல்முறையீட்டாளரைச் சிறையில் அடைப்பதும் இந்தக் குடும்ப அமைப்பைச் சிதைப்பதுடன், பாதிக்கப்பட்ட பெண், கைக் குழந்தை மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்கே ஈடுசெய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தும்.

10. எனவே, சட்டமானது நீதியின் நோக்கத்திற்கு வழிவிட வேண்டிய ஒரு வழக்கு இது என நாங்கள் கருதுகிறோம்.

11. அதன்படி, மேற்கூறிய காரணங்கள், விசாரணைக்குப் பிந்தைய முன்னேற்றங்கள் மற்றும் முழுமையான நீதியை வழங்கும் நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் பிரிவு 142–ன் கீழ் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேல்முறையீட்டாளர் மீதான குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனை உள்ளிட்ட அனைத்து கிரிமினல் நடவடிக்கைகளையும் ரத்து செய்வது பொருத்தமானது என நாங்கள் கருதுகிறோம். அதற்கேற்ப உத்தரவிடப்படுகிறது.

12. மேலும், மேல்முறையீட்டாளரின் மனைவி மற்றும் குழந்தையின் நலனைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் தனது மனைவியை யும் குழந்தையையும் கைவிடக் கூடாது என்றும், அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்களை கண்ணியத்துடன் பராமரிக்க வேண்டும் என்றும் ஒரு குறிப்பிட்ட நிபந்தனைக்கு அவரை உட்படுத்து கிறோம். எதிர்காலத்தில், மேல்முறையீட்டாளர் தரப்பில் இதில் ஏதேனும் தவறு நேர்ந்து, அது அவரது மனைவி அல்லது குழந்தை அல்லது புகார்தாரரால் இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், அதன் விளைவுகள் மேல்முறையீட்டாளருக்கு அத்தனை கசப்பான தாக இருக்காது (மிகக் கடுமையானதாக இருக்கும்).

13. மேல்முறையீட்டாளர் சரணடைவதி லிருந்து விலக்கு அளித்து வழங்கப்பட்ட இடைக் கால உத்தரவை நாங்கள் நிரந்தரமாக்குகிறோம் மற்றும் அவரை பிணைப் பத்திரப் பொறுப்பு களிலிருந்து விடுவிக்கிறோம்.

14. அதன்படி, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

15. இந்த உத்தரவானது, எங்கள் முன் வெளிப்பட்ட தனித்துவமான சூழ்நிலைகளில் வழங்கப்பட்டது என்பதால், இது மற்ற வழக்கு களுக்கு ஒரு முன்மாதிரியாகக் கருதப்படக் கூடாது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# அடமானமும் அது தீர்க்கப்படுதலும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.எஸ்.சதீஸ்குமார்**
**மாண்புமிகு நீதிபதி திரு.சந்தீப் மேத்தா**
**உ.சீ.ம.எண் 3348/2024**
**நாள்: 4.11.2024**
**(2024 (6) CTC 660)**

**1.ரமேஷ் ...மனுதாரர்**

**–எதிர்–**

**இ.புருஷோத்தமன் ...எதிர்வழக்கீட்டாளர்**

**எம்.ஆர்.ஜோதிமணி**
மனுதாரரின் வழக்கறிஞர்

**பி.முத்துசாமி**
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.சீ.ம. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை** : Tr.O.P.No. 7/2008 முதன்மை கீழ்நிலை நீதிபதி காஞ்சிபுரம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கோப்பில் உள்ளது. இதில் உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டு கா.ம.எண் 84/2020, 5.6.2024இல் பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையை தள்ளுபடி செய்யக் கோரி இந்திய அரசியலமைப்பின் உறுப்பு 227ஆம் பிரிவின்படி மனு முன்னிடப் பட்டது.

## தீர்ப்பு

1. சீராய்வு மனுவில் 5.6.2024 தேதியிடப் பட்ட ஆணை எதிர்க்கப்படுகிறது. இது முதன்மை கீழ்நிலை நீதிபதியினால் காஞ்சிபுரத்தில் நிறை வேற்றுதல் எண் 84/2020 முன்னிடப்பட்டது. மனுதாரரால் பிறப்பிக்கப்பட்ட Tr.O.P.No. 7/2008 இனை நிறைவேற்ற மறுக்கப்பட்டது. இது காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதன்மை கீழ்நிலை நீதிபதியின் கோப்பில் உள்ளது.

**2. சுருக்கமாக பொருண்மைகள் தற்போதைய சீராய்வு மனுவை முன்னிடுவதற்கான பின் வரும் காரணங்கள்:** மனுதாரர் சாதாரண அடமானத்திலுள்ள எதிர்வழக்கீட்டாளர் சார்பாக ரூ.2,00,000க்கு 11.11.2005 அன்று ஏற்படுத்தியிருந்தார். அது ஆவண எண் 3261/ 2005இல் பதிவு செய்யப்பட்டிருந்தது.இதில் மனுதாரரால் உடன்பட்டதாவது அடமான ஆவணத்தின்படி சொல்லப்பட்ட அடமானத் தொகையை 18.5 விழுக்காடு ஆண்டுக்கு என்று திருப்பிச் செலுத்தப்படும் என்பது. இதில் உடன்பாடு மனுதாரர் இதனை 2 ஆண்டு காலத்திற்குள் திருப்பி செலுத்துவார் என்பது. 2 ஆண்டுகளுக்குப் பின்னர் மனுதாரர் எதிர்வழக் கீட்டாளரை அடமானத் தொகையை பெற்றுக் கொண்டு ஆவணத்தை திருப்பியளிக்க கோரி யுள்ளார். எனினும், இதனை எதிர்வழக்கீட்டாளர் ஏற்கவில்லை. இதன் காரணமாக சட்ட அறிவிப்பு அளிக்கப்பட்டது. வழக்கறிஞர் மூலமாக 12.02.2007 அன்று.

3.இவ்வாறு சட்ட அறிவிப்பு அளிக்கப்பட்ட பின்னர் எதிர்வழக்கீட்டாளர் தொகையைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் மனுதாரர் முதன்மை மனு Tr.O.P.No. 7/2008இனை முன்னிட்டார். இது காஞ்சிபுரத்தில் முதன்மை கீழ்நிலை நீதிமன்றக் கோப்பில் உள்ளது. இதில் 1882 சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி பின்வரும் உய்திகள் கோரப்பட்டன.

அ) அடமான ஆவணத்தின்படி செலுத்தத் தக்க தொகையினை வட்டியுடன் வைப்பீடு செய்ய அனுமதி கோரப்பட்டது.

ஆ) எதிர்வழக்கீட்டாளர்/அடமான அளித்த வருக்கு இது தொடர்பான ஒப்புகை அளிக்க எழுத்துமூலமாக எதிர்வழக்கீட்டாளர்/அடமான தாரர் 11.11.2005 தேதியிட்ட அடமான ஆவணத் கையொப்பு அதனை உரிமை மாற்றம் செய்து விடுவர் என்றும் அவரது உரித்தங்கள் முடிவுறுத்தப்படும் என்றும் எழுத்து மூல உறுதி கோரப்பட்டது. அதாவது சாதாரண

அடமான ஆவணம் முழுவதுமாக முடிவுறுத்தப் படுவதாக.

4. மனுதாரர்/அடமானதாரர் ரூ.2,77,000 தொகையினை அறிவிப்பு உரியவாறு சார்வு செய்யப்பட்ட பின்னரும், எதிர்வழக்கீட்டளர் நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகவில்லை. எனவே, தரப்பினரின்றி கீழ்நிலை நீதிபதி 11.4.2008 தேதியிட்ட ஆணை மூலமாக இதை அனுமதித்தார். சொல்லப்பட்ட ஆணை எதிர்க்கப் படவில்லை. மனுதாரர் நிறைவேற்றுதல் மனு நடவடிக்கையினை நி.ம.எண் 84/2020இல் கோரியது இது. காஞ்சிபுரம் நீதிமன்றக் கோப்பில் உள்ளது.

5. நிறைவேற்றுதல் நடவடிக்கைகளிலும் எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரர் தரப்பினரின்பேரில் இருந்துள்ளார். முதன்மை கீழ்நிலை நீதிபதி, எனினும் நிறைவேற்றுதல் மனுவை தள்ளுபடி செய்துள்ளார். அதன் முக்கிய காரணம் முதன்முதலில் பரிகாரம் எதுவும் கோரப் படவில்லை என்பதனால் அதாவது ஒப்புகைச் சீட்டின் நிறைவேற்றகை அடமானத்தை முழுமை யாகச் செலுத்துதல் எதிர்வழக்கீட்டாளர்/அடமான தாரர் அத்தகைய பற்றுகைச் சீட்டை அளித்து நிறைவேற்றத் தவறியுள்ளார். நீதிபதியின் கருத்தாவது, குறித்த வகை நிறைவேற்றுதல் இன்றி முதன்மை மனுவை கோருதல் நிறைவேற்றுதல் மனு செல்லத்தக்கதல்ல என்பது. மேலும் அடமானம், பெற்றவர் அடமானத் தொகையைப் பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே தனி நீதிபதியின் ஆணையின் மீது ஆதாரம் வைக்கப் பட்டது. இது மதுரை நீதியர் ஆய நீதிமன்றத்தின் 25.10.2019 தேதியிடப் பட்டது. பொள்ளாச்சி அம்மாள் –எதிர்– சரஸ்வதி அம்மாள் 2020 (1) MWN (உரிமையியல்) 782 உ.சீ.ம.(PD) (MD) No.1468/2012, 25.10.2017 தேதியிடப் பட்டது. முதன்மை கீழ்நிலை நீதிபதி காஞ்சிபுரம் நிறைவேற்றுதல் மனுவின் தள்ளுபடி செய்தது. நி.ம.எண் 84/2020 ஆணை 3.6.2024 தேதியிடப்பட்டது இந்த சீராய்வு.

6. திரு.எம்.ஆர்.ஜோதிமணியன், உரிமை யியல் சீராய்வு மனு அளித்தவருக்காக மற்றும் திரு.பி.முத்துசுவாமி எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்.

7. மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளிப்ப தாவது அது ஒரு சாதாரண அடமானம் எப்தை அடமானத் தொகை தொடர்பாகத் தரப்பின ரிடையே எந்தப் பூசலும் இல்லை மற்றும் சாதாரண அடமானத்திற்கான வட்டி செலுத்தத் தக்கது. எதிர்வழக்கீட்டாளர் நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகத் தவறியுள்ளார் மற்றும் முதன்மை மனுவையும் எதிர்க்கவில்லை. இதில் அடமானத் தொகையைப் பெற விருப்பம் உள்ளதாகவே கொள்ளப்படும். கீழ்நிலை நீதிமன்றம் ஓர் ஆணையினை பிறப்பித்துள்ள போது, அதில் எதிர்வழக்கீட்டாளரை முதன்மை உரிமை மூல ஆவணத்தை திருப்பியளிக்கப் பணிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒப்புகைச் சீட்டினை அளிக்குமாறு கோரப்பட்டது. அதாவது அடமானத் தொகைக்காக, அதாவது அடமானத் தொகையை பெற்ற பின்னர், அதாவது வைப்பீட்டுத் தொகை யுடன் வட்டி இவை கீழ்நிலை நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது. நிறைவேற்றுதல் நீதிமன்றம் நிறைவேற்றுதல் மனுவினை தள்ளுபடி செய்திருத்தல் வேண்டும்.

8. மாறாக, எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் வாதமாவது, பிரிவு 83, சொத்து மாற்றுச் சட்டத்தின் படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதிர்வழக்கீட்டாளர்/ அடமானம் பெற்றவருக்கு எதிராகப் போட முடியாது. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 83 பிரிவு செயற்பட அடமானம் பெற்றவர். அவ்வாறு வைப்பீட்டு செய்யப்பட்ட பணத் தொகையில் முழுமையான தொகையாக அதாவது அடமானத் தொகையாக ஏற்கிறார் என்று தனது உளத் தேர்வை ஆணை பிறப்பிக்கப்படும் அதில் அடமானதாரரை அந்த சீட்டுத் தொகையை பெற்று அடமானத்தின் கீழ் செலுத்தத்தக்க தொகையாக, முழுமையாக விடுவிப்பு செய்ய பணிக்கப்படுவார். இல்லையெனில், நீதிமன்ற மானது விசாரணை எதனையும் செய்ய அந்தக் கடமைப் பொறுப்பில் இல்லை. இத்தகைய விசாரணை எதுவும் 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவின்படி அத்தகைய விசாரணை எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

9. எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரரின் வழக்கறிஞர் அவரது வாதத்திற்கு ஆதரவாக இந்த நீதிமன்ற ஆணையை உறுதியாக நம்பினர். பொள்ளாச்சி அம்மாள் –எதிர்– சரஸ்வதி அம்மாள் வழக்கில் 2020 (1) (MWN) (உரிமையியல்) 782, உ.சீ.ம. (PD) (MD) எண் 1468/2012, 25.10.2019 தேதியிடப்பட்டது.

10. நான் எதிரெதிர் பணிந்தனுப்புதல்களைக் கருதுகை செய்துள்ளேன் மற்றும் கிடைக்கத்தக்க பொருட்பாடுகளை கவனமாகக் கூர்ந்தாய்வு செய்துள்ளேன்.

11. பொருண்மையானது சாதாரண அடமான ஆவணம் மனுதாரரால் நிறைவேற்றப் பட்டது என்பதில் எதிர்வழக்கீட்டாளர் சார்பாக எந்த பூசலும் இல்லை. சாதாரண அடமான ஆவணத்தின் 11.11.2005 தேதியிட்டதில் ஒருபடி தட்டச்சு செய்யப்பட்ட தாள்களுடன் இணைக்கப் பட்டுள்ளது. அதுவே மனுதாரர் சாதாரண அடமான ஆவணத்தை ரூ.2,00,000க்கு நிறைவேற்றியுள்ளார் என்பதை குறிக்கிறது. இதில் இதனை திருப்பிச் செலுத்த அதுவும் 18% ஆண்டுக்கான வட்டியுடன். இது தரப்பினர் களிடையே உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அதாவது அடமானத் தொகை 2 ஆண்டு காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்பது மனுதாரர் ஒரு சட்ட அறிவிப்பினை 2 ஆண்டுகளுக்குப் பின்னர் அனுப்பியுள்ளார். இதில் அடமானத் தொகையை வட்டியுடன் செலுத்த உட்கருத்துக் கொண்டுள்ளதாக வெளிப் படையாக கூறப்பட்டிருந்தது. இது எதிர்வழக் கீட்டாளர் அடமானதாரரால் ஏற்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் மனுதாரர்/அடமான தாரர் 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி முதன்மை மனுவை முன்னிட்டு உள்ளார். அந்த நடவடிக்கைகள் எதிர் வழக்கீட்டாளர்/அடையாளதாரர் தரப்பினரின்றி உள்ளது. அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட பின்னரும். எனவே, மனு அனுமதிக்கப்பட்டது. மனுதாரர்/அடமானதாரரால் கோரப்பட்டவாறு 11.4.2008 அன்று முதன்மை மனுதாரரும் கோரப்பட்டவை பின்வருமாறு.

10. மனுதாரர் / அடமானதாரர் கோருவது நீதிமன்றமானது பின்வருவனவற்றை செயற் படுத்த கோரப்பட்டது.

(1) மனுதாரர்/அடமானதாரர் ரூ.2,77,100இனை சாதாரண அடமான ஆவணம் 11.11.2005 தேதியிடப்பட்டதன் பேரில் வைப்பீடு செய்யக் கோரியும் அதாவது எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரரால் அந்த அடைமானம் முடிவடையும் வரையிலானது.

(2) எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரர் மனுதாரருக்கு/அடமானம் பெற்றவருக்கு 11.11.2005 தேதியிட்ட முதன்மை அடமானப் பத்திரத்தினை உரியவாறு ரத்து செய்து அளிக்கு மாறு பணிக்க கோரப்படுகிறது மற்றும் மூல மனு ‘B’ இணைப்பு உரிமை மூல ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதையும்.

(3) எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரரை இது பற்றிய ஒப்புகை ஒன்றை எழுத்து மூலம் நிறைவேற்ற பணிக்குமாறு எழுத்து வடிவில் அடமானதாரரின் உரித்தங்களுக்கு மாறாக அடமான ஆவணத்தை ஒட்டி 11.11.2005 தேதியிட்டதன் மூலம் எந்த உரித்தமும் உரிமை மாற்றம் செய்யப்படவில்லை என்று, அதுவும் அடமானம் முழுவதுமாக தீர்க்கப்பட்டது என்று எழுதி அளிக்க பணிக்கப்படுகிறது.

(4) இந்த மனு தொடர்பான செலவை அளிப்பதற்கும் மற்றும்

(5) அத்தகைய தக்கதெனக் கருதுகிற ஆணையை பிறப்பித்தல் அந்த சூழ்நிலை களுக்குத் தக்கதானதை

12. மனுதாரர்/அடமானதாரர் சார்பான ஆணை இணங்கி நடக்கப்படவில்லை. நிறைவேற்றுதல் நடவடிக்கை தொடங்கப்பட இருந்தது. அதாவது மனுதாரர்/அடமானதார ரால் கீழ்நிலை நீதிமன்றம் மூல மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. அதாவது 1882ஆம் ஆண்டு சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி முன்னிடப்பட்ட மனு இதற்கான முக்கிய காரணம் முதன்மை மனுவில் உய்தி எதுவும் கோரப்படவில்லை என்பதால், நீதிமன்றமானது ஒப்புகை/பற்றுகைச் சீட்டினை அடமானத் தொகைக்காக நிறைவேற்றுதல் வேண்டும். ஆணையானது நீதிமன்ற ஆணை அடிப்படையிலானது அதாவது பொள்ளாச்சி அம்மாள் –எதிர்– சரஸ்வதி அம்மாள், 2020 (1) MWN உரிமையியல் 782, உ.சீ.ம.(PD) (MD) எண் 1468/2012, 25.10.2019 தேதி யிடப்பட்டது.

13. முதலில் தள்ளுபடி செய்வதற்கான காரணம் தொடர்பாக. இந்த நீதிமன்றம், கருதுவது, நிறைவேற்றுதல் நீதிமன்றம், தனது கவனத்தை செலுத்தாது, நிறைவேற்றுதல்

மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. முதன்மை மனுவில் Tr.O.P.No.7/2008இல் கோரப் பட்டது. இதனைத் தெளிவாக்குகிறது. இதில் கோரிக்கை பணிப்புரை பிறப்பிக்கக் கோருவது மட்டு மல்லாது, எதிர்வழக்கீட்டாளர்/அடமானதாரரை மனுதாரருக்கு அவரது முதன்மை அசல் அடமான ஆவணம் 11.11.2005 தேதி யிட்டதை உரியவாறு ரத்து செய்து அளிக்கவும் இது பற்றிய ஒப்புகையை நிறைவேற்றவும், அடமானச் செலுத்தங்களை முழுமையாக செலுத்தவும், கோரப்படுகிறது. எனவே, விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதல்கள் மனுதாரரால் எந்த கோரிக்கையும் வேறு இல்லை. அதாவது ஒப்புகையை/பற்றுச் சீட்டை அளிக்க எனவே இது பற்றி நீதிமன்றம் கவனம் உரியவாறு செலுத்தவில்லை.

14. இவ்வாறு இருக்க, வேறு காரணம் தள்ளுபடி செய்வதற்கு இது மனுதாரர்/அடமான தாரருக்கு சரியற்றதாக உள்ளது. அதாவது நீதிமன்ற ஆணையைப் பின்பற்றி பொள்ளாச்சி அம்மாள் –எதிர்– சரஸ்வதி அம்மாள் 2020 (1) (உரிமையியல்) 782, உ.சீ.ம.(PD)(MD) எண் 1465/2012, 25.10.2019 தேதியிடப்பட்டது.

15. இதில் தொடர்புற்றதாவது பொள்ளாச்சி அம்மாள் வழக்கில் இந்த நீதிமன்றம் கூறிய தாவது 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி விண்ணப்பம் முன்னிடப் பட்டும் அதாவது தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தது. அடமானதாரர் தொகையை ஏற்காதிருப்பாரானால் மற்றும் அதனை பெறுவதில் விருப்பம் தெரிவிக்காதிருந்தால், அதாவது அடமானம் முழுவதற்குமான தொகை அப்போது நீதிமன்றம் விசாரணை ஒன்றை செய்யும் கடப்பாடு ஏற்படாது. அதாவது 83ஆம் பிரிவில் எதிர்பார்ப்ப தில்லை. எனவே, அடமானதாரர் தனது பரிகாரத்தை பெற முயற்சிக்க வேண்டியது. மேற்சொல்லப்பட்ட கருத்து என்.கோவிந்தசாமி, ஆர்.பக்கிரி 1983 (2) செ.ச.ப.207 வழக்கில் தீர்ப்பிலிருந்து பெறப்பட்டது.

16. மேற்சொல்லப்பட்ட தீர்ப்பினைக் கூர்ந் தாய்வு செய்வதன்பேரில் நிறைவேற்றுதல் நீதிமன்றம் கருத்தாவது பொருண்மைப்படி இந்த சட்டநிலையை புரிந்து கொள்ளவில்லை. மேற் சொல்லப்பட்ட தீர்ப்பு தரப்பினர்களிடையே யான பூசல் தொடர்பானது. அடமானதாரர், வைப்பீட்டிற்காக உடன்படவில்லை. அதுவும் அந்தத் தொகை முழுவதற்குமான குறிப்பாக. இத்தகைய நிலை யில், மேற்சொல்லப்பட்ட ஆணை பிறப்பிக்கப் பட்டது. 1882 சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் வகைமுறைகளின் குறிப்பு பின்வருமாறு படிக்கப்படுகிறது.

“**83.அடமானத்தின்பேரில் செலுத்தத் தக்க பணம், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யும் அதிகாரம்**: அடமானம் அது தொடர்பாகவும் செலுத்தத்தக்க முதன்மைத் தொகை மீட்பு செய்வதற்கான வழக்கு அடமான சொத்து தொடர்பாக தடையிருப்பின் அல்லது வேறு எவருக்கும் வழக்கிடும் உரிமையிருக்கும்போது அவர் எந்த நீதிமன்றத்திலும், வழக்கிட அடமான தாரர் தொடர்பாக செலுத்துவது கொடுபட உள்ள தொகையை சொத்து வழக்கிடலாம்.

அடமானதாரர் வைப்பீடு செய்யப்பட்ட பணத்தின் மீதான உரிமை: நீதிமன்றமானது, அதன்பேரில், எழுத்துமூல அறிவிப்பை வைப்பீடு தொடர்பாக அடமானதாரருக்கு சார்பு செய்யும் மற்றும் அடமானதாரர் ஒரு மனுவை முன்னிடு வதன் பேரில் அதில் அந்தத் தொகையை குறிப்பிட்டு அதாவது அடமானத்தின் பேரில் கொடுபட உள்ள தொகை மற்றும் அவர் அப் பணத்தை பெறுவதற்கான விருப்பம் இதன்படி அதனை முழுவதுமாக விடுவிப்பது மற்றும் அதனை வைப்பீடு செய்வதன்பேரில் அடமான ஆவணம் மற்றும் அனைத்து ஆவணங்கள் அவருடைய உடைமையில் உள்ளவை. அடமான சொத்து தொடர்பானவை அடமானதாரருக்கு ஒப்படைக்கப்படும் அல்லது மேற்சொல்லப் பட்டவாறு வேறு ஒருவரிடம் ஒப்படைக்கப்படும்.

அடமானதாரர் அடமானச் சொத்தினை உடைமையில் கொண்டிருக்கிறவிடத்து, நீதிமன்றம் அவ்வாறு வைப்பீடு செய்த தொகையை அவருக்கு செலுத்துவதற்கு முன்பு அவரை உடைமையை ஒப்படைக்குமாறு பணிக்கும் அதன்படி அடமானம் பெற்றவர் அந்த உடைமையை உரிமை மாற்றும் செய்தளிப்பார் அல்லது 3ஆம் நபருக்கு அடமானதாரரின் பணிப்புரைப்படி அல்லது நிறைவேற்றி அதற்கான உரிய ஒப்புகையை எழுத்துமூலம் பெறுவார். அதாவது மாற்றப்பட்ட உரிமைகள் முடிவுக்கு வந்தது பற்றி

17. மேற்சொல்லப்பட்ட வகைமுறை இதனைத் தெளிவாக்குகிறது. முதன்மைத் தொகை கொடுபட வேண்டிய நேரத்தில் மற்றும் மீட்புக்கான வழக்கிடப்படுவதற்கு முன்பு, அடமானச் சொத்துக்குத் தடை ஏற்படுத்தப் பட்டது. அடமானதாரர் அல்லது வேறு ஆள் எவரும் அதாவது வழக்கிடும் உரிமை பெற்ற எவரும் நீதிமன்றம் எதிலும் தொகையை வைப்பீடு செய்யலாம். அதாவது இவர் ஏற்கெனவே வழக்கு தொடுத்திருக்கும் நீதிமன்றத்தில், அதாவது அடமானத்தில் கொடுபட வேண்டிய எஞ்சிய தொகை தொடர்பாக. அத்தகைய விண்ணப்பத்தின்பேரில், நீதிமன்றமானது எழுத்துமூல அறிவிப்பினை வைப்பீடு செய்யப் பட்ட தொகை தொடர்பாக அறிவிக்கையை சார்பு செய்யும் அடமானம் வைத்தவர். அவர் பணத்தைப் பெற விருப்பம் உடையவரானால். அதாவது முழுவிடுவிப்பு அளித்து தொகையைப் பெற அத்தலைப்பீடு நீதிமன்றத்தின் வைப்பீடு செய்யப்பட்டதை பெற்று அனைத்து ஆவணங் களையும் அவர் திருப்பியளித்தல் வேண்டும். அடமான ஆவணம் உள்ளடங்கலாக அவரது உடைமையில் உள்ளவற்றை அடைமானம் உடைமை அடமானமாகயிருப்பின், அடையாளச் சொத்தை மறு ஒப்படைப்பு செய்ய ஆணை யிடப்படும். ஐயமின்றி அடமானதாரர் பணத்தை ஏற்று முழுவிடுவிப்பை அடமானம் தொடர்பாக அளிப்பார். இதற்கு 1882 சொத்து ரிமை மாற்றுச் சட்டத்தின் 82ஆம் பிரிவின் வகைமுறையை செயற்படுத்துவது தேவை யாகிறது. அதாவது அடமானதாரருக்கான பணிப்புரைக்கு இணங்க.

18. இந்த குறிப்பிடப்பட்ட வழக்கில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டபோதிலும், அதாவது எதிர் வழக்கீட்டாளர்/அடமானப் பெற்றவர்க்கு அவர் முன்னிலையாகத் தவறியுள்ளார் அல்லது வழக்கறிஞர் மூலமாக முன்னிலையாகாதபோது தரப்பினரின்றி நடவடிக்கைகள் செயற்படுத்தப் படும்போது அந்த தொகை வைப்பீடு செய்யப் பட்டது. முழுவதுமாக ஏற்கப்பட்டது. அடமானப் பணம் அதனை விடுவிப்பது தொடர்பானது. அடமானம் ரூ.2,00,000 மற்றும் இதற்காக அளிக்கப்பட்ட உடன்பட்ட வட்டி வீதம் 18 சதவீதம் ஆண்டுக்கு அந்தத் தொகை மனுதாரர்/ அடமானம் பெற்றவரால் இரண்டு ஆண்டு களுக்குப் பின்னர் செலுத்த உடன்பட்டது. எதிர்வழக்கீட்டாளர் அடையாளம் அளித்தவர் வேண்டுமென்றே வராதிருந்தார் மற்றும் இதனால் தரப்பினரின்றி முடிவானது. இதனை இப்போது நீதிமன்றத்தில் வாதிட முடியாது. அதாவது அடமானத்தை முழுவதுமாக விடுவிக்க தான் ஆயத்தமாக இல்லை என்று.

19. இதில் கவனிக்க வேண்டிய தொடர்புற்ற தாவது நிறைவேற்றுதல் நடவடிக்கைகளிலும், எதிர்வழக்கீட்டாளர்/அடமானம் அளித்தவர் தரப்பினரின்றி 28.11.2023 அன்று இருந்து உள்ளார். இந்த பொருண்மைத் தெளிவாக வெளிப்படுத்துவதாவது, எதிர்வழக்கீட்டாளர்/ அடமானம் பெற்றவர். அவர் அறிந்த சிறந்த காரணங்களுக்காக இந்த பொருட்பாட்டை எதிர்க்க முன்வரவில்லை. எந்த நிலையிலும், அடமானப் பணமானது நீதிமன்றத்தில் வரைக் கட்டுகளின்படி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த வரைக்கட்டுகளின்படி எதிர்வழக்கீட்டாளர் /அடமானம் பெற்றவர். நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகத் தவறியுள்ளார். தரப்பினரின்றி முதன்மை மனுவிலும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதில் கூறப்பட்டது. அவரது தரப்பில் இவர் செயற்படுத்த விருப்பமுள்ளவர் என்பதே. வைப்பீடு செய்தது முழுமையாக அதை நிறைவு செய்யும் வகைக் கானது. எனவே, இதில் ஏற்பட்ட முடிவாவது நிறைவேற்றுதல் நீதிமன்றம் மனுதாரர்/அடமானம் பெற்றவரின் கோரிக்கை நிராக ரிப்பது என்பது. பொள்ளாச்சி அம்மாள் –எதிர்– சரஸ்வதி அம்மாள் 2020 (1) MWN (உரிமையியல்) 782இன் தீர்ப்பு ஆதாரமாக்கப் பட்டது. அதில் உள்ள நீதிமன்ற ஆணை. இதில் தெளிவாக்கப்படுவது சட்டம் செயற்படுத்தப் படாதது. நிறைவேற்றுதல் நீதிமன்றம் இந்த நுதல் பொருட்பற்றி தவறாக சட்டத்தை புரிந்துள்ள தால் அது இயந்திர கதியில் நிறைவேற்றுதல் மனுவைத் தள்ளுடி செய்துள்ளது.

20. எனவே, இந்த நீதிமன்றம் கருதுவது, ஒருமுறை அடமானத் தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்படுவதன்பேரில் மற்றும் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. பல

ஆண்டுகளாக எதிர்க்கப்படவில்லை. எதிர் வழக்கீட்டாளர்/அடமானம் பெற்றவர். நிறைவேற்றுதல் மனு பற்றி வாதிட முடியாது. அதாவது எந்த ஆணை தன்னைக் கட்டுப் படுத்தாது என்று 1882 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் கருத்தே அடமானச் சொத்துக்கள் விடுவிக்கப்படுவதை உறுதி செய்வதே. அதாவது அடமான மீட்புக்காக தேவைப்படுகின்றன. சட்டத்தின் 83ஆம் பிரிவின்படி அதாவது நீதிமன்றத்தின் தொகையை வைப்பீடு செய்தல் மற்றும் நிறுவனத்திற்கான கோரிக்கை அடமானம் முன்னிட்டு செய்தல் மற்றும் நிறுவனத்திற்கான கோரிக்கை அடமானம் ஐயமின்றி வரைக்கட்டு களை எடுத்துரைக்கிறது. ஒருவரது விருப்பம் அல்லது மறுப்பு தெரிவிக்கப்படுகிறது. அவர் நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகிற அல்லது முன்னிலையாகி விருப்பத்தை அறிவித்தல் வேண்டும். இதில் அளிப்பு சார்பு செய்யப் பட்டுள்ளது. இவர் இதில் நடவடிக்கையினை தவிர்க்க இயலாது. அவர் வந்து எதிர்க்காதவரை அவர் வைப்பீடு தொடர்பாக பூசலிடவில்லை என்று துணிபு கொள்ளப்படும். இவர் வேண்டு மென்றே நடவடிக்கைகளை தவிர்த்துள்ளார். எனவே நிறைவேற்றுதல் ஆணை எதிர்க்கப் பட்டது. சீராய்வு நிலையில் என்பதை தள்ளுபடி செய்யத் தக்கதே நிறைவேற்றுதல் நீதிமன்றம் நிறைவேற்றுதல் நடவடிக்கையினை தொடர்வதே சரியானதாகும்.

அறுதியாக, உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்படுகிறது மற்றும் 5.6.2024 தேதி யிடப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. நி.ம.எண் 84/2020 சொ.உ.தே.ச. எண் 7/2008 தள்ளுபடி செய்யப்படுகிறது. முதன்மை கீழ்நிலை நீதிபதி காஞ்சிபுரம் நிறைவேற்றுதல் மனுவினை வகை செய்ய பணிக்கப்படுகிறது. நற்குறிப்புகளின்பேரிலும் சட்டத்திற்கிணங்கவும் இரண்டு மாதங்களுக்குள் அதாவது ஆணையின் படி பெறப்பட்ட தேதியிலிருந்து 2 மாதங்களுக்குள் அதாவது ஆணையின்படி பெறப்பட்ட தேதியி லிருந்து 2 மாதங்களுக்குள் செலவுத் தொகை யின்றி.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## சாலை விபத்து இழப்பீட்டுத் தொகை இழப்பை ஈடு செய்யாது உச்சநீதிமன்றம்

சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு அளிக்க பிப்ரவரி 6ஆம் தேதி உத்தரவிட்டவிட்ட உச்சநீதிமன்றம். இத்தகைய விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புக்கு அளிக்கப் படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது குடும்பத்தினரின் இழப்பை ஈடு செய்யாது என்று தெரிவித்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு சாலை விபத்தில் உயிரிழந்த வேலு என்ற நபரின் மரணத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு கோரி, சென்னை மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தை அவரின் குடும்பத்தினர் அணுகினர்.

லாரி மோதி வேலு உயிரிழந்த நிலையில், அந்த லாரி பார்தி ஆக்ஸா ஜெனரல் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்தது. வேலுவின் குடும்பத்துக்கு ரூ.9.37 லட்சம் இழப்பீடு வழங்கு று அந்தக் காப்பீட்டு நிறுவனத்துக்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த இழப்பீட்டை ரூ.10.51 லட்சமாக உயர்த்தி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்தத் தொகையை மேலும் அதிகரிக்கக் கோரி, வேலுவின் குடும்பத்தினர் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, சாலை விபத்தில் ஒருவரின் உயிரிழப்புக்கு அளிக்கப்படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அது அந்த இழப்பை ஈடு செய்யாது. உயிரிழந்தவரை சார்ந்திருந்த குடும்ப உறுப்பினர் களுக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் குறைக்கும் முயற்சியாக இழப்பீடு வழங்கப்படுகிறது.

குடும்பப் பிணைப்புகள் திடீரென முறிந்து போகும் சந்தர்ப்பங்களில், மனித எதார்த்தங் களுக்கு ஏற்ப சட்டம் செயல்பட வேண்டும் என்று தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து மனுதாரருக்கான இழப்பீட்டை ரூ.20.80 லட்சமாக உயர்த்தி அளிக்க காப்பீடு நிறுவனத்துக்கு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது.

**நன்றி: தினமணி 7.2.2026**

# பாகப்பிரிவினை வழக்கில் சில சொத்துக்கள் அதிகார எல்லை வரம்பிற்கு வெளியே உள்ளதென சட்டப்பூர்வ அனுமதி பெறாமல் தொடர்வது செயல்முறையை விழலாக்கும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.எஸ்.எம்.சுப்பிரமணியம்
மாண்புமிகு நீதிபதி திரு.சி.சரவணன்
O.S.A.No.205/2022 &
C.M.P.Nos.16219, 16220 & 12433/2022
நாள்: 10/09/2025
(2025 (6) CTC 870)

ஆர்.மணிகண்டன்,
த/பெ (லேட்) எம்.ராமலிங்கம் ..மேல்முறையீட்டாளர்

–எதிர்–

எஸ்.ஸ்ரீதேவி, க/பெ. எல்.செந்தில்குமார்
ஆர்.மகேஸ்வரி, க/பெ. கே.ராஜா
ஆர்.சாவித்ரி, க/பெ. (லேட்) எம்.ராமலிங்கம் ...எதிர்மனுதாரர்கள்

**திரு எஸ்.செந்தில்நாதன், வழக்கறிஞர்**
**மேல்முறையீட்டாளருக்காக**

**திரு டி.மோகன், மூத்த வழக்கறிஞர்,**
**திரு கே.சுரேந்தர், வழக்கறிஞருக்காக.**
1, 2 வது எதிர்மனுதாரர்களுக்காக

3வது எதிர்மனுதாரருக்காக – யாரும் ஆஜராகவில்லை.

## தீர்ப்பு:

**நீதிபதி திரு.சி.சரவணன்**

1. இந்த அசல் தரப்பு மேல்முறையீடானது, C.S.No.112 of 2021 வழக்கில் 2–வது பிரதிவாதி யால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. சி.எஸ். எண் 112/2021 வழக்கில் 1 மற்றும் 2–வது பிரதிவாதிகள், முறையே 1 மற்றும் 2–வது வாதிகள் ஆவர். இந்த சிவில் வழக்கில் 3–வது எதிர்மனுதாரர் 1–வது பிரதி வாதியாவார். இதில் 1 மற்றும் 2–வது எதிர் மனுதாரர்கள் (1 மற்றும் 2–வது வாதிகள்), மேல்முறையீட்டாளரின் (2–வது பிரதிவாதி) சகோதரிகள் ஆவர். 3–வது எதிர்மனுதாரர், மேல் முறையீட்டாளர் மற்றும் 1,2–வது எதிர்மனு தாரர்களின் தாயார் ஆவார்.

3. சி.எஸ். எண் 112/2021 வழக்கின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 17 சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காக மேற்கண்ட சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் 1 மற்றும் 2–வது எதிர்மனுதாரர்கள் அனைத்து சொத்துக்களையும் பாகப்பிரிவினைக் காகக் கொண்டு வரவில்லை.

4. 1–வது எதிர்மனுதாரர் (1–வது வாதி) சாட்சி கூண்டில் ஏறி (P.W.1 BP) சாட்சியமளித்த போது, அவரிடம் குறுக்கு விசாரணை பகுதியளவு மட்டுமே நடத்தப்பட்டது என்பது மேல் முறையீட்டாளரின் (2–வது பிரதிவாதி) வாத மாகும். அதன்பிறகு, வழக்கு 08.04.2022 அன்று நீதிமன்றப் பட்டியலுக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளர் 1–வது எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப் படாமலேயே, ஆட்சேபணைக்குரிய ‘முதற்கட்டத் தீர்ப்பு’ வழங்கப்பட்டுள்ளது.

5. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் வாதிடுகையில், வழக்கின் 4–வது பத்தியிலேயே, தங்களது தந்தை தனது சொந்தப் பெயரில் வைத்திருந்த சொத்துக்களை மட்டுமே இந்த வழக்கின் வரம்பிற்குள் கொண்டு வந்துள்ள தாகவும், தந்தையின் பெயரில் உள்ள வேறு

ஏதேனும் சொத்துக்கள் பற்றித் தெரியவந்தால், வழக்கைத் திருத்தம் செய்வதன் மூலம் அந்தச் சொத்துக்களையும் சேர்த்துக் கொள்ளும் உரிமையைத் தக்கவைத்துக் கொள்வதாகவும் 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். வழக்கின் 4-வது பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

'4. வாதிகளின் தந்தையான திரு. எம். ராம லிங்கம் 16 ஜனவரி 2017 அன்று கால மானார். அவருக்கு வாதிகளும் பிரதிவாதிகளும் சட்டப்பூர்வ வாரிசுகளாக உள்ளனர். வாதிகளின் தந்தை மறைந்த திரு.எம்.ராமலிங்கம், தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தனது சுய சம்பாத்தியத்தின் மூலம் பல அசையாச் சொத்துக்களை வாங்கியுள்ளார், அவை கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன. சில சொத்துக்கள் வாதிகளின் மறைந்த தந்தை யால், பிரதிவாதிகளின் பெயரில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ அவரது சொந்த நிதியிலிருந்து வாங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், வாதிகள் தங்கள் தந்தை தனது சொந்தப் பெயரில் வைத்திருந்த அட்டவணையில் குறிப்பிட்ட சொத்துக்களை மட்டுமே இந்த வழக்கின் வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளனர். மேலும் தங்கள் தந்தைக்குச் சொந்தமான வேறு ஏதேனும் சொத்துக்கள் குறித்துத் தெரியவந்தால், வழக்கைத் திருத்தம் செய்வதன் மூலம் அந்தச் சொத்துக்களையும் சேர்த்துக் கொள்ளும் உரிமையை வாதிகள் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்கிறார்கள்'

6. வழக்கின் அட்டவணையில் உள்ள 17 சொத்துக்களைத் தவிர, மற்றொரு சொத்து தொடர்பாக சர்ச்சை இருப்பதாகவும், அதுவும் இந்தப் பாகப்பிரிவினை வழக்கின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்றும், அது தொடர்பாக இதனுடன் தொடர்புடைய பிற நடவடிக்கைகள் இருந்தன என்பதும் மேல்முறை யீட்டாளரின் வாதமாகும்.

7. ரமணியம்மாள் என்பவரால் 2-வது எதிர்மனுதாரரின் கணவர் கே.ராஜா மற்றும் அவரது அண்ணன் மீது 'குறிப்பிட்ட செயல் திறன்' கோரி ஓ.எஸ். எண் 197/1997 (O.S.No.197 of 1997) என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அந்த வழக்கை மேல் முறையீட்டாளர் மற்றும் 1, 2-வது எதிர்மனுதாரர் களின் தந்தை, பிரதிவாதிகளின் அதிகாரம் பெற்ற முகவராக இருந்து நடத்தினார் என்பதும் மேல்முறையீட்டாளரின் வாதமாகும்.

8. இது தொடர்பாக, மேல்முறையீட்டாளர் கீழ்க்கண்ட நிவாரணங்களுக்காக சி.எம்.பி. எண்கள் 16219 மற்றும் 16220/2025 தாக்கல் செய்துள்ளார்:

சி.எம்.பி. எண் 16219/2025-ன் கோரிக்கை: சி.எஸ். எண் 112/2021 வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இதில் குறிப்பிட்டுள்ள அட்டவணைச் சொத்தை வழக்கு சொத்துப் பட்டியலில் 18-வது பொருளாகச் சேர்த்து, சொத்துப் பட்டியலைத் திருத்தம் செய்ய 2-வது எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டும்.

சி.எம்.பி. எண் 16220/2025-ன் கோரிக்கை: இந்த அசல் தரப்பு மேல்முறையீடு நிலுவையில் உள்ள நிலையில், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2-வது எதிர்மனுதாரர் பிறருக்கு விற்பனை செய்யவோ அல்லது கைமாற்றவோ கூடாது என இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

9. மேற்கண்ட சொத்து 2-வது எதிர் மனுதாரரின் (2-வது வாதி) கணவர் கே. ராஜா மற்றும் அவரது அண்ணன் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அந்தச் சொத்தும் பாகப்பிரிவினைக்கு உட்பட்டது என்று சமர்ப்பிக்கப் படுகிறது. மேலும், சி.எஸ்.எண் 112/2021 வழக்கு நிலுவையில் இருக்கும்போதே அந்தச் சொத்தை விற்பனை செய்ய (பரமாற்று செய்ய) முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் சமர்ப்பிக்கப் படுகிறது.

10. அதுமட்டுமின்றி, 1-வது எதிர்மனுதாரர் (1-வது வாதி) மற்றும் 2-வது எதிர்மனுதாரரை (2-வது வாதி) மேல் விசாரணை அல்லது குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்கப் படாமலேயே, இந்த சிவில் வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது.

11. மறுபுறம், 1 மற்றும் 2-வது எதிர் மனுதாரர்கள் சார்பில் இந்த அசல் தரப்பு மேல்முறையீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் படுகிறது. அவர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் திரு. டி. மோகன் ஆஜராகியுள்ளார். வழக்கின் அட்டவணையில் உள்ள 17 சொத்துக்கள் தொடர்பாக தரப்பினரிடையே உள்ள உரிமைகளில் எந்தத் தகராறும் இல்லை என்றும், எனவே அசல் தரப்பு விதிகளின் கட்டளை VI விதி 6 மற்றும் விதி 7-ன் கீழ் சட்டத்திற்கு உட்பட்டே நீதிமன்றம் இந்த முதற்கட்டத் தீர்ப்பை வழங்கியுள்ளது என்றும் அவர் வாதிடுகிறார். இந்த விதிகளின்படி, வழக்கிலோ அல்லது பதில் மனுவிலோ உண்மை குறித்த எந்த கேள்வியும் எழாதபோது, அல்லது ஒரு தரப்பினரால் எழுப்பப்பட்ட சட்ட ரீதியான கேள்வியை ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் தீர்மானிக்க முடியும் என நீதிபதி கருதினால், அவர் உடனடியாக வழக்கைத் தீர்மானிக்கலாம் அல்லது தீர்ப்பு வழங்கலாம்.

12. அதுமட்டுமின்றி, மேல்முறையீட்டாளர் (2-வது பிரதிவாதி) மற்றும் 3-வது எதிர் மனுதாரர் (1-வது பிரதிவாதி) தாக்கல் செய்த பதில் மனுவில், 2-வது எதிர்மனுதாரரின் கணவர் கே. ராஜா மற்றும் அவரது அண்ணன் பெயரில் இருக்கும் சொத்து குறித்து எந்தக் குறிப்பும் இல்லை என்பதால், இந்த அடிப்படையிலும் தற்போதைய மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படத்தக்கது என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

13. மேலும், சி.எஸ். எண் 112/2021 வழக்கின் அட்டவணையில் உள்ள 17 சொத்துக்களுடன் வழக்கு வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மேல்முறையீட்டின் மூலம் அதன் வரம்பை மேல்முறையீட்டாளர் விரிவாக்க முடியாது என்பதால், இந்த அடிப்படையிலும் இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படத் தக்கது என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

14. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் மற்றும் 1, 2-வது எதிர்மனுதாரர்களின் மூத்த வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களை நாங்கள் பரிசீலித்தோம்.

15. வழக்கின் மனுவைப் படிக்கும்போது, அதில் 17 சொத்துக்கள் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன என்பது தெரிகிறது. அந்தச் சொத்துக்களில் சில இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள்ளும், சில இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு வெளியேயும் உள்ளன.

16. முதற்கட்டத் தீர்ப்பைப் பிறப்பிப்பதற்கு முன்பாக, வழக்கின் 4-வது பத்தியில் கூறப்பட்டுள்ள விவரங்களை (மேலே கொடுக்கப்பட்டுள்ளவை) நீதிமன்றம் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

17. 1 மற்றும் 2-வது எதிர்மனுதாரர்கள் (1 மற்றும் 2-வது வாதிகள்), 'ஏ. கிரிதர் மற்றும் மற்றொருவர் எச்பி. ஏ. சுரேஷ் மற்றும் பிறர்' (1988 2 LW 308) வழக்கில் இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளபடி, உரிமை பட்டய பிரிவு 12-ன் கீழ் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

18. மேற்கண்ட தீர்ப்பில், இந்த நீதிமன்றத்தின் இருநீதியர் அமர்வு பின்வருமாறு கூறியுள்ளது:

'நிலம் அல்லது அசையாச் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளில், அந்தச் சொத்துக்கள் முழுவதும் உயர் நீதிமன்றத்தின் சாதாரண அசல் அதிகார வரம்பிற்குள் அமைந்திருக்கும் போது, அத்தகைய வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதில் எந்த சர்ச்சையும் இருக்க முடியாது. அதேபோல், சொத்தின் ஒரு பகுதி இந்த வரம்பிற்குள்ளும், ஒரு பகுதி வரம்பிற்கு வெளியேயும் இருந்தாலும், முன்னதாகவே அனுமதி (Leave) பெற்றிருந்தால், அத்தகைய வழக்குகளையும் உயர் நீதிமன்றம் தனது சாதாரண அசல் சிவில் அதிகார வரம்பின் கீழ் விசாரிக்கலாம் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. 'பேங்க் ஆஃப் மதுரை' வழக்கில் இந்த நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்ச் வழங்கிய விளக்கம், மற்ற இரண்டு சார்ட்டர்ட் உயர் நீதிமன்றங்களின் 'உரிமைப் பட்டய' பிரிவு 12-ன் விளக்கத்துடன் ஒத்துப் போகிறது. அந்த விளக்கங்கள் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

‘பேங்க் ஆஃப் மதுரை’ வழக்கில் எடுக்கப்பட்ட முடிவை நாங்கள் மரியாதையுடன் ஏற்றுக் கொள்கிறோம். எனவே, ‘உரிமைப் பட்டய’ பிரிவு 12–ன் நோக்கத்தை மீண்டும் புதிதாகப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. ‘பேங்க் ஆஃப் மதுரை’ வழக்கானது கற்றறிந்த நீதிபதியின் முன் வைக்கப்பட்டிருந்தால், ஒருவேளை டிவிஷன் பெஞ்சிற்கு இதைப் பரிந்துரைக்க வேண்டிய சூழலே ஏற்பட்டிருக்காது. எனவே, வாதிப்பவர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய அனுமதி பெறத் தகுதியுடையவர்கள். பிரதி வாதிகள் சிலர் இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு வெளியே வசித்தாலும், இந்த வழக்கு பிரிவு 12–ன் முதல் பகுதியின் கீழ் வருவதால், வாதிகள் அனுமதி பெறத் தகுதியுடையவர்கள் என்பதைத் தெளிவுபடுத்துகிறோம். அதன்படி, அனுமதி கோரும் இந்த மனு அனுமதிக்கப் படுகிறது.’

அதேபோல், சிவில் நடைமுறைச் சட்டத்தின் (CPC) கட்டளை II விதி 2–ன் கீழ் எதிர்மனு தாரர்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

19. வழக்கின் மனுவில் உள்ள விவரங்களின் படி, சி.எஸ். எண் 112/2021 வழக்கின் அட்டவணையில் உள்ள 17 சொத்துக்கள் தவிர, இன்னும் பல சொத்துக்கள் உள்ளன என்பதும், அதில் ஒன்று சி.எம்.பி. எண் 16219/2025–ன் பொருளாக இருப்பதும் தெரிகிறது. அதுவும் பாகப்பிரிவினை வழக்கில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மிகக் குறைந்த மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே சொத்துக்களின் ‘பகுதி பாகப்பிரிவினை’ அங்கீகரிக்கப்படுகிறது.

20. பின்வரும் சூழ்நிலைகளில் மட்டுமே சொத்துக்களின் பகுதி பாகப்பிரிவினை கோரும் வழக்குகளை நீதிமன்றங்கள் அங்கீகரித்துள்ளன:

(i) குடும்பச் சொத்தின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு மாவட்டங்களில் அமைந்திருக்கும் போது, ஒவ்வொரு மாவட்ட நிலங்களுக்கும் தனித்தனியாக பாகப்பிரிவினை வழக்குகள் தொடரலாம்;

(ii) பாகப்பிரிவினை வழக்குத் தொடரும் நேரத்தில், கூட்டுச் சொத்தின் ஒரு பகுதியை பிரிக்க முடியாத நிலை இருந்தால் அது அனுமதிக்கப்படலாம்;

(iii) விட்டுவிடப்பட்ட சொத்து அதன் இயல்பிலேயே பிரிக்க முடியாத ஒன்றாக இருந்தால்;

(iv) பாகப்பிரிவினை வழக்கில் தரப்பினராகச் சேர்க்க முடியாத அந்நியர்களுடன் இணைந்து சொத்து கூட்டாக வைக்கப்பட்டிருந்தால், அந்தச் சொத்தை விட்டுவிடலாம்; அல்லது

(v) கூட்டுச் சொத்தின் சில பகுதிகளைப் பொதுவானதாக விட்டுவிட்டு, மற்றவற்றை மட்டும் பிரிக்க இணை உரிமையாளர்கள் பரஸ்பர ஒப்பந்தம் மூலம் முடிவு செய்தால். (ஆதாரம்: ஹரே ஹரே சின்ஹா சௌத்ரி –எதிர்– ஹரி சைதன்யா சின்ஹா சௌத்ரி மற்றும் பல வழக்குகள்).

இருப்பினும், இந்த அம்சம் நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவில்லை.

21. மறைந்த திரு.எம்.ராமலிங்கத்தின் வாரிசுகளுக்கு இடையே சொத்துக்களின் 'பகுதி பாகப்பிரிவினை' கோரி இந்த வழக்கு இருப்ப தால், இந்த நீதிமன்றத்தின் அசல் தரப்பு விதி களின் கட்டளை VI விதி 6 மற்றும் 7–ன் கீழ் அவசரமான முறையில் பிறப்பிக்கப்பட்ட இந்தத் தீர்ப்பு மற்றும் ஆணை தலையீட்டிற்கு உட்பட்டது. சொத்துக்கள் அதிகார வரம்பிற்கு வெளியே இருந்தாலும், அனைத்து சொத்துக்களையும் பாகப்பிரிவினைக்குக் கொண்டு வருவது 1 மற்றும் 2–வது எதிர்மனுதாரர்களின் (வாதிகள்) கடமையாகும். மற்ற சொத்துக்கள் இருந்தி ருந்தால், சிவில் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை II விதி 2–ன் கீழ் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

22. வாதிகளின் முதல் சாட்சியிடம் (P.W.1) குறுக்கு விசாரணை நடத்தப்பட்டிருந்தால், பாகப்பிரிவினைக்குக் கிடைக்கக்கூடிய பிற சொத்துக்கள் குறித்த விவரங்களும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்திருக்கும். இருப்பினும், அந்த விசாரணை முழுமையடையவில்லை.

23. இத்தகைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த ஆட்சேபனைக்குரிய அந்த முதற்கட்டத் தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என்றும், தரப்பினர்கள் தங்கள் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கப் போதிய வாய்ப்பளித்த பிறகு புதிய முதற்கட்டத் தீர்ப்பைப் பிறப்பிக்க இந்த வழக்கை மீண்டும் அதே நீதிமன்றத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் நாங்கள் கருதுகிறோம்.

24. 2-வது எதிர்மனுதாரரின் (2-வது வாதி) கணவர் கே. ராஜா மற்றும் அவரது அண்ணன் பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்தும், அது தொடர்பான ஓ.எஸ். எண் 197/1997 வழக்கில் மேல்முறையீட்டாளர் மற்றும் 1, 2-வது எதிர் மனுதாரர்களின் தந்தை சாட்சியமளித்தது குறித்தும் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் பொருத்தப்பாடு, வழக்கின் மனு அல்லது பதில் மனுக்கள் முறையாகத் திருத்தப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும்.

25. ஓ.எஸ். எண் 197/1997 வழக்கில் தொடர்புடைய சொத்துக்கள் விற்பனை செய்யப் படக்கூடும் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ள தால், மேல்முறையீட்டாளர் (2-வது பிரதிவாதி) தனது பதில் மனுவைத் திருத்திய பிறகு, சி.எஸ். எண் 112/2021 வழக்கில் தகுந்த நிவாரணம் கோரி விண்ணப்பம் தாக்கல் செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

26. எனவே, சி.எஸ். எண் 112/2021 வழக்கில் 08.04.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆட்சேபனைக்குரிய உத்தரவு, மேற்கண்ட அவதானிப்புகளுடன் ரத்து செய்யப்படுகிறது. அதன்படி, சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக இந்த வழக்கை மீண்டும் 'மாஸ்டர்' வசம் ஒப்படைக்கவும், அதன் பிறகு முதற்கட்டத் தீர்ப்பைப் பிறப்பிக்கவும் ஏதுவாக இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்திற்குத் திருப்பி அனுப்பப் படுகிறது.

27. இவ்வாறாக, இந்த அசல் தரப்பு மேல் முறையீடு அனுமதிக்கப் படுகிறது. இதற்காக எந்தக் கட்டணமும் விதிக்கப்படவில்லை. இது தொடர்பான இதர மனுக்கள் இத்துடன் முடிக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## தமிழகத்தில் மீண்டும் சட்ட மேலவை அமையுமா?

**ஏப்ரல் 22ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை**

தமிழக சட்ட மேலவை தொகுதி மறுவரையறைக் கான ஜனாதிபதியின் உத்தரவை எதிர்த்த மேல்முறை யீட்டு மனுக்கள் மீதான விசாரணையை ஏப்ரல் 22இல் உச்சநீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது. தமிழகத்தில் சட்ட மேலவை மீண்டும் அமையுமா என்ற எதிர்பார்ப்பு உச்சநீதிமன்றத்தில் தற்போது நடைபெறும் வழக்கில் தமிழக அரசு தெரிவித்துள்ள நிலைப்பாட்டின் வாயிலாக ஏற்பட்டுள்ளது. 1986ஆம் ஆண்டு கலைக்கப் பட்ட மேலவையை மீண்டும் ஏற்படுத்தும் தீர்மானம் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் 12இல் கொண்டு வரப்பட்டு மொத்தமுள்ள 234 உறுப்பினர்களில் 155 உறுப்பினர் களின் ஆதரவுடன் நிறைவேறியது. தமிழ்நாடு சட்ட மேலவையை ஏற்படுத்தும் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அப்போதைய முதல் அமைச்சர் அனுப்பி வைத்தார். தமிழ்நாடு சட்ட மேலவை மசோதா நாடாளுமன்ற இரு அவைகளிலும் கடந்த 2010 ஆண்டு மே 4இல் நிறைவேறி, ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு பிறகு அதே ஆண்டு மே 18இல் சட்டமானது. இச்சட்டத்தையும், தொகுதி மறுவரை சார்ந்த ஜனாதிபதி உத்தரவையும் எதிர்த்து தாக்கல் செய்த பொதுநல மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் 2010 ஆண்டு டிசம்பர் 16இல் தள்ளுபடி செய்தது. தமிழக சட்ட மேலவைக்கான தொகுதி மறுவரையறை குறித்த ஜனாதிபதி உத்தரவை எதிர்த்து பாரதியார், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திண்டிவனம் ராமமூர்த்தி, பாரதீய ஜனதாவைச் சேர்ந்த வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் சார்பில் மேல் முறையீட்டு மனுக்கள் 2011ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்த மேல்முறையீட்டு மனுக்களை உச்ச நீதிமன்றம் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கோட்டீஸ்வர சிங் அடங்கிய அமர்வு விசாரித்தது. தமிழ்நாடு அரசின் சார்பில் வழக்குரைஞர் ஹரீஷ்குமாருடன், மூத்த வழக்குரைஞர் பி.வில்சன் ஆஜராகி, வழக்கின் பின்னணியை குறிப்பிட்டு, தமிழகத்தில் சட்ட மேலவையை மீண்டும் ஏற்படுத்தும் சட்டத்தையும், தொகுதி மறுவரையறை தொடர்பான ஜனாதிபதி உத்தரவையும் எதிர்த்து தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் உத்தரவை எதிர்த்து வழக்கு தொடர முடியாது என்று குறிப்பிட்டு தள்ளுபடி செய்துள்ளது. மேலவை சட்டமும், தொகுதி மறுவரை யறைக்கான ஜனாதிபதியின் உத்தரவு இருந்தும், ஆட்சி மாற்றத்தால் 9 (அ.தி.மு.க. அரசு) மீண்டும் சட்ட மேலவையை ஏற்படுத்த ஆர்வம் காட்டவில்லை.

தற்போதுள்ள தி.மு.க. தலைமையிலான அரசு மேலவையை கொண்டு வர விரும்புகிறது. ஆந்திர பிரதேசத்தில் உள்ள மேலவை தொகுதி மறுவரையறை ஜனாதிபதியின் உத்தரவை பின்பற்றி ஏற்படுத்தப்பட்டது. இந்த மாதிரியை பிற மாநிலங்களும் செயல்படுத்தி யுள்ளன என்று வாதிட்டார். மத்திய அரசின் சார்பில் மூத்த வழக்குரைஞர் ஏ.சிராஜுதீன் ஆஜராகி, இந்த மேல் முறையீடு மனுக்கள் இன்றுதான் கிடைக்கப் பெற்றன என்பதால் விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். நீதிபதிகள், விசாரணையை வருகிற ஏப்ரல் 22ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

**நன்றி: தினத்தந்தி 7.2.2026**

# 1937வது ஆண்டு சட்டம் கீழ் பாத்தியதையுள்ள இந்து ஆணின் சொத்தில் பாகப்பிரிவினை கோரிடலுக்கு 1956இன் இந்து வாரிசுரிமை சட்டம் பொருத்தப்பட முடியாது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.கே.முரளி சங்கர்**
**இமே(எம்டி) எண் 47/2019 மற்றும் உபம(எம்டி) எண் 1835/2019**
**16.4.2025**
**2025 (3) CTC 512**

**வி.ராமமூர்த்தி மற்றும் ஐவர் ...மேல்முறையீட்டாளர்கள்**

**–எதிர்–**

**சிவகாமியம்மாள் (இறந்தவர்) மற்றும் அறுவர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

**வழக்குரைஞர்கள்**

திருமதி மரியா ரோசலின்
மேல்முறையீட்டாளர்கள் சார்பில்

**திரு. ஆர்.பாஸ்கரன்**

முதுநிலை வழக்குரைஞரும் 3–7வது எதிர்மேல்முறையீட்டாளர்களது வழக்குரைஞர் திர்.எம்.சித்தார்தன் சார்பில்

1வது எதிர்மேல்முறையீட்டாளர் இறந்தாள். படிகள் எடுக்கப்பட்டன.

2வது எதிர்மேல்முறையீட்டாளர் இறந்தாள். விவரகுறிப்பு கோப்பிலிடப்பட்டு பதிவாவண மானது

**கோருகை:** முவ எண் 54/2007இல் திருச்சிராப்பள்ளி சார்பு நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 24.7.20214 தேதிய தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் திருப்பியகற்றிக் கொண்டு திருச்சி முதன்மை மாவட்ட நீதிபதியின் கோப்பிலான மேவ எண் 45/2015இல் உண்டான 5.11.2016 தேதிய தீர்ப்புரைக்கும் தீர்ப்பாணைக்கும் எதிராக இந்த இரண்டாவது மேல்முறையீடு உரிமையியல் விசாரணை முறை தொகுப்புச் சட்டப் பிரிவு 100 கீழ் தாக்கலானது

## தீர்ப்புரை

முவ எண் 54/2007 இல் திருச்சிராப்பள்ளி சார்பு நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட 24.7.20214 தேதிய தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் திருப்பியகற்றிக் கொண்டு திருச்சி முதன்மை மாவட்ட நீதிபதியின் கோப்பிலான மேவ எண் 45/2015இல் உண்டான 5.11.2016 தேதிய தீர்ப்புரைக்கும் தீர்ப்பாணைக்கும் எதிராக இந்த இரண்டாவது மேல்முறையீடு இயக்கப்படுகிறது.

2.4–9வது எதிர்வாதிகள் மேமுகள் ஆவார்கள். தாவா சொத்தில் பாகப்பிபிரிவினையும் 1/3 பங்கு ஒதுக்கீடும் கோரிக் கொண்டு வாதியாக வழக்கை முதலாவது எமேமு தாக்கலிட்டார்.

3.வசதிக்காகவும் சுருக்கத்துக்காகவும் முதலேற்பு வழக்கில் அவர்களது அந்தஸ்து/ வரிசைப் படி குறிப்பிடப்படுவார்கள்.

4. தாவா சொத்தின் முழுமையான சொத்து உரிமையராக வீரப்பிள்ளை இருந்து அவரது மரணத்துக்கு பின்னராக அவரது மகன் சோம சுந்தரம் பிள்ளை சொத்தை அடைந்து அதை துய்த்துக் கொண்டிருந்தார் என்பதும் அவரது இரு மகன்களான முதலாவது எதிர்வாதி தாண்டவராய பிள்ளையையும் 4–9வது எதிர் வாதிகளது தந்தையான சோம வள்ளியப்பனை யும் மகள் சிவகாமி அம்மாள் ஆன இங்குள்ள வாதியையும் பிரிந்து 1949வது வருடத்தில் சோமசுந்தரம் பிள்ளை இறந்தார் என்பதும் வாதிக்கு 11.2.1955 அன்று மணமாகி அவளது திருமணத்துக்கு பின்பு தாவா சொத்தில் அவள் வசித்து கொண்டிருக்கிறாள் என்பதும் சித்த மருத்துவராகவும் அவள் தொழில் செய்து

கொண்டிருந்தாள் என்பதும் தாவா சொத்தில் உடைமையும் அனுபோகமும் 4-9வது எதிர் வாதிகளது வசம் உள்ளது என்பதும் அவர்களது தந்தை சோமசுந்தரம் பிள்ளையின் இறப்புக்கு பின்பு தாவா சொத்தை பாகம் பிரித்திட அவளது சகோதரர்களை கேட்டதில் பெரியவர்களின் உதவியுடன் பாகப்பிரிவினை செய்யப்படும் என அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள் என்பதும் அவளது சகோதரர் சோம வீரப்பனின் இறப்புக்கு பின்பு அவரது சட்டபூர்வ வாரிசுகள் 4-9வது எதிர்வாதிகள் சொல்லை காப்பாற்றாமல் சொத்தை பாராதீனம் செய்யவும் வாதியை வெளியேற்றவும் முயல்கிறார்கள் என்பதும் தாவா சொத்திலிருந்து லாபத்தை வழங்க எதிர் வாதிகள் மறுத்துள்ளார்கள் என்பதும் மேலுள்ள பாகப் பிரிவினை வழக்கை தாக்கலிட வாதி நிர்பந்திக்கப்பட்டார் என்பதும் வாதியினது வழக்காகும்.

5.தரப்பினர்கள் இடையிலான உறவுமுறையை யும் தாவா சொத்து சோமசுந்தரம் பிள்ளைக்கு சொந்தமானது எனவும் அவர் 1949இல் இறந்தார் எனவும் உள்ள உறுத்துக்கூற்றுகளை அவர்கள் ஒப்புக் கொண்டு எழுத்திலான விளக்க வுரையை 4-9வது எதிர்வாதிகள் தாக்கலிட்டார்கள். சோமசுந்தரம் பிள்ளையின் இறப்புக்கு பின்பு அவரது சகோதரர் சோம வீரப்பனுக்கு சாதகமாக 15.6.1951 தேதிய உரிமை துறப்பு ஆவணத்தை முதலாவது எதிர்வாதி நிறைவேற்றியிருந்தார் என்பதும் சொன்ன சோமவீரப்பன் உரிமை துறப்பு பத்திரத்தின் பின்தொடர்கையாக அடமான கடனை திருப்பி செலுத்தியிருந்தார் என்பதும் அவரது தாயாரை இறுதிவரை பேணி யிருந்து அவளது இறுதி சடங்குகளை மேற் கொண்டிருந்து அவர்களது சகோதரி வாதியின் திருமணத்தை அனைத்து சீதனங்களையும் அவருக்கு அளித்துக் கொண்டு நடத்தி அதன் மூலம் உரிமை துறப்பு ஆவணத்தில் விதிக்கப் பட்ட அனைத்து நிபந்தனைகளை அவர் நிறைவேற்றியிருந்தார் என்பதும் இவ்வாறு சொத்தின் உரிமையாளராக்க சோம வீரப்பன் ஆகியிருந்து அதற்கான வரியையும் அவர் செலுத்திக் கொண்டிருந்தார் என்பதும் பரிபூர்ணத்தம்மாள் என்பவளுக்கு அவரது தாயாருடன் சோம வீரப்பன் 26.1956 தேதிய அடமான பத்திரத்தை நிறைவேற்றியிருந்தார் என்பது தாவா சொத்தில் அவரது உரிமைகளை முதலாவது எதிர்வாதி ஏற்கனவே துறந்திருந்த தால் அடமான பத்திர நிறைவேற்றலில் அவருக்கு பொறுப்பில்லை என்பதும் வாதி யினது திருமண செலவுகளை எதிர்கொள்ள லுக்காக மட்டுமே அடமான கடன் பெறப் பட்டது என்பதும் உறவுமுறையையும் அவளது கணவரை அவள் இழந்திருந்தாள் என்ற பொருண்மையையும் கருத்தில் கொண்டு சொத்தின் ஒரு பகுதியில் வாதி வசித்திட அனுமதிக்கப்பட்டது என்பதும் 1955வது வருடத்திலேயே வாதிக்கு மணமானது என்பதால் தாவா சொத்தில் பாத்தியதை அல்லது பங்கு அவள் கோரிடவியலாது என்பதும் வழக்குரை யில் கூறப்படும் வழக்குமூலம் பொய்யான தாகவும் அற்பானதாகவும் உள்ள காரணத்தால் வழக்கு தள்ளுபடிக்கு ஏற்றதாகும் என்பதும் 4-9வது எதிர்வாதிகளது மறுப்புரை யாக அமைகிறது.

6. இருதரப்பு வாதுரைகளையும் பரிசீலித்தலின் பேரில் விசாரணை நீதிமன்றம் கீழ்வரும் எழுவினாக்களை வனைந்தது.

1) தாவா சொத்தில் அவளது 1/3 பங்குக்கு முதல் நிலை தீர்ப்பானை பெறலுக்கு வாதிக்கு பாத்தியதையுண்டா?

2)இடைக்கால பலன்களை அடைதலுக்கு வாதிக்கு பாத்தியதை உள்ளதா?

3)தாவா சொத்து பொறுத்த உரிமை துறப்பு ஆவணத்தை முதலாவது எதிர்வாதி நிறைவேற்றி யிருந்தார் என்பது மெய்யான பொருண்மையாக உள்ளதா?

4) தாவா சொத்தில் வசிக்க வாதி அனுமதிக்கப்பட்டாள் என்பது மெய்யாகுமா?

5) வாதிக்கு பாத்தியமாகும் இதர பரிகாரங்கள் என்ன?

7. வழக்கு விசாரணையின்போது வாதி தன்னை வாசா1 எனவாக் விசாரித்து சா.ஏ1-ஏ60 என 60 ஆவணங்களை குறி யிட்டாள். 1-3வது எதிர்வாதிகள் தோன்றா தரப்பினர்களானார்கள். 4-9 வது எதிர்வாதிகள் தரப்பில் ஏழாவது எதிர்வாதி எவாசா1 ஆக

விசாரிக்கப்பட்டு சா.பி1–பி6 எனவாக 6 ஆவணங்கள் குறியிடப்பட்டன. வாதுரைகளை வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தையும் பரிசீலித்துக் கொண்டும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்து கொண்டும், விசாரணை நீதிமன்றம் தாவா சொத்து மூதாதையர் சொத்தாகும் எனவும் ஆகையால் தாவா சொத்தில் 1/9 பங்குக்கு வாதிக்கு பாத்தியதையுண்டு என விளம்பிக் கொண்டு தாவா சொத்தில் 1/9 பங்குக்கு வாதிக்கு பாத்தியதையுண்டு என தீர்ப்பிட்டு 24.7.2014 தேதிய தீர்ப்பாணையை இயற்றினார். வாதி மேமு எண் 45/2014 மேல்முறையீடை முன்னிட்டாள். சொன்ன தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் மறுத்துக் கொண்டும் பதிவாவணத்தில் கிட்டிய பொருட்க்கூறுகளை பரிசீலித்து இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்து கொண்டும் முதன்மை மாவட்ட நீதிபதி சொத்து சோம சுந்தரம் பிள்ளையின் முழுமையான மற்றும் தனித்த சொத்தாகும் எனவும் அவ்வாறாக மகன்களுக்கும் மகள்களுக்கு சமமாக 1/3 பங்குக்கு பாத்தியதையுண்டு எனவும் தீர்ப்பிட்டுக் கொண்டு மேல்முறையீடை ஏற்று முதல்நிலை தீர்ப்பாணை இயற்றினார். சொன்ன தீர்ப்புரை யாலும் தீர்ப்பாணையாலும் துயருற்று 4–9வது எதிர்வாதிகள் தற்போதய இரண்டாவது மேல் முறையீடை முன்னிட்டுள்ளார்கள்.

8. விசாரணைக்காக ஏற்கும் கட்டத்தில் கீழ் வரும் சட்ட வலிவு குறித்த எழுவினாக்கள் வனையப்பட்டன.

1. இந்து வாரிசுரிமை சட்ட பிரிவு 8 ஐ 1949வது வருடத்தில் உருவான வாரிசு ரிமைக்கு முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்புரையும் தீர்ப்பாணையையும் பொருத்துதல் சட்டப்படி சரியாகுமா?

2. 1949வது வருடத்தில் பிறந்த வாரிசு ரிமைக்கு இந்து வாரிசுரிமை சட்டப் பிரிவு 8ஐ பின் தேதியிட்டு பொருத்தல் செயலாற்றுமா?

3. அது பற்றி எழுவினாவை வனையாது (அமரர்) சோமசுந்தம்ர பிள்ளையின் வசமுள்ள ஸொத்தின் குணாங்கம் தொடர்பான தீர்ப்பை முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் தீர்ப்புரை அளித்தல் உரிமையியல் விசாரணை முறை தொகுப்புச் சட்ட வகையங்களுக்கு இணங்கி அமைகிறதா?

4. இப்போதுள்ள வழக்கு பொருண்மை களுக்கு AIR (1966) SC 1879இல் அறிவிப்பான எரம்மா எஹிர் வீருபன மற்றும் பிறர் வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்புரை பொருந்துகையாகுமா?

9. தாவா சொத்து மூதாதைய சொத்தாகும் என வாதிகள் எதிர்வாதிகள் இருவரும் அவர் களது வாதுரைகளில் வாதுரைக்கவில்லை என முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் பதிவிட்டிருந்து தாவா சொத்து சோமசுந்தரம் வசமுள்ள முழுமையான சொத்தாகவும் எனவும் சோமசுந்தரம் கையிலுள்ள மூதாதயர் சொத்து தாவா சொத்தாகும் என்பதை வழக்குரையின் 4–5வது பத்திகளில் வாதியே ஏற்றுக் கொண்டி ருந்தாள் எனவும் சொன்ன உறுத்துக்கூற்றுகள் அவர்களது எழுத்திலான விளக்கவுரையில் 4–9வது எதிர்வாதிகளால் ஏற்கப்பட்டுள்ளது எனவும் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் அனுமானிக்க முனைந்திருந்தது எனவும் ஆகையால் தாவா சொத்து மூதாதையர் சொத்தாகும் என தரப்பினர்கள் வாதுரைக்க வில்லை எனும் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத் தீர்ப்புரை பிழையானதாகவும் இரு தரப்பு வாதுரைத்தல்களுக்கு எதிராகவும் உள்ளது எனவும் மேமுகள்/4–9வது எதிர் வாதிகள் சார்பு வழக்குரைஞர் பணிந்திட்டார். ஏற்றவாறு 1949இல் சோமசுந்தரம் இறந்த போது வாரிசுரிமை பிறந்தது எனவும் ஆகையால் இந்து வாரிசுரிமை சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவு 6 அல்லது பிரிவு 8 1949இல் ஏற்பட்ட வாரிசு ரிமைக்கு பொருந்தாது எனவும் பழைய மதச்சாரா சட்டநெறிப்படி வாதி மகளாக உள்ள நிலையில் உடன் பங்குரிமையராக அவள் கருதப்பட முடியாது எனவும் அவ்வாறாக அவளது தந்தையின் பங்கை அவள் மரபு வழியாக அடைந்திட மாட்டாள் எனவும் சொத்து ரிமை வாரிசுரிமையாலன்றி எஞ்சியோர் முழுவு ரிமையால் வந்தடையும் எனவும் ஆகையால் தாவா சொத்தில் வாதிக்கு பாத்தியதை கிடையாது எனவும் அவ்வாறே முதலாவது மேமுறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்புரை தலையீடுக்கு ஏற்ற தாகும் எனவும் வழக்குரைஞர் மேலும் பணிந்து ரைத்தார்.

10. தாவா சொத்து மூதாதையர் சொத்தாகும் என்ற நிலைப்பாடை எதிர்வாதிகள் இரண்டாவது மேமுறையீட்டில் எமேமு எடுத்திருக்கவில்லை எனவும் அது மூதாதைய்ர் சொத்தாகும் என வாதிட்டு நிரூபிக்க அவர்கள் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை எனவும் சோமசுந்தரம் பிள்ளையால் வாரிசுரிமையால்/மரபுவழி அடைதலுக்கு முந்தியதாக முதலாவது எதிர்வாதி அல்லது சோம வீரப்பன் பிறந்திருந்தார் என எதிர்வாதிகள் வாதிட்டிருக்கவில்லை எனவும் அது பற்றிய வாதுரைத்தல் ஏதுமில்லை எனவும் அதன் முழுமையான சொத்துரிமையராக இருந்த அவரது தந்தை வீரப்ப பிள்ளைக்கு பின்வந்ததால் வாதியின் தந்தை சோமசுந்தரம் பிள்ளையின் முழுமையான சொத்தாகும் என வாதி வாதிட்டிருந்தாள் எனவும் சொன்ன அளவுக்கு வழக்குரை உறுத்துக்கூற்றுகளை எதிரவாதிகள் எழுத்திலான கூற்றுரையில் ஒப்புக் கொண்டிருந்தார்கள் எனவும் தாவா சொத்து எஞ்சியோர் முழுவுரிமையால்/மரபுவழியால் சோமசுந்தரம் பிள்ளையின் முழுமையான சொத்து ஆவதால் வாரிசுரிமையால்/மரபுவழி யால் வாதியும் முதலாவது எதிர்வாதியும் 4-9வது எதிர்வாதிகளின் தந்தையும் தலா 1/3 பாத்தியதை கொண்டுள்ளார்கள் எனவும் எமேமுகளது வழக்குரைஞர் பணிந்துரைத்தார். எதிர்வாதிகளின் எழுத்திலான விளக்கவுரை தெள்ளத்தெளிவாகவும் துல்லியமாகவும் குறித்த தாகவும் உள்ளது எனவும் அவ்வாறே அது இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 17 கீழான ஏற்கை யாக பரிசீலிக்கப்பட வேண்டியதாகிறது எனவும் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட தீர்ப்பில் தலையிடலுக்கு ஏதுமில்லை எனவும் அவர் மேலும் பணிந்திட்டார்.

11. தாவா சொத்து ஆதியில் சோமசுந்தரம் பிள்ளைக்கு சொந்தமானது என் வழக்குரை பத்தி 3இல் சொல்லப்பட்டுள்ளது என்பதையும் தாவா சொத்தின் முழுமையான சொத்துரிமை யாராக வீரப்ப பிள்ளை இருந்தார் என்பது வழக்குரை பத்தி 4இல் கூறப்படுள்ளது என்பதை யும் கவனித்தல் தொடர்புற்றதாகும். தாவா சொத்து சோமசுந்தரம் பிள்ளைக்கு சொந்த மானது என்பதை எதிர்வாதிகள் எழுத்திலான விளக்கவுரை பத்தி3இல் ஏற்றுக் கொண்டு உள்ளார்கள். அது கீழ் தரப்படுகிறது.

''தாவா சொத்து சோமசுந்தரம் பிள்ளைக்கு சொந்தம்''

பத்தி 5 இல் கட்டப்பட்ட வழக்குரை உறுத்துக் கூற்றுகளை எதிர்வாதிகள் ஏற்றுக் கொண்டி ருக்கிறார்கள் எனவும் வீரப்ப பிள்ளையின் இறப்புக்கு பின் வரி செலுத்திக் கொண்டு சொத்தின் உடைமையும் அனுபோகமும் சோமசுந்தரம் பிள்ளை வசம் இருந்திருந்தது எனவும் அவர்கள் கூறியுள்ளார்கள். வாதியின் வழக்குரைஞரால் சரியாக வாதிடப்பட்டபடி. தாவா சொத்து சோமசுந்தரம் பிள்ளையின் வசம் மூதாதையர் சொத்தாக இருந்துள்ளது என்பதை எவ்விடத்திலும் எதிர்வாதிகள் எழுத்திலான கூற்றுரையில் குறித்ததாக கிசுகிசுத்திருக்க வில்லை. தாவா சொத்தை சோமசுந்தரம் பிள்ளை மூதாதையர் சொத்தாக பெற்ற டைந்திருந்து அவரது மகன்களுடன் மூதாதையர் கூட்டு குடும்ப சொத்தாக துய்த்திருந்தார் என்பது எதிர்வாதிகளின் குறித்த வழக்கு அல்ல.

12. வாதியினது வழக்குரைஞரால் சரியாக வாதிடப்பட்டவாறு பத்தி 5ஐ எதிர்வாதிகள் குறிப்பிட்டிருந்து வீரப்ப பிள்ளையின் இறப்புக்கு பின்னராக தாவா சொத்தில் உடைமையும் துய்ப்பும் சோமசுந்தரம் பிள்ளை வசம் இருந்தி ருந்தது என கூறியுள்ள போதிலும் அது மூதாதையர் சொத்தாகும் என எவ்விடத்திலும் கிசுகிசுக்கப்படவில்லை. இன்னுமதிகமாக சொத்தின் இயல்பு பற்றிய எழுவினாவை விசாரணை நீதிமன்றம் வனைந்திருக்கவில்லை ஆனால் எதிர்மாறாக சோமசுந்தரம் பிள்ளையின் கையில் அது மூதாதையர் சொத்தாக உள்ளது என் தீர்ப்பிட முனைந்தது.

13.முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத்தால் சரியாக காணப்பட்டவாறு வாதுரைகள் அல்லது குறித்த எழுவினா அல்லது சாட்சியம் ஏதும் இல்லாத நிலையில் தாவா சொத்து மூதாதையர் கணக்கில் உள்ளது என்ற விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை நிலையுறுத்தப்பட முடியாது. ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டபடி முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் தாவா சொத்து சோமசுந்தரம் பிள்ளையின் முழுமையான மற்றும் தனித்த

சொத்தாகும் என கருத்துரைத்துக் கொண்டு தலா 1/3 பங்குக்கு சோமசுந்தரம் பிள்ளையின் அனைத்து மூன்று சட்டபூர்வ வாரிசுகளுக்கும் பாத்தியதையுள்ளது என தீர்ப்பிட்டிருந்து அந்த அடிப்படையில் முதல்நிலை தீப்பாணையை இயற்றியிருக்கிறது. வாதிக்கு 1955இல் மணமாகி சோமசுந்தரம் பிள்ளையின் இறப்பில் வாரிசுரிமை 1949 இல் ஏற்பட்டதில், மகளாக வாதிக்கு தாவா சொத்தில் பங்கு எதனுக்கும் பாத்தியதை கிடையாது என்பது எதிர்வாதிகளது பிரதான மறுப்புரையாக உள்ளது.

14.மேலுள்ளதை பரிசீலித்துக் கொள்கை யில் தீர்மானிக்கப்பட உள்ள முக்கிய அம்சம் 1949வது வருடத்தில் சோமசுந்தரம் பிள்ளை இறந்திருந்ததால் பழைய இந்து சட்ட நெறிப்படி தந்தையின் சொத்தில் வாதி மகளுக்கு ஒரு பங்குக்கு பாத்தியதையுண்டா என்பது ஆகும்.

15. AIR 1966 SC 1879இல் அறிவிப்பான் எரம்ம –எதிர்– வீருபனா மற்றும் பிறர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தாலான தீர்ப்புரையில் 4–9 வது எதிர்வாதிகள் சார்பு வழக்குரைஞர் நம்புகை வைத்தார். தொடர்புறு பகுதி வருமாறு:

‘‘4. அது பின்தேதிய செயலாற்றல் கொண்டுள்ளது என குறிப்புரைக்க இந்த பிரிவின் மொழியில் ஏதுமில்லை. இந்த பிரிவில் உள்ள உயிலின்றி இறக்கும் இந்து ஆண் என்ற சொற்களும் சேர்ந்தடைய வேண்டும் என்ற சொற்களும் அந்த பிரிவால் வகைசெய்யப்படும் சொத்துரிமையிறக்கம் இந்து வாரிசுரிமை சட்ட துவக்கலுக்கு பின் இறந்தவரது சொத்தாக இருத்தல் வேண்டும் என்பதை தெள்ள தெளிவாக்கு கின்றன. இது விஷயத்தில் கீழ் வருமாறு வாசிப்பாகி கூறும் சட்டப் பிரிவு 6இல் குறிப்பாடு வைக்கப்படலாம்.

‘‘6. இந்த சட்ட துவத்துக்கு பின் அவரது இறப்பு சமயத்தில் இந்து மிதக்சாரா உடன் பங்குரிமையில் நலனுரிமை கொண்டிருக்கும் இந்து ஆண் சாகும்போது சொத்திலுள்ள அவரது நலனுரிமையை உடன்பங்குரிமையர் உறுப்பினர் களில் எஞ்சியோருக்கு எஞ்சியோர முழுவுரிமை யால் உரிமையிறங்க வேண்டும். இந்த சட்டத்துக்கு இசைவாக அல்ல.’’

வரம்புரை: அட்டவணை வகுப்பு 1இல் குறிப்பிடப்பட்ட எஞ்சும் பெண் உறவினரை அல்லது அந்த பெண் உறவினர் மூலமாக உரிமை கோரி அந்த வகுப்பில் குறிப்பிடப்பட்ட ஆண் உறவினரை இறந்தவர் விட்டு சென்றி ருந்தால் உயில்வழி அல்லது உயிலற்ற வாரிசு ரிமை வழியாக நேர்வுக்கேற்ப இந்த சட்டம் கீழ் மிதக்சாரா உடன்பங்குரிமையர் சொத்திலுள்ள இறந்தவரது நலனுரிமை சேர்ந்தடைய வேண்டும். எஞ்சியோர் முழுவுரிமையால் அல்ல.

5. சட்ட துவக்கத்துக்கு பின் உய்றக்கும் இந்து ஆணின் உடன்பங்குரிமை சொத்துக்கு மட்டுமே அது பொருந்துகிறது என்பது பிரிவின் தெளிவாக மொழியிலிருந்து தெளிவாகிறது. பிரிவு 8இன் மொழி பிரிவு 6இன் தருவாயி லிருந்து கட்டமைக்கப்பட வேண்டும் என்பது வெளிப்படையானதாகும். நாங்கள் அதற்கிணங்க, இந்து வாரிசுரிமை சட்டப் பிரிவு 8இன் வகையங்கள் பின்தேதிய தாக்கம் கொண்டிருக்கவில்லை எனவும் சட்டம் அமலுவாதற்கு முன் அதாவது சட்டத்துக்கு முன் வாரிசுரிமை உருவானபோது பிரிவு 8 பொருந்துகை கொண்டிருக்காது என் தீர்ப்பிடுகிறோம்.

16.இறந்த தந்தையின் மகள்களுக்கும் தத்தெடுக்கப்பட்ட மகனுக்கும் இடையில் சொத்து பற்றிய கோருரிமை இருந்த காசாபாய் துக்காராம் கர்வர் மற்றும் பிறர் –எதிர்– நிவ்ருதி (இறந்தவர்) சட்டப்பூர்வ பிரதி நகல் மூலமாக மற்றும் பிறர் 2022 (7) Supreme 1026 வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் வழக்குரைஞர் நம்புகை வைத்தார். மீண்டும் உறவுக் கோட் பாடை பொருத்திக் கொண்டு உச்ச நீதிமன்றம் ஒவ்வொரு தரப்பிலும் தத்தெடுப்பு ஏற்கப்பட்டி ருந்ததால் தத்தெடுக்கப்பட்ட மகன் தனித்த பங்குரிமையர் ஆவார் எனவும் மகள் சட்டப் படியான வாரிசாக மாட்டாள் எனவும் அவ்வாறே மகனுடன் சேர்ந்து பங்குக்கு அவளுக்கு பாத்தியதை கிட்டாது எனவும் தீர்மானித்துள்ளது. தொடர்புறு பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

‘‘11. இந்த வழக்கில் தத்தெடுப்பு அல்லது தத்தெடுப்பின் செல்லுமை பற்றி தகராறு ஏதுமில்லை. அது உண்மையில் முதலாவது எதிர்வாதியின் தத்தெடுக்கப்பட்ட மகனாக வாதி இருந்தார் என்பதே வாதியினது வழக்காகும். சொன்ன அடிப்படையில், மீண்டும் உறவு

கோட்பாடை பொருத்துதல் அவர்களது தந்தை இறந்த நாளன்று முதலாவது எதிர்வாதி கரித்தியல்பில் உயிரோடிருந்தார் என்பதாகவும் அவர் தனித்த உடன் பங்குரிமையர் ஆவார் என்பதாகவும் கருதப்படும் எனவாக முடிவெடுத்தல் தவிர்க்க இயலதாகும். ஒரு நபரது மரணத்தின் பேரில் பாத்தியதைக்கு உரிமையளித்தலில் வெற்றிடம் அல்லது இடையீடு இருத்தல் இயலாது என்பது மறுக்கவியலாததாகும். ஏற்றவாறு இந்து வாரிசுரிமை சட்ட அமலாவதற்கு முன் வாரிசுரிமை ஏற்பட்டிருந்த வழக்காக இது உள்ளது என்பதை நாங்கள் கூடுதலாக நினைவில் கொள்ள வேண்டியதாகிறது.

12. முல்லாவின் ''இந்து சட்ட நெறி பற்றி'' பகுதி 1இன் பிரிவு 72, அத்தியாயம் 6. பாம்பே மாநிலத்தில் ஆண்களுக்குள்ள வாரிசுரிமை ஒழுங்கு மீது வாதியின் வழக்குரைஞர் நம்புகை கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. அது கீழே தரப்படுகிறது.

'72. பாம்பே மாநிலத்தில் மிதக்சாராவில் ஆட்படும் விஷயங்களில் வாரிசுரிமை ஒழுங்கு:. மிதக்சாராவில் ஆட்படும் விஷயங்களில் சபிந்தக்கள் இடையிலான ஆண்களுக்கு வாரிசுரிமை ஒழுங்கு வருமாறு:

(1-6) மகன் மகனின் மகன் (தந்தையை இழந்தவர்) மகனின் மகனது மகன் (தந்தையும் பாட்டனாரும் மரணிக்கும் நிகழ்வில்) இவர்கள் ஒரேநேரத்தில் மரபுவழி அடைகின்றனர். 1937 இன் 18வது சட்டம் கீழ் விதவை, முன்னிறந்த மகனது விதவை இறந்த மகனும் இறந்த மகனது விதவை ஆகியோர் வாரிசுகளாக அங்கீகரிக்கப்படுகின்றனர்.

..

7.மகள்

ம.

12.பாம்பே மாநிலத்தில் எஞ்சொயோர் முழுவுரிமை அனுகூலத்துடன் பொதுகுடியிருப்பாளர் களை மகள்கள் எடுக்கவில்லை. ஆனால் பொது குடிருப்பாளர்களாக எடுக்கின்றனர். மேலும் அந்த மாநிலத்தில் ஒரு மகள் தந்தையின் சொத்தில் வரையறையான ஆஸ்தியை எடுப்பதில்லை. ஆனால் சொத்தை முழுமையாக அவள் எடுத்துக் கொள்கிறாள். இவ்வாறாக பாம்பே சிந்தனைவழியால் ஆட்படும் இந்து ஆண் இரு மகள்களை விட்டு மரணித்தால் அவளது தந்தையின் சொத்தில் பாதியை ஒவ்வொரு மகளும் முழுமையாக அடைந்து அதை அவளது தனித்த சொத்தாக கொண்டி ருக்கிறாள். அவளது மரணத்தில் அவளது பங்கு அவளது சொந்த வாரிசுரிமைக்கு சீதனமாக சென்றடையும்.

13. இதர வாரிசுகள் உண்டு. ஆனால் அவர்கள் குறிப்பாடாகவில்லை. இந்த வழக்கு பொருண்மைகளில் தத்தெடுப்பான மகன் [முதலாவது எதிர்வாதி] மீண்டும் உறவு கோட்பாடை பொருத்துகையில் மகளை வெளியேற்றுவார் என்ற அடிப்படையில் நாங்கள் மேல்செல்ல வேண்டும். வரிசை எண் 1-6 இல் உள்ள மகன் மகனது மகன் (தந்தையை இழந்தவர்) மகனது மகனின் மகன் (அவரது தந்தையையும் பாட்டானாரையும் இழந்தவர்) ஒரே நேரத்தில் மரபுவழியாக பெறுகிறார்கள்.

14.ஒரு மகன் இருப்பாரானால் மகனுடன் சேர்ந்து பங்கில் மகளுக்கு பாத்தியதை கிடையாது என் நாங்கள் தீர்ப்பிடுகிறோம். வேறு சொற்களில் மகனுடன் ஒரே சமயத்தில் அடையும் சட்டபூர்வ வாரிசாக மகள் இருக்க மாட்டாள். உணமையில் மேல் தரப்பட்டிருந்து எங்களால் தரப்பட்டுள்ள உதாரணம் மகன் எவருமின்றி மகள்கள் மட்டுமே உள்ள சூழலில் மட்டுமே பொருந்து றுவாகும்.''

17. 1956இன் இந்து வாரிசுரிமை சட்ட நிறைவேற்றலுக்கு முன்பாக மூதாதையர் சொத்தில் அல்லது அவர்களது தந்தையின் தனித்த சொத்தில் சொத்தில் மரபு வழியான் உரிமைகளை மகள்கள் கொண்டிருந்ததில்லை. அத்தகைய உரிமையை மகங்களால் மட்டுமே கோரப்படவியன்றது. தந்தையின் சுயசம்பாத்திய சொத்துக்களில் மகன்களுடன் சேர்ந்து மரபு வழியாகும் சம உரிமைகளை மகளுக்கு வழங்கிக் கொண்டு முக்கியமான மாற்றங்களை 1956இன் இந்து வாரிசுரிமை சட்டம் கொணர்ந்தது. 2005இன் திருத்தல் மூலமாக மூதாதையர் சொத்துக்களில் அவர்களுக்கு சம உரிமைகளும் பொறுப்பேற்புகளும் அளித்துக் கொண்டு மகள்களும் உடன் பங்குரிமையர் களாக்கப்படுகின்றார்கள். ஆனால் கையிலுள்ள

வழக்கில் ஏற்கனவே சுட்டப்பட்டவாறு, தந்தை சோமசுந்தரம் பிள்ளை 1949வது வருடத்தில் இறந்ததால் 1956இன் இந்து வாரிசுரிமை சட்டத்தை அல்லது 2005இன் திருத்தல் சட்டத்தை பொருத்தல் பற்றிய கேள்வி எழவில்லை. பழைய இந்து சட்ட நெறி மட்டுமே பொருத்தப்படத்தக்கதாகவியலும்.

18. 2024 Live Law Bombay 584இல் அறிவிப்பான ராதாபாய் பாலாசாகிப் சர்கே, இறந்ததால் அவளது சட்டப்படியான வாரிசுகள் – ச.பி மூலமாக –எதிர்– கேசவ் ராமசந்திர யாதவ் மற்றும் பிறர் வழக்கில் அத்தகைய மகள் 1956 இக்கு முன் இறந்த தந்தையின் சொத்தில், 1956இன் இந்து வாரிசுரிமை சட்டம் அமலுக்கு முன்னராக மரபுவழி மூலமாக வரம்பிட்ட அல்லது முழுமையான உரிமை எதனையும் பெற்றடைய இயலுமா என்ற குறித்தனுப்பு வைக்கப்பட்டபோது, தந்தை 1956இன் இந்து வாரிசுரிமை சட்ட அமலாதலுக்கு முந்தியதாக இறந்திருந்ததால் தந்தையின் சொத்தில் வரம்புற்ற அல்லது முழுமையான உரிமை மகளுக்கு கிடைக்காது என பம்பாய் உயர் நீதிமன்ற இரு நீதியர் அமர்வு தீர்ப்பிட்டுள்ளது. தொடர்புறு பகுதி கீழே தரப்படுகிறது.

‘‘இந்து மரபுகள்படி பிறக்கு போதுள்ள மகள் திருமண வயதை அடைதலில் மணமாகி அவளது மணவழி உறவினர்களது வீடுக்கு அனுப்பப் படுகிறாள். ஆகையால் 1937இன் சகாப்தத்தில் சட்டம் செயல்பாடில் இருந்தபோது மகள் குடும்பத்தின் அங்கமாக ஒருபோதும் பாவிக்கப்படவில்லை. 1937இன் சட்டம் சுதந்திரத்துக்கு முன்னரான சட்ட நிறைவேற்றம் ஆகும் என்பதை கவனிப்பது முக்கியமாகும். அந்தக் காலகட்டத்தில் பெற்றோர்களது வீட்டுக்கு அவள் திரும்பிச் செல்ல இயலாததால் கணவனின் மரணத்தில் விதவை பாதுகாக்கப்பட வேண்டி யிருந்தது. அதேசமயத்தில் அவன் உயிரோடில்லாத தால் அவளை அவளது கணவன் பேண வியலாது. அத்தகைய சந்தர்ப்பத்தை சமாளித்தல் நோக்குடன் 1937இன் சட்டத்தால் வரம்புற்ற உரிமைகள் தரப்பட்டன. எனினும் 1956இன் சட்ட நிறைவேற்றத்துக்கு முன்னராக மரபுவழி யான உரிமை கோரலிலிருந்து ஒரு மகள் விலக்கப்பட்டாள்.’’

19. கையிலிலுள்ள வழக்கிலும், ஏற்கனவே சுட்டப்பட்டவாறு 1949வது வருடத்தில் சோம சுந்தரம் பிள்ளை இறந்து அவ்வாறே மகளான வாதி தந்தையின் சொத்தில் மரபுவழி உரிமை ஏதும் கொண்டிருக்க மாட்டாள். ஆனால் சட்ட நிலைமையை உரிய கோணத்திலிருந்து பரிசீலிக்காமலும் 1956இன் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றலுக்கு முன்னிருந்த சட்டநிலைமையை யும் பழைய இந்து சட்ட நெறியையும் பொருத்தாமலும் அவளது சகோதரருடன் சேர்ந்து ஒரு பங்கு பெறலுக்கு வாதிக்கு பாத்தியதை யுண்டு என்ற தீர்ப்பை மேல்முறையீடு நீதிபதி வழங்கியிருக்கிறார். எனவே முதலாவது மேல் முறையீடு நீதிமன்றத்தின் மேலுள்ள தீர்ப்பு சட்டப்படியாக நிலையுறுத்தப்பட முடியாது எனவும் அது நீக்கறவுக்கு ஏற்றதாகும் எனவும் தீர்ப்பிட இந்த நீதிமன்றம் தயங்கவில்லை. 1956 சட்டம் இயற்றலுக்கு முந்தொய்யதாக சக்ச்சன் ஏற்பட்டதால் சொத்து மூதாதயர் இயல்பிலுள்ளதா அல்லது தந்தையின் கைககளில் சுயசம்பாத்திய தனிச் சொத்தாக உள்ளதா என்ற கேள்வி தொடர்பற்றதாகும் என்பதை கவனித்தல் தொடர்புடையதாகும்.

20.1956இக்கு முன்பாக ஏற்பட்டது எனவாக தரப்பட்ட நிலையில், சொத்து மூதாதை யரானாலும் அல்லது சுயசம்பாத்யமாக இருந்தாலும் வாதியினது மரபுவழி கோருரிமை தடையாகிறது. சொத்தின் இயல்பு விளைவை பாதிக்கவில்லை என்பதால் இரண்டாவது மேல்முறையீடு ஏற்கப்படத்தக்கதாகும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. சந்தர்ப்பங்ளை யும் உறவுமுறையையும் பரிசீலித்துக் கொண்டு அவரவர் செலவு தொகைகளை இரு தரப்பினர்கள் ஏற்குமாறு அறிவுறுத்தப்பட வேண்டியதாகும் என இந்த நீதிமன்றம் எண்ணுகிறது.

21. முடிவாக இரண்டாவது மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிபதியின் நீதிமன்ற கோப்பிலா மேவ எண் 45/2014இல் உண்டான 5.11.2016 தேதிய தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் நீக்கறவாக்கப்பட்டு முவ எண் 54/2007இல் வழக்கு தள்ளுபடியாக்கப்படுகிறது. தரப்பினர்கள் அவரவர் செலவு தொகை களை ஏற்குமாறு பணிக்கப்படுகிறார்கள்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# சான்றுகளை கருதி பார்க்கும் முறை

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.சுப்பிரமணியன்**
**மாண்புமிகு நீதிபதி திரு.சி.குமரப்பன்**
**மே.வ.எண் 661/2018,**
**உ.ப.ம.எண்கள் 18064/2018, 15923, 15925/2024**
**நாள்: 6.11.2024**
**(2024 (6) CTC 667)**

**என். கருப்பண்ணா (எ) கருப்பக் கவுண்டர் ...மனுதாரர்**
**–எதிர்–**
**சி. நாச்சிமுத்து கவுண்டர் (இறப்பு) 2. சுசீலாமணி (எ) மரியாள் 3. சிவமணி (எ) சிவகாமி 4.காசிப் கவுண்டர் 5.எஸ்.ரங்கசுவாமி 6.எஸ்.மரகதம் R2 முதல் R6 வரை பதிவேட்டுக்கு கொண்டு வரப்பட்டனர். ச.சா.களாக இறந்த 1ஆம் எதிர்வழக்கீட்டாளருக்காக. விரிவு சி. நாச்சிமுத்து கவுண்டர் விரிவு ஆணை 25.2.2022 தேதியிடப்பட்டது. உ.ப.ம.எண் 3086/2019இல் இடப்பட்டது.**
**...எதிர்வழக்கீட்டாளர்**

**என். மனோகரன்**
**மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்**

**இ.பி. சென்னியங்கிரி**
எதிர்வழக்கீட்டாளர் எண் 1இன் வழக்கறிஞர்

ஏ. முருகவேல் எதிர்வழக்கீட்டாளர் எண் 2, 3 இன் வழக்கறிஞர் எதிர்வழக்கீட்டாளர் எண் 4 க்கு எவரும் முன்னிலையாகவில்லை.

மே.வ. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகை யின்றி.

**கோரிக்கை** : முதல் மேல்முறையீடு, உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தின் 31.7.2018 தேதியிடப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக, பிரிவு 96 உடன் படிக்கப்படுகிற கட்டளை 41 விதிகள் 1, 2இன்படி முன்னிடப்பட்ட மேல்முறையீடு, மு.வ.எண் 1/2016 மு.வ.எண் 14/2016 மாவட்ட நீதிமன்றம், ஈரோடு நான்காம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஈரோடு மாவட்டம் பவானியில் கோப்பில் உள்ளது.

## தீர்ப்பு

**நீதிபதி ஆர்.சுப்பிரமணியன்**

1. மு.வ.எண் 1/2016இல் எதிர்வழக்கீட்டாளர் IVஆவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஈரோட்டில் மேல்முறையீட்டில் உள்ளது. வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினால் குறையுற்றவர்கள் அதில் ஏற்பாட்டு ஆவணம் 29.8.2013 தேதி யிடப்பட்டதை வாதியால் நிறைவேற்றப்பட்டது. சொல்லப்பட்ட வழக்கில் எதிர்வாதி /மேல்முறை யீட்டாளர் சார்பாக. இது செல்லத்தக்கதல்ல இது. தகாத செல்வாக்கு மற்றும் மோசடியில் பெறப்பட்டது.

2. தரப்பினர்கள் வசதிக்காக அவரவர் தரநிலையிலேயே சுட்டப்படுவர்.

3. வாதி எதிர்வாதியின் தந்தை அவர் தாவாவில் உள்ள சொத்துக்களை வாங்கி யிருந்தார் விற்பனை ஆவணங்கள் மூலமாக 1971, 1979ஆம் ஆண்டுகளில் அவருக்கு 1 மகனும் 4 மகள்களும் மகன் அதாவது எதிர் வாதி அரசுப் பணியில் இருந்தார். 2012இல் ஓய்வு பெற்றார். வாதியின் மனைவி வள்ளியம்மாள் 14.7.2013 அன்று இறந்துள்ளார். அதன் பின்னர், வாதி ஏற்பாட்டு ஆவணம் ஒன்றை நிறைவேற்றியுள்ளார். அது 29.8.2013 தேதியிடப்பட்டது. அது எதிர்வாதி சார்பானது அதாவது அவர் இவரது ஒரே மகன் ஏற்பாட்டு ஆவணத்தின்பேரில் விளம்புகை கோருவது செல்லத்தக்க ஏற்பாட்டு ஆவணத்தின்பேரில் விளம்புகை கோருவது செல்லத்தக்கது. மோசடி மற்றும் தகாத செல்வாக்கை பயன்படுத்தி இது பெறப்பட்டது. வாதி, கூறியதாவது எதிர்வாதி யிலும் அவர்களது நண்பர்களாலும் ஒரு காரில் அவர் அழைத்துச் செல்லப்பட்டார் மற்றும்

வில்லைத்தாள்களில் அவரது கட்டை விரல் ரேகை பெறப்பட்டது என்பது. அவர் மேலும் கூறியதாவது எதிர்வாதி மற்றும் அவரது நண்பர்கள் அவரை காவேரி ஆற்றில் வீசி விடுவதாக பயமுறுத்தியதாக அதாவது ஆவணத்தில் இடது கை கட்டை விரல் ரேகையை வைக்க மறுப்பாரானால். இதில் மேலும் கோரப் பட்டதாவது 17.10.2013 அன்று எதிர்வாதியும் அவரது நண்பர்களும் வீட்டிற்கு வந்து அவரை உடைமை இழக்கச் செய்தனர். இவர் காவல் துறை அனைவரிடம் முறையீடு ஒன்றைச் செய்துள்ளார். அதாவது நிலம் பாதிக்கப்படும். பிரிவு ஈரோடில் ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு எதிர்வாதியின் செயல்கள் பற்றிய முறையீடு செய்துள்ளார். அவர் கூறுவதாவது காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்வாதி யின் செல்வாக்கு காரணமாக மேற்சொல்லப் பட்ட வாதங்களின்பேரில், வாதி மேற்சொல்லப் பட்டவாறு விளம்புகையாக செய்யக் கோரியுள்ளார்.

4. வழக்கானது, எதிர்வாதியால் எதிர்க்கப் பட்டது. அதில் கூறப்பட்டதாவது ஏற்பாட்டு ஆவணம் வாதியால் நிறைவேற்றப்பட்டது. அவரது விருப்பத்தின்பேரில் என்று மற்றும் அவர் வாதிட்டதாவது வழக்கானது மகள்களின் தூண்டுதலால் முன்னிடப்பட்டது என்பது. அதாவது அவர்களுக்கு சொத்தானது அவரிடம் வந்த டைவதை விரும்பவில்லை. இதில் மேலும் வாதிடப்பட்டதாவது எதிர்வாதி வாதியை கவனித்து விடுவதாகவும் மற்றும் வாதி மகள்களுடன் தங்கியுள்ளார். சிவகாமியிடம் வழக்கு முன்னிடப் பட்டது. மகள்கள் தூண்டுதலில் வழக்கு முன்னிடப் பட்டது. அதாவது இவர் சொத்துக்களை பறிக்க விரும்புவதாக.

5. மேற்சொல்லப்பட்ட வாதங்களின்பேரில், கூடுதல் மாவட்ட நீதிபதி பின்வரும் பிரச்சினை களை வனைத்துள்ளார்.

1) 29.8.2013 தேதியிடப்பட்ட ஏற்பாட்டு ஆவணம் மோசடி மற்றும் தகாத செல்வாக்கில் மூலம் பெறப்பட்டதா என்பது

2) வாதி அவரால் கோரப்பட்ட வாறான விளம்புகைக்குத் பெற உரிமை உடையவரா?

3) வாதிக்கு எந்த வகை உய்தி கிடைக்கும்.

4) வழக்கு உரியவாறு மதிப்பீடு செய்யப் பட்டதா?

6. விசாரணையில் வாதி PW1 ஆக விசாரிக்கப் பட்டார். Exs A1 முதல் A9 வரை குறியீடு செய்யப்பட்டது. எதிர்வாதி DW1, 3 பிற சாட்சிகள் விசாரிக்கப்பட்டார். அதாவது சான்றொப்பம் இட்டவர் உள்ளடங்கலாக எழுத்தர். அதாவது ஏற்பாட்டு ஆவண எழுத்தர். ஏற்பாடு 29.8.2013 தேதியிடப்பட்டது. இவர்களும் DW2 முதல் DW4 விசாரிக்கப் பட்டனர்.

7. விசாரணை நீதிமன்றம் முடிவு செய்த தாவது. S.W.இன் சான்று ஆவணத்தை மெய்ப்பிக்கும் போதுமானது. அதாவது மோசடி மூலமாகவும் வலுக்கட்டாயமாகவும் இது பெறப் பட்டது என்பது. அதாவது வாதியில் வயதைக் கருதுகையில் வாதியின் மகள்கள் அவருடன் செல்லவில்லை என்பது. அதாவது ஏற்பாட்டு ஆவணம் நிறைவேற்றப்பட்டபோது இதுவே விசாரணை நீதிமன்றத்தில் அதிக முக்கியமான தாக்கப்பட்டது. அதாவது இதில் எடுக்கப்படும் முடிவுக்கு ஆதரவாக இதன் மதிப்பீடு பற்றி கண்டறிதல்களின்பேரில் விசாரணை நீதிபதி கோரப்பட்டவாறு வழக்கில் தீர்ப்பாணை பிறப்பித்தார். குறையுற்ற எதிர்வாதி மேல் முறையீடு செய்துள்ளார்.

8. எங்களால் திரு.என்.மனோகர் மேல் முறையீட்டாளரின் வழக்கறிஞர் மற்றும் S.P. சென்னியன்கிரி முதல் எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் கேட்டறியப் பட்டனர். வாதி மேல்முறையீடு நடப்பில் உள்ளபோது இறந்துள்ளார். அவரது மகள்கள் மற்றும் இறந்த மகளின் வாரிசுகள் பதிவேட்டில் கொண்டு வரப்பட்டனர் எதிர்வழக்கீட்டாளர்கள் 2 முதல் 6 வரையில்.

10. வாதங்களிலிருந்து ஒரே குறிப்பு எழுவது கருதுகைக்காக வாதி 29.8.2013 தேதியிட்ட ஏற்பாட்டு ஆவணத்தை மெய்ப்பித்தாரா? அதாவது அது தகாத செல்வாக்கு மற்றும் வற்புறுத்து வதில் பெறப்பட்டதாக திரு.என்.பி.மனோகரன் மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் நமக்கு PW1இன் சான்று மட்டுமே கோரிக்கையை ஆதாரமாக்க போதியதாகாது. அதாவது ஆவணம் மோசடியில் வற்புறுத்தலில் மற்றும் செல்வாக்கில் பெறப்பட்டது என்பதற்கு, PW1ஆல் கூறப்பட்ட குறிப்பிட்ட சிலவற்றில் விசாரணை நீதிமன்றம் கண்ட முடிவாவது பதிவேட்டின் சான்றுக்கு மாறாக உள்ளது.

வழக்கறிஞர் பணிந்தளிப்பது மகள் தந்தை உறவு சுமூகமாகவே இருந்தது. அதாவது ஏற்பாட்டு ஆவணம் நிறைவேற்றப்படும் வரையில், அதன் பின்னர், தந்தை மகளால் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் அவரது மனதை அவன் மாற்றி இந்த வழக்கை இடச் செய்துள்ளார் என்பது. பின்வரும் சான்றுகளின் பகுதி அதாவது குறுக்கு விசாரணையில் PW1 இவரது வாதங்களுக்கு ஆதாரமானவை.

"முதல் இரண்டு மகள்களுக்கு நகைகள் போட்டு சீர் செய்து திருமணம் செய்து வைத்தேன். அவர்களுக்கு கடன் வாங்கி தான் திருமணம் செய்தேன். எனது மகள் சுசீலாவின் திருமணத்திற்கு எனது மகன் ரூ.15,000 கொடுத்தார் என்றால் சரியல்ல. ரூ.10,000 கொடுத்து விட்டு ரூ.15,000 என்று சொல்கிறான். சிவகாமிக்கு திருமணம் செய்யும்போது என்னிடம் கையில் பணம் இல்லை. சிவகாமி திருமணத்தை எனது மகன்தான் நகை போட்டு திருமணம் செய்து வைத்தான் என்றால் சரியல்ல. நான் செலவு பாதி, என் மகன் செலவு பாதி போட்டு திருமணம் செய்து வைத்தோம். சிவகாமி திருமணத்திற்கு ரூ.6,00,000 ? செலவாகியிருக்குமா என்றால் இருக்கும்.

எனது மனைவி இறந்த பின்னிட்டு கடந்த 1½ ஆண்டு காலமாக எனது மகன் சண்முகம் என்பவரை வைத்து எனக்கு சமைத்து போட்டு பராமரித்து வந்தான். அதன் பிறகு என் மகன் சிவகாமி என்னை கூட்டி சென்றார்.

பொதுவாக சார்பதிவாளர் பணம் வாங்கி கொண்டீர்களா என்று கேட்டுக் கொண்டு தான் பத்திரம் பதிவார் என்றால் சரிதான். எனது மகனுக்க சொத்தை தானமாக கொடுத்து பத்திரம் எழுதி வைத்தேன். அப்போது சார்பதிவாளர் உங்கள் மகனுக்கு பத்திரம் எழுதி வைக்கிறீர்களா என்று கேட்டார். நான் ஆமாம் என்று சொன்னேன்."

11. வழக்கறிஞர் பதிவு செய்தல் சட்டத்தின் 60ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிற்கு நமது கவனம் ஈர்க்கப்படுகிறது. பதிவாளர்களால் மேற் குறிப்பு எழுதப்பட்டது பற்றிய அதாவது முறை யாவணங்கள் பதிவு செய்யப்படும்போது பிரிவு 60இன் (2)ஆம் உட்பிரிவு பின்வருமாறு படிக்கப்படுகிறது.

"60 பதிவு செய்தல் பற்றிய சான்றிதழ் (1)... ... ...

(2) அத்தகைய சான்றிதழ் கையொப்ப மிடப்பட்டு, முத்திரை பதிக்கப்பட்டு தேதியிடப் படுதல் வேண்டும். பதிவு செய்யும் அலுவலரால் மற்றும் அப்போது அது. இந்தச் சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்ட முறையில் உரியவாறு அது பதிவு செய்யப்பட்டதாக ஆவணத்தை மெய்ப்பிப்ப தற் கான ஆவணமாக ஏற்கத்தக்கது. எண்பது மற்றும் மேற்குறிப்பில் குறிப்பிடப்பட்ட பொருண்மை கள் பிரிவு 59இல் சுட்டப்பட்டவை. இதில் குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

12. உச்சநீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்து ஆதாரத்தை வழக்கறிஞர் காட்டியுள்ளார். ஜமீலா பேகம் இறப்பு சட்ட சார்பாளர்கள் மூலமாக –எதிர்– சியாமி முகமது இறப்பு சட்ட சார்பாற்றுநர்கள் மற்றும் பிறர், 2019 (2) உச்.நீ.வ. 727. இதில் உச்சநீதிமன்றம் சான்றுச் சட்டத்தின் 114ஆம் பிரிவின்படியான துணிபை கூறியுள்ளார். பதிவு செய்தல் என்பது சாதாரண முறைப்படி செய்யப் பட்டுள்ளது. அலுவலகப் பணியாக துணைப் பதிவாளரால். இதில் முறையாவணத்திற்கு நம்பிக்கையூட்டுவதாக அமைகிறது.

13. மாறாக வாதிட்டதில் திரு.E.P. சென்னியங் கிரி முதல் எதிர்வழக்கீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர் பணிந்தளிப்ப தாவது வாதி 80 வயதானவர். அதாவது முறையாவணம் நிறைவேற்றப்பட்டபோது அதுவும் மனைவியின் இறப்பிற்குப் பின்னர் 1½ மாதத்திற்குள் நிறைவேற்றப்பட்டது. வாதிக்கு 4 மகள்கள் மற்றும் ஒரு மகன். இதில் மகன் மட்டுமே ஏற்பாட்டு ஆவணம் தன் சார்பாக எழுதியிருக்க முடியாது. வாதியின் செயற்பாடு முறையீட்டை முன்னிடுவது அது பதிவு செய்யப்பட்ட பின்னர், அதுவும் பதிவு செய்யப்பட்ட 6 மாதங்களில் அதுவும் வழக்கறிஞர் சுட்டிக் காட்டியுள்ளது. வாதி மகளின் பாதுகாப்பில் இருந்து வந்துள்ளது பற்றி. அதாவது ஏற்பாட்டு ஆவணம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அவளது பாதுகாப்பில் தந்தையை வைத்திருக்க அவள் இசையவில்லை என்பது. எனவே மோசடியும் தகாத செல்வாக்கும் உள்ளது. துணிபு பதிவு செய்தல் சட்டத்தின் பிரிவு 60(2). இதனால் பயன் இல்லாமல் மற்றும் எதிர்வாதி ஆவணம் வாதியால் நிறைவேற்றப் பட்டது என்பது. முழு விவரம் ஆவணத்தின் செயற்பாடு.

14. நாங்கள் எதிரெதிர் பணிந்தனுப்புதல் களைக் கருதுகை செய்துள்ளோம்.

15. தரப்பினர்களிடையேயான உறவுமுறை ஏற்கப்படுகிறது. ஏற்பாட்டு ஆவணம் ExA8 என்று குறியிடப்பட்டது. நிறைவேற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டது 29.8.2013 இதுவும் ஏற்கப் பட்டது. ஒரே கோரிக்கை ஆவணம் வரையுறுதி யும் தகாத செல்வாக்கிலும் இறுதி பெறப்பட்டது என்பது. மோசடி என்பது எழுப்பப்பட முடியாது. அச்சுறுத்தி கட்டை விரல் ரேகைப் பதிவு எடுக்கப் பட்டது என்பது. இது தகாத செல்வாக்கு மட்டுமே PW1இன் சான்றின் பகுதிகள் உள்ளன. குறுக்கு விசாரணையில் பெறப்பட்டவை. இவர்களிடை யிலான உறவுமுறை சுமூகமாகவே இருந்துள்ளது. தந்தை, மகள்களின் திருமணத்திற்கு மகன் செலவழித்தது பற்றி கூறியுள்ளார். ஈரோட்டில் திண்டலில் மகன் சொத்து வாங்கியது அவனது பணம் என்று கூறியுள்ளார் மற்றும் தான் அந்தச் சொத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்பதை யும் கூறியுள்ளார். மேலானது PW1இன் இதில் பல நேர்மறையாகவே பதிலளிக்கப்பட்டுள்ளன. பதிவு செய்தல் சட்டத்தின் பிரிவு 60(2)இன் படியான துணிபு பற்றி கவனம் ஈர்க்கப்படுகிறது. பிரிவு 35 பதிவு செய்தல் சட்டம் பதிவு செய்யும் அலுவலருக்கு ஒரு கடமைப் பொறுப்பை அளிக்கிறது. அதாவது பத்திரம் நிறைவேற்று லும் அவர் இசைகிறாரா என்பது. இதில் பதில் ஆம் என்பது இருந்தால் மட்டுமே ஆவணம் பிரிவுகள் 58–61 (இரண்டும் உள்ளடங்கலாக) பதிவு செய்யப்படும் என்பது.

16. பிரிவு 58இன்படி துணைப் பதிவாளர், ஆவணங்களில் சில பொருட்பாடுகளை மேற் குறிப்பிடுதல் வேண்டும். அதாவது பதிவுக்காக ஏற்கப்பட்ட ஆவணங்கள், பிரிவு 58இன் (1)ஆம் உட்பிரிவின் (அ) உட்கூறு துணைப் பதிவாளரை நிறைவேற்றுதலை ஏற்கிற ஒவ்வொருவரிடமிருந்து கையொப்பம் பெறுதல் வேண்டும் என்பது மற்றும் இது பற்றியும் மேற்குறிப்பு எழுதுதல் வேண்டும். அதாவது அவர் நிறைவேற்றுதலை ஏற்றதாக. துணைப் பதிவாளர் இதனை நிறைவேற்றுதலை அடையாளங்காண் பவர், மேற்குறிப்பெழுதுதல் வேண்டும், அதாவது துணைப் பதிவாளர்.

17. பிரிவு 9 கோருவது மேற்குறிப் பெழுதுதல் தேதியிடப்பட்ட கையொப்பமிடப்பட வேண்டும், பதிவு செய்யும் அலுவலை.

18. பிரிவு 80, விளம்புகை செய்வதாவது பிரிவுகள் 34, 35, 58, 59ஆம் பிரிவுகளின் தேவைகள் இணங்கப்பட்ட பின்னர் பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்யப்பட்டது என்றும் சொல் அடங்கிய சான்றிதழை மேற்குறிப்பு எழுதுதல் வேண்டும். அத்துடன் என் மற்றும் புத்தகத்தின் பக்கம் அதாவது உண்மைப்படி நிரப்பப்பட்டதை இவை அனைத்தும் பிரிவு 62 எதிர்பார்ப்பது மற்றும் இது பற்றி சட்ட துணிபு கொண்டும். அதாவது மேற்குறிப்பில் குறிப்பிடப் படும் பொருண்மைகள் பற்றி பிரிவு 51 சுட்டும். எனவே, பதிவாளர் மேற்குறிப்பெழுதியதும் அதாவது 60ஆம் பிரிவின்படி மற்றும் பதிவு செய்தல் பற்றிய சான்றிதழ் ஏற்படுத்தப்பட்டதும் சான்றிதழில் உள்ளடக்கம் பற்றி துணிபு கொள்ளுதல் வேண்டும். அதாவது அவை நடைபெற்றதாகவும் மற்றும் அதனை எதிர்ப்பவர்கள் வேறு விதமாக மெய்ப்பிப்பது பற்றி கையில் உள்ள வழக்கில், சான்று கிடைக்கத்தக்க தாக இருப்பதை நாம் பார்க்க நேர்ந்ததால், நமக்கு வேறு சான்றுகள் எதுவும் இல்லை. வாய்மொழிச் சான்றான PW1 வழக்கிற்கு ஆதரவாக. சொல்லப்பட்ட வாய்மொழிச் சான்று முழுவதுமாக போதுமான நல்லது. அதுவும் குறிப்பாக இதில் அடங்கியுள்ள ஏற்புரைகள் தொடர்பாக, அதாவது துணிபுகளை தகர்த் தெறிய இவை சட்ட செயற்பாட்டினால் ஏற்ட்டவை. விசாரணை நீதிபதி பொருண்மைகளின்படிச் சென்றுள்ளார். PW1 தன்னுடன் எந்தச் சொந்தக் காரனையும் அழைத்துச் செல்லவில்லை. அதாவது முறையாவணம் பதிவு செய்யப்படுவ தற்கு அது மட்டுமே நாம் அதிக கருதுகை செய்ய விலக்குகிறது. இதன் காரணமாக நாம் மேற் குறிப்பெழுதியதைச் சந்தேகிக்க முடியாது. அதாவது பதிவு செய்யும் அலுவலரின் கையொப்பத்தினை அளிக்கப்பட்ட சான்றுகளை விடக் கூடுதலானவை PW1 தொடர்பாக. துணிபு களை மாற்ற தேவைப்படுகிறது. விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிடமிருந்து எதுவும் பெற துணிபு களை மாற்ற தேவைப்படுகிறது. விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிடமிருந்து எதுவும் பெறப்பட

வில்லை. எதிர்ப்பு தொடர்பாக எதுவும் எழுத்தர் சான்றொப்பதாரர்கள் இவர்களின் மூலம் தகாத செல்வாக்கு பயன்படுத்தப்பட்டதாக அறியப்பட வில்லை.

19. உச்ச நீதிமன்றம் சமீனாபேகம் வழக்கில், சான்றுச் சட்டத்தின் 14ஆம் பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட துணிபு அலுவலகச் செயற் பாட்டின் சுட்டுகையின்படி, முறையாவணம் பதிவு செய்யப்பட்டது. இது செல்லத்தக்க முறையில் முறையாவணம் செயற்படுத்தப்படும் என்பது. அவ்வாறு செய்வதில் உச்சநீதிமன்றம், விஸ்வநாத் பாபுராவ் சாபேல் –எதிர்– சாலினிபாய் நாகப்ப சாபில், 2009 (12) உச்.நீ.வ. 101 உச்சநீதிமன்றம் பின்வருமாறு கண்டறிந்தது.

16.....

27. ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் செல்லத்தக்கமுறையில் நிறைவேற்றப்பட்டது என்ற துணிபு ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் முதல் நோக்கிலே சட்டப்படி செல்லத்தக்கதாகும். இது பற்றிய மெய்ப்பிக்கும் சுமை சான்று அளிப்பவரையே சாரும். அதாவது துணிபை மாற்றக் கூடிய அளவிலான, சான்று, அளிக்கப் பட்ட வழக்கில், எதிர்வழக்கீட்டாளர் 1 சொல்லப் பட்ட துணிபை எதிராக மெய்ப்பிக்க முடிய வில்லை.

20. மேற்சொல்லப்பட்டதல்லாது DW2 & DW3இன் சான்றுதல் அதாவது எழுத்தர் மற்றும் மேலொப்பமிடும் சாட்சிகளின் சான்றுகள் கோரக் கூடியதாகவும், நம்பக் கூடியதாகவும் உள்ளன. அதாவது ஏற்பாட்டு ஆவணம் நிறைவேற்றப் பட்டது. தொடர்பாக விசாரணை நீதிமன்றம் துரதிருஷ்டவசமாக சொல்லப்பட்ட சான்றை நிராகரித்துள்ளது மற்றும் PW1இன் சான்றை மட்டும் கொண்டு முடிவு செய்துள்ளது. அதனைக் கொண்டு வற்புறுத்தலில் தகாத செல்வாக்கினால் இது பெறப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருப்பது. விசாரணை நீதிமன்ற முடிவை நாம் உறுதி செய்ய முடியாது. அதுவும் சட்ட நிலையில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளவாறு துணிபு பற்றிய சுட்டுகை அதுவும் பதிவு செய்யப்பட்ட முறை யாவணம் தொடர்பாக என்பது. எனவே நாம் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையைத் தள்ளுபடி செய்கிறோம்.

21. மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்களிடையே உள்ள உறவுமுறையை கருதுகை செய்து நாம் பணிப்பது தரப்பினர்கள் தங்கள் தங்கள் செலவுகளை ஏற்க வேண்டும் என்பது. அதாவது மேல்முறையீடு தொடர்பாக. நமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்தத் தீர்ப்பு தெரிவிக்கப் பட்டதன்பேரில் தொடர்புடைய உதவிப் பதிவாளர் இதற்கான சான்றொப்பத்தினை இடுவார் மற்றும் மு.வ.11/2016இல் உள்ள தீர்ப்பாணை இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

## கோயில் விழா அழைப்பிதழில் சாதி பெயர் கூடாது

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

கோயில் திருவிழாக்களுக்கான அழைப்பிதழ் களில் உபயதாரர்களின் பெயரில் சாதி பெயர் இடம் பெறக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருப்போரூர், கந்தசுவாமி கோயில் மாசி பிரம்மோற்சவ விழாவுக்கான அழைப்பிதழில் சாதிப் பெயர்களை பயன்படுத்த தடை விதிக்கக் கோரி திருப்போரூரை சேர்ந்த சமரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி, விழா அழைப்பிதழில் உபய தாரர்களின் பெயர்கள் சாதிப் பெயருடன் இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டு, அறநிலையத் துறை நடத்தும் விழாவில், சாதி பெருமையை ஊக்கு விப்பதை அனுமதிக்க முடியாது.

அடுத்த விழாக்களின் போது அச்சிடப்படும் அழைப்பிதழ்களில் உபயதாரர்களின் பெயர்கள் மட்டுமே இடம் பெற வேண்டும். சாதி பெயர்கள் இடம் பெறக் கூடாது என உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்துள்ளார்.

மேலும், அந்த உத்தரவில், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என சொல்லும் நிலையில், பிறப்பால் மட்டுமே சாதி வருகிறது. பிறப்பு மட்டுமே மக்களை பிளவுபடுத்துகிறது. நாட்டில் சாதியை ஒழிக்க ஒவ்வொரு அதிகாரிகளும் முயற்சிக்க வேண்டுமே தவிர, அதை பெரிதுபடுத்தக் கூடாது எனவும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

**நன்றி: இந்து தமிழ் 21.02.2026**

# மூன்றாவது பிரசவம் என்று சொல்லி பொது பணியாளரின் பேறுகால சலுகைகளை தடை செய்யக் கூடாது

**சென்னை உயர்நீதிமன்றம்**

**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.சுரேஷ் குமார்,**
**மாண்புமிகு நீதிபதி திரு.ஷமீம் அஹமது**

**நீ.பே.எண் 705/2026**

**நாள் 21/01/2026**

**(2026 Livelaw (Mad) 42)**

**பி.மங்கையர்கரசி** ...**மனுதாரர்**

**–எதிர்–**

**1. பதிவுத்துறை தலைவர்,**
**சென்னை உயர்நீதிமன்றம்**
**2. பதிவாளர் (நிர்வாகம்),**
**சென்னை உயர்நீதிமன்றம்** .. **எதிர்மனுதாரர்கள்**

**வேண்டுகை**: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 226–வது பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவானது, இரண்டாவது எதிர்மனுதாரரால் 15.12.2025 தேதியிட்ட Roc.No.131981/2025~Estt.IV என்ற குறிப்பாணையின் மூலம் மகப்பேறு விடுப்பை நிராகரித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் நேரில் வரவழைத்து, அந்த உத்தரவு சட்டவிரோதமானது மற்றும் தன்னிச்சையானது என அறிவித்து அதனை ரத்து செய்ய கோருகிறது; மேலும், மனுதாரர் 28.07.2025 முதல் 30.10.2025 வரை (ஈட்டிய விடுப்பு), 03.11.2025 முதல் 19.12.2025 வரை (மருத்துவ விடுப்பு) மற்றும் 26.12.2025 முதல் 09.01.2026 வரை (ஈட்டா விடுப்பு) எடுத்த விடுப்புகளை ரத்து செய்துவிட்டு, அவருக்கு 08.08.2025 முதல் 07.08.2026 வரையிலான ஓராண்டு காலத்திற்குரிய அனைத்து மகப்பேறு நன்மைகளையும், இந்த நீதிமன்றம் நிர்ணயிக்கும் காலக்கெடுவிற்குள் வழங்க எதிர் மனுதாரர்களுக்கு உத்தரவிடக் கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது.

மனுதாரருக்காக–திரு.எம்.தினேஷ், வழக்கறிஞர்

எதிர்மனுதாரருக்காக – திருமதி கார்த்திகா அசோக், வழக்கறிஞர்

## தீர்ப்பு

**நீதிபதி திரு ஆர்.சுரேஷ்குமார்**

1. மனுதாரரின் மூன்றாவது மகப்பேறு அல்லது மூன்றாவது கருத்தரிப்பிற்காக மகப்பேறு விடுப்பு வழங்கக் கோரிய விண்ணப்பத்தை நிராகரித்து, இரண்டாவது எதிர்மனுதாரர் 15.12.2025 அன்று பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இந்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. சர்ச்சைக்குரிய 15.12.2025 தேதியிட்ட உத்தரவைப் பிறப்பிப்பதற்கு இரண்டாவது எதிர் மனுதாரர் கூறியுள்ள காரணமாவது: தமிழ்நாடு அரசு மனிதவள மேலாண்மைத் துறை (F.R.III) செயலர், 25.08.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, நிரந்தரமான அல்லது தற்காலிகமான திருமணமான பெண் அரசு ஊழியர்களுக்கு அவர்களின் மூன்றாவது குழந்தை அல்லது மகப்பேற்றிற்கு விடுப்பு வழங்க தமிழ்நாடு அடிப்படை விதிகளில் இடமில்லை என்று விளக்கம் அளித்துள்ளார் என்பதாகும்.

3. இச்சூழலில், இதே போன்றதொரு விவகாரம் இந்த நீதிமன்றத்தின் அமர்வு முன்னிலையில் (W.P.No.33559 of 2025) ஏற்கனவே பரிசீலனைக்கு

வந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த அமர்வில் எங்களில் ஒருவரும் (RSKJ) இடம்பெற்றிருந்தார். அந்த மனுவிலும் இதே போன்ற உண்மைகள் எதிர்கொள்ளப் பட்டன. கௌரவமிகு உச்ச நீதிமன்றம் உமாதேவி மற்றும் பலர் எதிர் தமிழ்நாடு அரசு (2025 SCC OnLine SC 1204) என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பைப் பின்பற்றி, 04.09.2025 அன்று அந்த மனுவை அனுமதித்து இந்த நீதிமன்றத்தின் இரு நீதியர் அமர்வு இறுதி உத்தரவு பிறப்பித்தது.

4. இருப்பினும், சர்ச்சைக்குரிய 15.12.2025 தேதியிட்ட உத்தரவில், W.P.No.33559 of 2025 வழக்கில் இந்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு அந்த மனுதாரருக்கு மட்டுமே பொருந்தும் என்று இரண்டாவது எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

5. உச்ச நீதிமன்றம் உமாதேவி வழக்கில் வகுத்தளித்த கொள்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட இத்தகைய நீதித்துறை உத்தரவானது பொதுவானது ஆகும். அவ்வாறிருக்கையில், அந்தத் தீர்ப்பு சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு மட்டுமே பொருந்தும் என்று கூறுவதை ஏற்க முடியாது. அவ்வாறு கூறுவதன் மூலம், சம்பந்தப் பட்ட அதிகாரி (இரண்டாவது எதிர்மனுதாரர்), அத்தீர்ப்பு ஒரு நபருக்கு மட்டுமே உரித்தான தீர்ப்பு என்பது போன்ற ஒரு விளக்கத்தை அளிக்க முயல்கிறார். இரண்டாவது எதிர்மனுதாரர் அளிக்க முற்படும் இத்தகைய விளக்கத்தைப் பாராட்ட முடியாது.

6. மேலும், இதே போன்ற உண்மைகளைக் கொண்ட மற்றொரு வழக்கும் (W.P.No.48656 of 2025) இந்த அமர்வின் முன் வந்தது. அந்த மனுவும் உச்ச நீதிமன்றத்தின் உமாதேவி வழக்குத் தீர்ப்பு மற்றும் பி.ரஜிந்தா –எதிர்– பதிவுத் துறைத் தலைவர், சென்னை உயர்நீதிமன்றம் (W.P.No.33559 of 2025) ஆகிய வழக்குகளின் தீர்ப்புகளைப் பின்பற்றி 17.12.2025 அன்று அனுமதிக்கப்பட்டது.

7. இதே போன்ற உண்மைகள் அடங்கிய ஒரே விவகாரத்தில் இரண்டு அமர்வுகள் அடுத்தடுத்து உத்தரவுகளைப் பிறப்பித்துள்ள நிலையில், அதாவது மூன்றாவது மகப்பேறு விடுப்பு கோரிக்கையை நிராகரித்ததை எதிர்த்த மனுக்களை நீதிமன்றம் அனுமதித்துள்ள நிலையில், தற்போதுள்ள எதிர்மனுதாரர்களான உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட நீதித்துறை ஆகியன அந்தத் தீர்ப்புகளில் உள்ள சட்டக் கோட்பாடுகளைப் புரிந்து கொண்டு உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

8. ஏற்கனவே உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருந்தும், W.P.No.33559 of 2025 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் முக்கியத்துவத்தை முழுமையாக அறிந்திருந்தும், இரண்டாவது எதிர்மனுதாரர் 25.08.2025 தேதியிட்ட அரசுச் செயலரின் கடிதத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து, நீதிமன்றத்தின் உத்தரவு குறிப்பிட்ட நபருக்கு மட்டுமே பொருந்தும் என்று கூறி நீதிமன்ற உத்தரவைத் தவிர்க்க முயல்கிறார்.

9. சம்பந்தப்பட்ட அதிகாரிகளால், குறிப்பாக தற்போதுள்ள இரண்டாவது எதிர்மனுதாரரால் கடைபிடிக்கப்படும் இத்தகைய தேவையற்ற பிடிவாதமான அணுகுமுறையைப் பாராட்ட முடியாது.

10. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இதில் எழுப்பப்பட்டுள்ள விவகாரமானது ஏற்கனவே குறிப்பிடப்பட்ட தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்பதால், இந்த நீதிப்பேராணை மனுவில் பின்வரும் உத்தரவுகளை நாங்கள் பிறப்பிக்கிறோம்: சர்ச்சைக்குரிய அந்த உத்தரவு ரத்து செய்யப் படுகிறது. அதன் தொடர்ச்சியாக, மனுதாரருக்கு 08.08.2025 முதல் 07.08.2026 வரையிலான காலத்திற்கு, அவருக்குரிய அனைத்து பணிப்பலன்கள் மற்றும் இதர சலுகைகளுடன் மகப்பேறு விடுப்பு நன்மைகளை நீட்டிக்குமாறு எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது. இதற்கான தகுந்த உத்தரவுகளை, இந்தத் தீர்ப்பு நகல் கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் எதிர்மனுதாரர்கள் பிறப்பிக்க வேண்டும்.

11. இந்த வழக்கின் முடிவாக நாங்கள் கூற விரும்புவது யாதெனில், இந்த நீதிமன்றத்தால் மீண்டும் மீண்டும் தீர்ப்புகள் பிறப்பிக்கப்பட்டும், அந்த உத்தரவுகள் பற்றி அறிந்திருந்தும், எதிர்மனுதாரர்கள் போன்ற அதிகாரிகள் அந்தத் தீர்ப்புகளின் அடிப்படை சட்டக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாமல், மூன்றாவது மகப்பேறுக்காக ஊழியர்கள் கோரும் விடுப்பு விண்ணப்பங்களை மீண்டும் மீண்டும் நிராகரிப்பது வேதனைக்குரிய விஷயமாகும். எனவே, தற்போதுள்ள உத்தரவைப் போன்ற (சர்ச்சைக்குரிய உத்தரவு) நிகழ்வுகள் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்றப் பதிவுத் துறைத் தலைவருக்கு நாங்கள் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறோம். அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட நீதித்துறையின் அனைத்துத் தலைவர்களுக்கும், வருங்காலங்களில் இதே போன்ற வழக்குகளில் கண்டிப்புடன் பின்பற்றுவ தற்காக இந்த உத்தரவைச் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும்.

12. இதே போன்ற உத்தரவு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலருக்கும் பிறப்பிக்கப் படுகிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட உமாதேவி வழக்கு, பி.ரஜிந்தா வழக்கு மற்றும் ஜி.உமா நந்தினி ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் சட்டக் கோட்பாடுகளை அரசு கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். மேலும், இந்தத் தீர்ப்பின் நகலை அரசின் அனைத்துச் செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் அனுப்பி, அவர்கள் இதனைத் தவறாமல் கடை பிடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

13. இந்த உத்தரவுகளுடன், இந்த நீதிப் பராணை மனு அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், செலவுத் தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இதன் விளைவாக, இதனுடன் தொடர்புடைய இதர மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## பொது மயானத்தை ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் பயன்படுத்த அனுமதி மறுப்பது, தீண்டாமையே

### சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம்

பொது மயானத்தை ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் பயன்படுத்த அனுமதி மறுப்பது, தீண்டாமைக்கு சமம் என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிப் பாளையம் கிராமத்தில் உள்ள வண்டிப் பாதை நிலத்தை மயானமாக மாற்றக் கோரியும், மயானம் என வரைய றுக்கப்பட்ட இடத்தில், உடல் அடக்கம் செய்யப்படுவதை உறுதி செய்ய கோரியும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு களை விசாரித்த நீதிபதி வி.லட்சுமி நாராயணன் பிறப்பித்த உத்தரவு.

கருமாண்டி செல்லிப்பாளையத்தில் சர்ச்சைக்குரிய நிலம், வண்டிப்பாதை புறம்போக்கு என வகைப் படுத்தப்பட்டு உள்ளது. எனினும், 70 ஆண்டுகளுக்கும் மேலாக மயானமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, அங்கு வசிக்கும் அருந்ததியர் சமூகத்தினர், இந்த நிலத்தில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய பயன்படுத்தி வருகின்றனர். சர்ச்சைக்குரிய நிலம் குறித்து மாவட்ட கலெக்டரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கவலை அளிக்கிறது. ஏனெனில், மயானமாக பயன்படுத்தும் இடத்தில், அடக்கம் செய்யப்பட்ட உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டு இயந்திரங்கள் உதவி யுடன் தனி நபர்களால் சமன் செய்யப்பட்டு உள்ளன.

### எரிவாயு மயானத்தில் இலவச தகனம்

ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள், பொதுவாக உள்ள மயானம் அல்லது தகனம் செய்யும் இடத்துக்கு செல்ல அனுமதி மறுப்பது குற்றம். இது தீண்டாமையின் ஒரு வடிவம், அரசியலமைப்பு சட்டப்பிரிவு 17க்கும் முரணானது, பொதுவாக உள்ள மயானத்தை பயன் படுத்த அனுமதி மறுப்பதும் அங்குள்ள கல்லறைகளை சிதைப்பதும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கடும் குற்றம். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ், கல்லறைகளை சேதப்படுத்திய நபர்கள் மீது மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருந்தும் அதைச் செய்ய அவர் தவறி விட்டார். வாழும்போது கண்ணியத்துடன் வாழ உரிமை உள்ளது போல இறந்தவர்களுக்கு கண்ணியத்துடன், இறுதி சடங்கு செய்வதும் உரிமை. எனவே சம்பந்தப்பட்ட நிலத்தில் உள்ள மயானம், எவ்வித ஆக்கிரமிப்பு அல்லது குப்பை கொட்டும் மாறாமல் இருக்க, தேவையான நடவடிக்கையை, கருமாண்டி செல்லிப்பாளையம் பேரூராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்ச்சைக்குரிய நிலத்தை வண்டிப்பாதை என்ற வகைப்பாட்டிலிருந்து நீக்கி, மயானம் உடனே மாற்ற வேண்டும். மயானத்தை சுற்றி வேலி அமைத்து உரிய பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மயானத்தில் இருந்த கல்லறைகளை சேதப்படுத்திய நபர்கள் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**நன்றி: தினமலர் 21.2.2026**

# காப்புரிமையும் கண்டுபிடிப்புகளும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.பி.பி. பாலாஜி
T.(C.MA) (PT) எண் 2/2024
நாள்: 23.8.2024
(2024 (6) CTC 674)

வெர்சாலிஸ் ஸ்பா, பிஸா போல்டுரினி, 1-20097, சான் டோனடோ மிலனிசா (MI), இத்தாலி - அதன் அமைக்கப்பட்ட அட்டார்னி பிரதீப் யாதவ்

...மேல்முறையீட்டாளர்

-எதிர்-

பகர அதிகாரங்களின் உதவிக் கட்டுப்பாட்டு அலுவலர், அறிவுசார் சொத்து அறிகை அலுவலர், கட்டிடம் ஜிஎஸ்டி சாலை, கிண்டி

...எதிர்வழக்கீட்டாளர்

**அருண் சி. மோகன்**
**சதா என்பவர்க்காக சதா**
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்கள்

**வி.டி. பாலாஜி மைய அரசு,**
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.ப.வி. அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகை ன்றி.

**கோரிக்கை:** இந்த மேல்முறையீடு, இடமாற்றம் மனு எண்ணிடப்பட்டது. IPAB வழக்கு. மு.வி.எண் OA SR. No.74/2017/PT/CHN அது அறிவுசார் சொத்து ஆளுநர், மேல்முறையீட்டு வாரியம், சென்னை அதில் கோரப்பட்டதாவது, தற்போதைய மேல்முறையீட்டை அனுமதிக்க கோருவது. 2.5.2017 தேதியிட்ட ஆணையினைத் தள்ளுபடி செய்யக் கோருவது. உதவிக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் தற்போதைய விண்ணப்பம் IN7854/CHENP/2011 வழங்கப்படவும் மற்றும் எதிர்வழக்கீட்டாளருக்கு பணிப்புரைகளை வழங்கவும், அவரது கோரிக்கை எதிர்வழக்கீட்டாளரை பணிப்புரைகளை வழங்க அனுமதிக்க மேல் முறையீட்டாளர், தேவையான திருத்தங்கள் கோரிக்கையில் செய்யவும், தேவைப்படுமானால் விண்ணப்பத்திற்கான ஆணையில் தேவைப் படுமானால் செலவுத் தொகைக்கு மேல்முறை யீட்டாளரை அனுமதிக்க கோரிக்கை.

தீர்ப்பு 24.7.2024க்கு ஒதுக்கீடு செய்யப் பட்டு 23.8.2024 அன்று வெளியிடப்பட்டது.

1. மேல்முறையீட்டாளர் எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட 2.5.2017 தேதியிடப்பட்ட ஆணை எதிர்க்கப்படுகிறது 7854/CHENP/2011இல் மேல் முறையீட்டாளரின் விண்ணப்பத்தினை நிராகரித்தும், அதாவது அவரது கண்டறிதல் ஒரு நடைமுறை ஹைடிரோலிசிஸ் லிக்னோ செலுலோசிக் பயோமாஸ் என்பது பற்றியது.

2. திரு.அருண் சி. மோகன், மேல்முறை யீட்டாளரின் வழக்கறிஞர் மற்றும் திரு.வி.டி.பாலாஜி மைய அரசு, பட்டியல் வழக்கறிஞர்

எதிர்வழக்கீட்டாளருக்காக, எதிர்ப்புக்குள்ளாக்கப் பட்ட ஆணை உள்ளடங்கலாக, பதிவேடுகள் என்னால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதை நான் கவனமாக, மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் ஆதாரமாக வைத்த முடிவுகளை படித்துள்ளேன்.

3. முக்கிய ஆதாரம், அதாவது உரிமை நிராகரிக்கப்பட்டது. கோரிக்கைகள் கண்டுபிடிப்புகள் அல்ல என்பதற்காக 1970 காப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 2(1)(ja)இன்படி இது நிராகரிக்கப் பட்டது.

4. சொல்லப்பட்ட ஆணையினை எதிர்த்தற் காக முக்கிய காரணம், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரால் கூறப்பட்டவாறு, மேல்முறை யீட்டாளர் இயற்கெனவே தெளிவாகக் காட்டி யுள்ளது. கோரப்பட்ட கண்டுபிடிப்பு பிற நிலை களை கடந்துள்ளது. வழக்கான முறை அதாவது ஹைடுரோலிஸ் செல்லுலோஸ் அடிப்படை சர்க்கரை என்பதில் இடற்பாடு இதுவே அதிக நேரத்தையும் முயற்சியையும் வீணாக்கியது மற்றும் முடிவாக பொருளாதாரத்திலும் பின்ன டைவானது. கோரப்பட்ட கண்டுபிடிப்பு பெரிது

படுத்தக் கூறியதல்ல மற்றும் இந்த நடைமுறை வெகு சிறிய நேரத்திலேயே பெறக் கூடியது. அதுவன்றி, கண்டுபிடிப்பு எந்த இன்ஆர்கானிக் திராவகம் அல்லது எந்த லிக்ளின் தேவையும் இருக்காது. கரைசலுக்காக.

5. கண்டுபிடிப்பு நடைமுறையைக் கொண்டுள்ளது. அதில் பயோமரஸ் அடங்கியுள்ளது. இது அதிக அளவில் உவர் நிலையில் இருக்கும். அத்துடன் தண்ணீர் சேர்க்கப்படுகிறது. கரைசலுடன் அதில் சிறிய ஊக்கியும் இத்துடன் தொடர்பை ஏற்படுத்துகிறது. 20 சென்டிகிரேடு முதல் 95 டிகிரி வரை ஹைடிரோசெட் என்னும் பொருள் உற்பத்தி பயோமான் பின்புலனாக.

6. திரு.அருண் சி. மோகன் வாதிடுவதாவது தற்போதைய கண்டுபிடிப்பு மேலை நாடுகளில் ஏற்பிசையளிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக 23 காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது ஆஸ்திரேலியா, பிரேசில், சைனா, யுரோப், நியூசிலாந்து, யு.எஸ்.ஏ., தென்னாப்பிரிக்கா முதலியானவைகள் மற்றும் அதிக முக்கியமாக சுட்டப்பட்ட அனைத்தும் நி.ம. விண்ணப்பம் விசாரணை பற்றியும் கூறப்பட்டது மற்றும் பயன்பாடு, கோரப்பட்ட கண்டுபிடிப்பு புதியதாக கூறப்பட்டது மற்றும் முந்திய கலைகள் பற்றியும் கூறப்பட்டது.

7. அவர் என்னை முந்திய செயற்பாடு களுக்கு, குறிப்பிடப்பட்டவற்றை எடுத்துக்காட்டி கூறியுள்ளார். அவை மேல்முறையீட்டாளருக்கு எதிரானவர் மற்றும் அவர் அவரது பணிந்த னுப்புதல்களை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். அதாவது கட்டுப்பாட்டு அலுவலர் எவ்வாறு தவறாக செயற்பட்டார் என்பதையும் அதன்படி அவரது காப்புரிமையை நிராகரித்துள்ளார் என்பதும், இவை கண்டுபிடிப்பு நடவடிக்கைகள் இல்லாதிருப்பதாகவும் முந்திய செயற்பாடு களுடன் ஒப்பிட்டுள்ளார். அவர் மேலும் பணிந்தளிப்பது அதாவது D1, D3, D8, D9 & D10 மற்றும் அவரது பணிந்தனுப்புதல்கள் தொடர்பாக முந்தியவற்றின் வேறுபாடு அதாவது தற்போதைய கண்டுபிடிப்புகளுடன்

8. அவர் மேலும் பணிந்தளிப்பது இவரது நுதல்பொருள் சட்டத்தின் பிரிவுகளின் 10(4), 10(5)இன் தேவைகள் அனைத்தையும் அளித்துள்ளன என்பது மற்றும் தெளிவாக அது புனையுரிமை பெறத்தக்கன என்றும் சட்டத்தின் 3(9)யினால் பாதிக்கப்படாது என்பது. அவரது வாதத்திற்கு ஆதரவாக மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் பின்வரும் வழக்கின் முடிவுகளை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

(1) எனர்கான் இந்தியா வரம்பிடப்பட்டது அலாய்ஸ் ஓபான், 2013 உச்.நீ.வ. வலைதளம் IPAB 91;

(2) ப்ராப்வெற்கி ஹோஸ்செஸ்ட் அக்ட்கின் கிஸ்ல்ஸ்சாப்ட் வோர்மல்ஸ் மெய்ஸ்டர் லுசியாஸ் அண்டு புருனிங், ஏ. கார்ப்பரேஷன் –எதிர்– யுனிசெம் லெபாரட்டீரிஸ், AIR 1969 Bom. 255;

(3) எஃப்டிசி லிட்., –எதிர்– சஞ்சீவ் கந்தீல் வால் மற்றும் பிறர், MANU/IC/0009/2014;

(4) நாட்கோ பார்மா லிட்., –எதிர்– பிவிசர் பிராடக்ட்ஸ் இங்க்., No.537/Del/1996

(5) காந்திமதி அப்ளையன்ஸ் லிட்., –எதிர்– எல்.ஜி.வரதராஜுலு அண்டு பிறர் 2000 SCC Online Mad 1238;

(6) டாடா குளோபல் பெவரேஜஸ் லிட்., மேற்கு வங்காளம் –எதிர்– ஹிந்துஸ்தான் யுனிலிவர் லிட்., மகாராஷ்டிரா இந்தியா CDJ 2012 IPAB 136.

9. மாறாக, திரு.வி.டி.பாலாஜி, எதிர் வழக்கீட்டாளரின் வழக்கறிஞர், முதலில் முக்கிய மாக பணிந்தளிப்பதாவது, மேல்முறையீட்டாளர் முழுவதுமானதும், நியாயமானதுமான ஒரு வாய்ப்பை அளித்துள்ளார் மற்றும் இதில் இயற்கை நியதிகளின் நெறிமுறைகள் மீறப்பட வில்லை. அவர் இரண்டாவதாக பணிந்தளிப்பது, முந்திய அனைத்துக் கலைகளும், எதிர்பார்க்கப் பட்டது. இதன் நுதல்பொருள் தொடர்பாக கோரப் பட்ட மேல்முறையீட்டாளரின் கண்டுபிடிப்பு, இதில் எந்த தொழில்நுட்ப முன்னேற்றமும், உள்ளடக்கப்படவில்லை. அவர் மேலும் வாதிடுவ தாவது, இதில் தெளிவான கண்டறிதல் இல்லை என்பதும், இதில் பிறவைகளான கற்பிப்பது D1, D3, D5, D9 & D10 இவற்றில் திறமை பெற்று தற்போதைய கண்டுபிடிப்பை அடைய வேண்டியது.

10. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் வாதமாவது, கண்டுபிடிப்பு, சட்டத்தின் பிரிவுகள் 10(4), 10(5)இன் தேவைகளை அளிக்க முடியவில்லை. இதில் இவரது கோரிக்கை தெளிவுற்றுள்ளது. அதிக வெளிப்படைத்தன்மை யதான ஆதாரம் பிரிவு 10(4) மற்றும் கோரிக்கை விவரிப்புகளின் மூலம் ஆதரிக்கப் படவில்லை. இவை செயற்படும் முறை உதாரணங்கள் [பிரிவு 10(5)] வழக்கறிஞர், என கவனத்தையும் ஈர்த்துள்ளார். சட்டத்தின் பிரிவு 3(4) தொடர்பாக மற்றும் பணிந்தளிப்பது கோரிக்கைகள், முந்திய திருத்தங்கள், இவை, அறியப்பட்ட நடைமுறைகளின் பயன்பாடே, இதில் எந்த அறியப்படாத தொழில்நுட்பமும் செயற்படுத்தப்படவில்லை. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர். எனவே, இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யக் கோருகிறார்.

11. இதில் குறிப்பானது முந்திய செயற்பாடு கள் கூறப்பட்டவை D1, D3, D5, D9 & D10 தற்போதைய கண்டுபிடிப்புக்கு மாறுபட்டவை. இவற்றில் எந்த தொழில்நுட்ப முன்னேற்றமும் காட்டப்படவில்லை. சொல்லப்பட்ட முந்திய செயற்பாடுகளில் அதாவது அவற்றை கண்டு பிடிப்புகள் அல்லது புதியவை என்று கூறப்படு வதற்கு முந்திய கலை D1 கற்பிப்பு இந்த -- நிலை மறுசுழற்சி மீண்டும் பழைய நிலைக் கானது. எனினும், மேல்முறையீட்டாளரின் கண்டுபிடிப்பு மிகவும் வேறுபட்டது. இதன் பொருட்பாட்டின் சேர்க்கை மறுசுழற்சி அதே போன்று நன்று. மேல்முறையீட்டாளர், மீண்டும் புகுத்துவது ஹைடிரோகுளோரைடு திரவம் இதனால் நல்ல பயன்கள் ஏற்பட்டுள்ளது. மிகக் குறைநந்த நேரம் இது முந்திய D1இல் வகை செய்யப்படவில்லை. எனவே, நான் கண்டறிவது D1 தற்போதைய கண்டறிதலிதலானது மாறுபட்ட கற்பிப்பு இது D1இனை கண்டறிதலானது.

12. முந்திய D3 தொடர்பாக இது ஒரு சாதனம் என்சைமாடிக் ஹைட்ரோலிசிஸ் மற்றும் நொதித்தல் முந்திய செயற்பாடு லிக்னோ செல்லுலாசிக் பொருளில் ஆனது. இந்த முறை என்ஸைம்கள் கொண்டு மறுசுழற்சி செய்யப் படுவது தற்போதைய கண்டுபிடிப்பு ஒரு ???? தொடர்புடையதாகும்.

13. அடுத்த முந்திய ---- D5. D5 நடைமுறை பற்றியது எதினால் இது அரைக்கப்பட்ட தானியத்திலிருந்து பெறப்பட்டது. இதில் லிக்னோ இன் இல்லை. எனினும் தற்போதைய கண்டுபிடிப்பு நடைமுறை பற்றியது. இது மாறுபட்டது. எனவே, எதிர்வழக்கீட்டாளரின் கண்டறிதல்கள் D5 கற்பிப்பு இவை நிலை பெறத்தக்கதல்ல.

14. முந்திய D9 இதில் உள்ளடக்கிய நடை முறை. இதில் செயற்பட பயன்படுத்தப்பட்டது. லிக்னோ செல்லுலாசிக் மற்றும் கலவையின் மறுசுழற்சி நீட்டிக்கப்பட்ட முறை இதன் செயற்பாடு D9 இது ஒரு கரைப்பானாக செயற்பட முடியாது. அதாவது கச்சாப்பொருளாக.

15. முந்திய D9 தொடர்பாக. இதில் கூறப் பட்டுள்ளதாவது, ஒரு தொடர் ஹைட்ரோதெர்மல் முந்தைய செயற்பாடு பிற திராவகங்கள் சேர்க்காது. செய்யப்படுதல் மற்றும் எதிர்வழக்கீட்டாளர் களுக்கு இணங்க இதில் எதிர்பார்க்கப்படுவ தானது கண்டுபிடிப்பின் நுதல்பொருள் மற்றும் என்சைம்கள், பயோமாஸ் இதில் வல்லவராக உள்ளவர். எனினும், தற்போதைய கண்டு பிடிப்பிற்கிணங்க, ஹைடிரோலிசிட்இல் கனாயத் தக்க அதே வகையானது. எனவே, D10 பற்றிய கற்பித்தல் தற்போதைய கண்டறிதல் எதிர்பார்க்கப் படுகிறது.

16. மேற்சொல்லப்பட்ட கருத்தில் என்னால் கண்டறிதல்களை ஏற்க முடியவில்லை. எதிர் வழக்கீட்டாளர் தொடர்பாக. இந்தக் கலையில் வல்லுநர்க்கு இந்த கண்டுபிடிப்பு அறியப்படும்.

17. சட்டத்தின் பிரிவு 10(4)2, 10(5) தொடர்பான மறுப்புகள் தொடர்பாக. கட்டுப்பாட்டு அலுவலருக்கு இணங்க, அதுவும், எதிர் வழக்கீட்டாளரின் வழக்கறிஞரால் உறுதி செய்யப் பட்டதுமானது. இந்தக் கோரிக்கைகள் தெளிவற்று உள்ளன மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்டும் உள்ளது. இதில் குறித்துரைக்கப்பட்டுள்ள காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் 50, 50 முதல் 90:10 வரை ஆதாரம் கொண்டவை. எனவே, 10(4) பிரிவினால் எதிர்க்கப்பட்டவை. பிரிவு 10(5) பொறுத்தவரை இதில் வாதமாவது, 1

முதல் 19 வரையிலான கோரிக்கைகள், செயற்படும் உதாரணங்களின் விவரங்களுக்கு ஆதரவாக இல்லை. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரின் வாதமாவது, சட்டம், கோரப்பட்ட அனைத்து தொடர்பாகவும் உதாரணங்களை கோரவில்லை என்பது ஏற்கத்தக்கது. முழுமை யான குறிப்பிடுதல் இதில் சிறந்த முறையை மட்டுமே குறிப்பிடுகள் வேண்டும். கட்டுப் பாட்டாளருக்கு இணங்க, சிறந்த முறை என்பது. தற்போதைய வழக்கில் காணப்படவில்லை. எனினும், பழமையான குறிப்பிட்டதிலிருந்து கண்டுபிடிப்பானது இதில் உள்ள பொருளின் கரைப்பான் எவ்வாறு சாதாரண நிலைமை பேணுகிறது என்பது.

18. ADC வரையறுக்கப்பட்டது –எதிர்– சஞ்சீவ் சந்தல்லால் மற்றும் பிறர். இதில் மேலே சுட்டப் பட்டவாறு). இதில் சுட்டப்பட்டவாறு, பிரிவு 10(4)இன் தேவையாவது, முழுமையான குறிப்பிடுதல் களுடன், கண்டுபிடிப்பு பற்றிய முழுமையான விவரங்கள், கண்டுபிடிப்பு மற்றும் சிறந்த முறை பற்றிய குறிப்பு. அதாவது கண்டறிதலில் செய்முறை இதில் கட்டாயமற்றது கோரிக்கைகள் சிறந்த முறை சார்பாற்றம் செய்வது தேவை என்பதில்லை.

19. டாடா குளோபல் ப்வரேசன் வரையறுக்கப் பட்டது –எதிர்– மேற்கு வங்காளம். இதில் சுட்டப் பட்டவாறு) IPAB மற்றும் இதன் ஆணை 18.10.2012 தேதியிடப்பட்டது. இதில் கூறப் பட்டதாவது இதில் உதாரணங்கள் பற்றி வகை செய்ய தேவையில்லை என்பது. இதன் மொத்த பரப்பிடம் பற்றிய கோரிக்கை மீண்டும் கூறப்படு கிறது. சட்டம் கட்டாயமானது அதில் சிறந்த முறையை எடுத்துக் கூறுவதும், அதன் சட்டம் பற்றி உரைப்பதும் அதன் செயற்படும் உதாரணம் பொருண்மையின்படி கூறப்பட்ட வழக்கில் மேல்முறையீட்டாளர் செயற்படும் உதாரணங்களை வகை செய்துள்ளார். கோரப் பட்ட தேவை பற்றி இதிலும் முழுமையாக குறிப்பீடுகள் தேவை.

20. பம்பாய் உயர்நீதிமன்றம், ஃபேர்ப்வேர்க் ஹோசிஸ் அக்டயன்ஜெசில்ஸ்சாப்ட் வோர்மல்ஸ் மெய்சிஸ்டர் லூசிஸ் புரோனிங், ஏ கார்ப்ப ரேஷன் (மேலே சுட்டப்பட்டது) கூறப்பட்டதாவது குறிப்பிடப்பட்டவை மற்றும் கோரிக்கைகள், தேர்ச்சி பெற்ற அந்தக் களம் மற்றும் அறிவியல் பற்றிய அறிவு, அவை தொடர்பானவை. இவற்றில் இந்த நடைமுறையினை விவரிக்கத் தேவையில்லை. இவை பொது அறிவின் பகுதி யாக இருக்கும் நிலையில் இவை கலைத் துறை யில் வல்லுநராக உள்ளவர் தொடர்பானவை. இவர்கள் தொழில்நுட்ப விவரங்களைச் சுட்டுபவர். அதாவது இதனை செயற்படுத்தும் நோக்கத்திற்காக.

21. சட்டமாவது இந்த பிரச்சினை பற்றி தீர்க்கமாக உள்ளது. வெளிப்பாடு என்பது நிலை பற்றியது போதுமானது. இதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாவது குறிப்பிடப்பட்டது. அந்த கண்டுபிடிப்பு தொடர்பாக. இதில் திறம் பட்டவர்கள் இயல்விக்கும் வகையிலமையும், இது தொடர்பாக மேல்முறையீட்டாளரால் அளிக்கப் பட்ட குறிப்பிடப்பட்டவற்றை முழுவதுமாக நான் கண்டறிந்தேன். இதில் தெளிவாக வெளிப்படுத்தி யிருப்பது போதிய தகவல் அதாவது இந்த துறை யில் திறமை பெற்றவர்கள் கண்டுபிடிப்பினை செயற்படுத்த போதிய அறிவு பெற்றிருப்பவர் தேவையற்ற பரிசோதனைகள் இன்றி. எனவே, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் வாதமாவது கண்டுபிடிப்பு 10(4) பிரிவினால் தடுக்கப் படுகிறது என்பது. வாதமற்ற முறை.

22. 10(5) பிரிவு தொடர்பான எதிர்ப்பானது போதியவை அதில் கோரிக்கைகள் நியாயமான தாக இருப்பின் மற்றும் இவை விவரங்கள் அடிப்படையில் அடையாதபோது. எனவே, தவறான பொருள்கோள் சட்டவகைமுறைகளை கட்டுப்பாட்டு அலுவலர் இதில் கொண்ட முடிவானது விவரங்கள் கோரிக்கைக்கு ஆதரவாக இல்லை. அதாவது பிரிவு 10(5)இன் படி எனவே, இந்தக் கண்டத்தில் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

23. கடைசியாக கூறப்பட்டதாவது பிரிவு 3(2)இன்படி மேல்முறையீட்டாளருக்கு எதிராக கூறப்பட்டதாவது, கண்டுபிடிப்பு என்பதன்பேரில், இது அறியப்பட்ட நடைமுறை என்பது, அதுவும், முந்திய பயன்பாடு தொடர்பானது. எனவே இது

ஏற்கத்தக்கதாக இல்லை. இதில் எளிதானது, எவரும் அறியக் கூடியது. இந்த நடவடிக்கை, எவராலும் அறியப்பட்டது. எனவே இதற்கு காப்புரிமை அளிக்க மறுக்கப்பட்டது. அதில் பொருண்மையானது கோரப்பட்ட கண்டுபிடிப்பு, முன்பு எப்போதும் கருதப்படவில்லை. இது மிகவும் அறியப்பட்டதாக இருந்தபோதிலும், இது காப்புரிமைக்கான வழக்காகியுள்ளது.

24. நாட்கோபார்மா வழக்கில், கூறப்பட்ட தாவது, (மேலே சுட்டப்பட்டது) ஒரு குறிப்பிட்ட தீர்வு அறியப்படாதிருக்கும்போது, கண்டறி தலுக்கு முன்னர், கண்டறிந்த பின்னர், அது அறியப்பட்ட நடைமுறையாகக் கூறப்பட முடியாது.

25. எனர்கான் இந்தியா வரையறுக்கப்பட்ட வழக்கில் மேலே சுட்டப்பட்டது அறிவார்ந்த சொத்துரிமைகள், மேல்முறையீட்டு வாரியம் கூறியதாவது ஒரு கண்டுபிடிப்பு அந்தக் கலையில் நிபுணத்துவம் பெற்றவர் கூறுவது. தற்போது தெளிவான வழக்கானது பின்னறிவின் மூலம் ஊகிக்கப்பட்டது மற்றும் இது ஏற்கத்தக்கது அல்ல. நீதிமன்றங்கள் தொடர் கூறியுள்ளதாவது “கூடும் – இருக்கும்” என்றும் அணுகுமுறையை ஏற்றதில்லை. இதில் இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். இதனைக் கண்டு பிடித்தாரா என்பது. ஆனால், இவர் இதனை ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கண்டுபிடிக்கப் பட்டது அல்லது இதில் ஏதேனும் மேம்பாடு அல்லது ஏற்பது உள்ளதா என்பது?

26. காந்திமதி அப்ளையன்ஸஸ் (மேலே சுட்டப்பட்டது) வழக்கில் நீதியர் ஆயம் இந்த நீதிமன்றத்தில் கூறியதாவது. கண்டுபிடிப்பானது கூறு போடப்பட்டது மற்றும் அது தனித்தனி யாகப் பார்க்கப்பட்டது. இதில் கண்டறிதல் காட்டப் படவில்லை. எனினும் இதன் புதிய சேர்மானம், புதிய பயன்பாட்டினைக் காட்டுமானால், இவை அறியப்பட்ட கூறுகளை கொண்டிருந்தாலும், இந்தக் கூட்டுச் சேர்க்கையை கொண்டு வர எடுக்கப்பட்ட முயற்சி. இதனால் கண்டுபிடிப்பு ஏற்கப்பட்ட காப்புரிமையாகக் கூடும். மேலும் கூறப்பட்டதாவது இந்த முடிவு முன்பு பெற்றிருந்து அறிவுடன், கண்டுபிடிப்பு உள்ளதாகக் கூறுபவர், அறியப்பட்ட பயன்பாடு பற்றி அறிந்தும், கண்டறிந்தும் இவற்றின் சேர்க்கை பற்றியது சாதாரணமானதாக கொள்ளப்படாது.

27. எனவே, இந்த விகிதாச்சாரத்தைப் பொருத்தி மேற்சொல்லப்பட்ட முடிவுகளின் பொருண்மைகளில் தெளிவாக்கப்படுவதாவது கட்டுப்பாட்டு அலுவலர் தவறாக கூறியதாக அதாவது காப்புரிமை மறுப்பு மேல்முறை யீட்டாளருக்கு அமையும். இதனை தயிருடன் ஒப்பிட்டு ஒப்பீடு செய்து பேசுவது சரியானதாக அமையாது. தயிரானது ஒரு ரசாயன மாற்றத்தால் ஏற்படுவது. அதாவது நொதித்தல் மூலமாக, இது நுண்கிருமிகளின் செயற்பாடு லாக்டோபாசிலஸ் அது பற்றியதும் தற்போதைய கோரிக்கையும் முற்றிலும் வேறுபட்டவை. இரண்டும் வேறுபட்ட களத்தை உடையவன. இதில் ஒப்பீடு என்பது ஏற்கப்பட முடியாதது.

28. மற்றும் ஒரு முக்கிய குறிப்பு. இதனை அலட்சியப்படுத்தியும் ஒதுக்க முடியாத பொருண்மை முன்பு எடுத்துக் கூறப்பட்டவை அனைத்தும். நி.ம. விண்ணப்பத்தில் கூறப்பட்டவை. அதனுடனான மறுப்புகளுடன். எனினும் தற்போதைய கண்டுபிடிப்பு முன்பு கூறப்பட்டவற்றிற்கு மேலாக கண்டறிதலாக ஏற்கப்பட்டது, பொருண்மைப்படி மேல்முறையீட்டாளருக்கு அதே கண்டறிதலுக்காக 23 இடங்களில் இது ஏற்கப்பட்டது. எனவே, இதனைக் கணக்கில் கொண்டு, தெளிவாக்கப்படுவது தற்போதைய கண்டுபிடிப்பு இது புதிதானது இது நலப்பயன்/ மேலான பயன் இவற்றை கொண்டுள்ளதாகவும் ஏற்கப்பட வேண்டியதாகவும் கூறப்பட்டது.

29. மேற்சொல்லப்பட்ட அனைத்துக் காரணங்களுக்காக, இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வற்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறேன். எதிர்வழக்கீட்டாளரின் ஆணையை தள்ளுபடி செய்து அதாவது புனையுரிமைக் கட்டுப்பாட்டு உதவி அலுவலரின் ஆணையை மேல்முறையீட்டாளரின் காப்புரிமை விண்ணப்பத்தினை நிராகரித்ததை. எனினும் செலவுத் தொகைப் பற்றி எந்த ஆணையும் இல்லை.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தம் குறிப்பிட்ட நிவாரணம் பெறுவதற்கான அடிப்படை ஆகாது

**சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு**
**முன்னிலை: மாண்புமிகு நீதிபதி திரு.சி.வி.கார்த்திகேயன்**
**மாண்புமிகு நீதிபதி திரு.ஆர்.விஜயகுமார்**
**A.S.(MD) No.9/2018 &**
**C.M.P.(MD) Nos.452, 453/2018**
**நாள்: 08/10/2025**
**(2025 (6) CTC 890)**

**எம்.கலாவதி** ...மேல்முறையீட்டாளர்

**–எதிர்–**

**சி.மதுபாலா** ...எதிர்மனுதாரர்

**வேண்டுகை:** 2015–ஆம் ஆண்டின் ஓ.எஸ். எண் 144 வழக்கில், திருச்சிராப்பள்ளி முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி (பி.சி.ஆர்.) அவர்களால் 31.01.2017 அன்று வழங்கப் பட்ட தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிராக, 1908 ஆம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 96–இன் கீழ் இந்த முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரருக்காக திரு கே.எஸ். வம்சிதருக்காக திரு.எஸ்.ராமகிருஷ்ணன்,

மூத்த வழக்கறிஞர்

எதிர்மனுதாரருக்காக திரு.சங்கர் முரளி, வழக்கறிஞர்

## தீர்ப்பு

**நீதிபதி ஆர்.விஜயகுமார்**

1. தற்போதைய இந்த முதல் மேல்முறை யீடானது, ஒரு ஒப்பந்தச் செயல் (குறிப்பிட்ட நிவாரண) நிறைவேற்றத் தாவாவில், தனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(அ) விசாரணை நீதிமன்றத்தின் முன் உள்ள வழக்காடுதல்கள்

2. வழக்குரையின்படி, வழக்கிற்கு உட்பட்ட சொத்தின் உரிமையாளர் பிரதிவாதி ஆவார். பிரதி வாதியின் தாயார் வாதியிடமிருந்து ரூ.45,00,000/– கடன் பெற்றதாகவும், அதற்கான பல்வேறு கடன் ஆவணங்களைச் செய்து கொடுத்த தாகவும் கூறப்படுகிறது. பிரதிவாதியின் தாயாரால் அக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை; பின்னர் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையின் காரணமாக, வழக்கிற்கு உட்பட்ட சொத்தை விற்பனை செய்ய பிரதிவாதி ஒப்புக்கொண்டார். முழு விற்பனைத் தொகையும் வாதியால் செலுத்தப்பட்டு விட்டது.

3. விற்பனை ஒப்பந்தத்தில் காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்று வாதி வாதிடுகிறார். வாதி எப்போது பிரதிவாதியை ஒப்பந்தத்தை நிறைவேற்ற அழைக்கிறாரோ, அப்போது அவர் அதைச் செய்ய வேண்டும். 15.08.2015 முதல் விற்பனைப் பத்திரத்தைச் செயல்படுத்த பிரதிவாதியிடம் தான் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவதாகவும் வாதித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த விதிமுறைகளின்படி, தரப்பினரிடையே ஒரு நியாயமான காலம் ஒப்புக்கொள்ளப்பட்டதால், இந்த வழக்கு சரியான காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதி தரப்பில் வாதிடப்படுகிறது.

4. மேலும், பிரதிவாதி தனது தாயார் வாங்கிய கடனால் பலன் பெற்றவர் என்பதாலும், அக் கடனைத் தீர்க்கும் பொருட்டு சொத்தை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டதாலும், பிரதிவாதி நேரடி யாக அக் கடனைப் பெறாதவர் என்ற போதிலும், அவர் மீது வழக்குத் தொடர வாதிக்கு உரிமை உண்டு என்று வாதிடுகிறார். மேலும், ஒப்பந்தத்தின் தனது கடமைகளை நிறைவேற்ற தான்

எப்போதும் தயாராகவும் மன விருப்பத்துடனும் இருந்து வருவதாகவும் வாதி கூறுகிறார்.

5. பிரதிவாதி தனது பதில் மனுவில், தனது தாயார் கடன் பெற்றதாகச் சொல்லப்படுவதைப் பற்றித் தனக்குத் தெரியாது என்று வாதிடுகிறார். மேலும், தனது தாயார் பெற்ற கடனால் தான் எந்தப் பலனும் அடையவில்லை என்றும் கூறுகிறார். வாதி தரப்பில் காட்டப்படும் அந்த விற்பனை ஒப்பந்தம் ஒரு போலியான ஆவணம் என்றும், அதில் உள்ள கையெழுத்தைப் பரிசோதிக்க நிபுணர் கருத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் பிரதிவாதி வாதிட்டுள்ளார்.

6. பிரதிவாதியின் கூற்றுப்படி, வழக்கிற்கு உட்பட்ட சொத்து அவரது சொந்தப் பணத்தில் வாங்கப்பட்டது; மேலும் அவர் ஹெச்டிஎப்சி வங்கியில் வீட்டுக் கடன் பெற்று அச்சொத்தில் ஒரு வீட்டைக் கட்டியுள்ளார். அச்சொத்தை விற்க வேண்டிய அவசியமோ அல்லது பணத் தட்டுப் பாடோ அவருக்கு இல்லை.

7. தனது தாயார் பல்வேறு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுபவர் என்றும், அதனால் அவர் பல ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்தார் என்றும் பிரதிவாதி மேலும் தெரிவித்துள்ளார். வாதி மற்றும் பிரதிவாதியின் தாயார் ஆகிய இருவருமே இல்லத்தரசிகள் ஆவர். எதற்காக இவ்வளவு பெரிய தொகை பிரதிவாதியின் தாயாருக்கு கடனாக வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை. பிரதிவாதியின் கூற்றுப்படி, பிரதிவாதியின் சுயார்ஜிதச் சொத்தைப் பறிப்பதற் காக வாதியும், பிரதிவாதியின் தாயாரும் கூட்டுச் சதி செய்திருக்கலாம். பிரதிவாதி வேறொரு மாநிலத்தில் வசிப்பதையும், அவர் ஊரில் இல்லாததையும் சாதகமாகப் பயன்படுத்தி, அவரது சொத்தைப் பறிக்க ஒரு குற்றச் சதி தீட்டப்பட்டுள்ளது. விற்பனை ஒப்பந்தத்தைப் போலியாகத் தயாரித்ததற்காகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் பிரதிவாதி சமர்ப்பித்துள்ளார்.

8. வாதி தரப்பில், வாதி தன்னை ம.சா.1–ஆகவும், அவரது சகோதரி (விற்பனை ஒப்பந்தத்தில் சாட்சிக் கையெழுத்திட்டவர்) ம.சா.2–ஆகவும் விசாரணை செய்யப்பட்டனர். வாதி தரப்பில் 08.11.2014 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தம் (சா.ஆ.ஏ1) மட்டுமே ஆவணமாகக் குறிக்கப் பட்டது. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி தன்னை எ.த.சா1–ஆக விசாரணை செய்துகொண்டார். அவர் தரப்பில் புகைப்படம் (சா.ஆ.பி1) மற்றும் 01.04.2016 முதல் 31.03.2017 வரை யிலான காலத்திற்கான ஹெச்டிஎப்சி வங்கியின் தற்காலிகக் கணக்கு அறிக்கை (சா.ஆ.பி2) ஆகியவை ஆவணங்களாகக் குறிக்கப்பட்டன.

(ஆ) விசாரணை நீதிமன்றத்தின் முடிவுகள்

9. விசாரணை நீதிமன்றமானது பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது:

a) பிரதிவாதியின் தாயார் ரூ.45,00,000/– கடன் பெற்றதாகவும், அதற்காகப் பிணையப் பத்திரங்கள் மற்றும் கடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றியதாகவும் வாதி கூறினாலும், அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் படவில்லை. மேலும், பிரதிவாதியின் தாயார் பெற்ற கடனால் பிரதிவாதி ஏதேனும் பலன் பெற்றார் என்பதற்கான எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை;

b) பிரதிவாதி ஹெச்டிஎப்சி வங்கியில் கடன் பெற்று அச் சொத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டார் என்பதையும், அந்த வங்கி நிலுவைத் தொகை இன்னும் சரிசெய்யப்பட வில்லை என்பதையும் பிரதிவாதி தரப்பு வங்கி அறிக்கை (சா.ஆ.பி2) தெளிவாக உறுதிப் படுத்துகிறது;

c) விற்பனை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ரூ.45,00,000/– பரிமாற்றம் செய்யப் பட்டதை நிரூபிப்பதில் வாதி முற்றிலும் தோல்வியடைந்து உள்ளார்;

d) பிரதிவாதியின் தாயார் பெற்ற கடனுக்காகவே இந்த விற்பனை ஒப்பந்தம் (சா.ஆ.ஏ1) பிரதி வாதியால் செய்து கொடுக்கப்பட்டது என்று கூறப் பட்டாலும், அவர் இந்த ஒப்பந்தத்தில் ஒரு தரப்பினராகவோ அல்லது ஒரு சாட்சியாகவோ சேர்க்கப்படவில்லை;

e) பிரதிவாதியின் தாயார் கடன் பெற்றபோது எழுதிக் கொடுத்த ஆவணங்கள், இந்த விற்பனை ஒப்பந்தம் கையெழுத்தாகும்போது அவரிடம்

திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்பதை வாதி (ம.த.சா1) ஒப்புக் கொண்டுள்ளார்;

ஞூ) இந்த விற்பனை ஒப்பந்தம் (சா.ஆ.ஏ1) நிறைவேற்றப்பட்ட அதே நேரத்தில், கடனைத் திருப்பிச் செலுத்துவதாக ரூ. 100/– முத்திரைத் தாளில் பிரதிவாதியின் தாயார் ஓர் உறுதிமொழி ஒப்பந்தம் செய்து கொடுத்ததாக வாதி (ம.த.சா1) ஒப்புக்கொண்டுள்ளார். அந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக வேறொரு ஒப்பந்தத்தை வாதி பெற்றுள்ளதிலிருந்து, இந்த விற்பனை ஒப்பந்தத்தின் (சா.ஆ.ஏ1) கீழ் எந்தப் பணப் பரிமாற்றமும் நடைபெறவில்லை என்பது தெளிவாகிறது;

g) வாதி தனது தரப்பு ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றத் தயாராகவும் மன விருப்பத்துடனும் இல்லை என்பதை வாதியின் (ம.த.சா1) சாட்சியம் வெளிப்படுத்துகிறது;

h) இந்த விற்பனை ஒப்பந்தமானது வாதியின் மிரட்டல் மற்றும் கட்டாயத்தின் பெயரிலேயே பிரதிவாதியால் கையெழுத்திடப்பட்டது என்றும், அது பிரதிவாதியின் சுயவிருப்பத்தின் பேரில் செய்யப்பட்டதல்ல என்றும் வாதியின் (ம.த.சா1) சாட்சியம் வெளிப்படுத்துகிறது. எனவே, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாது. கடனைத் திரும்பக் கேட்டு பிரதிவாதியின் தாயாருக்கு வாதி எந்த ஒரு வழக்கறிஞர் அறிவிப்பையும் அனுப்பவில்லை; மேலும் தாயார் கொடுத்ததாகச் சொல்லப்படும் காசோலை அல்லது கடன் பத்திரம் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிரதிவாதியின் தாயார் தாக்கல் செய்த திவால் மனுவில் வாதி ஒரு தரப்பினராகச் சேர்க்கப்படவில்லை. மேலும், பிரதிவாதியின் தாயார் தனது மகனின் தொழிலுக்காகவே கடன் வாங்கினார் என்பதையும், அந்தப் பணம் பிரதிவாதிக்குக் கொடுக்கப்பட்டதா என்பது தனக்குத் தெரியாது என்பதையும் வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்; மற்றும்

i) விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள தனது கையெழுத்தைப் பிரதிவாதி திட்டவட்டமாக மறுத்து, அதை நிபுணர் ஆய்வுக்கு அனுப்பக் கோரியபோதும், வாதி அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஒப்பந்தத்தில் (சா.ஆ.ஏ1) உள்ள கையெழுத்து, பிரதிவாதியின் பதில் மனு, வக்காலத்து மற்றும் இதர நீதிமன்ற ஆவணங்களில் உள்ள கையெழுத்துடன் ஒத்துப் போகவில்லை. கையெழுத்தில் உள்ள இந்த வேறுபாடு வெறும் கண்ணால் பார்க்கும்போதே தெளிவாகத் தெரிகிறது. எனவே, விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதையும், அதில் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்து என்பதையும் நிரூபிக்க வாதி தவறிவிட்டார்.

10. (சான்றாவணம் ஏ1) விற்பனை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒரு ஆவணமாகும். 2012–ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்திற்குப் பிறகு, 01.12.2012 –க்குப் பின் நிறைவேற்றப்படும் விற்பனை ஒப்பந்தங்கள் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். 08.11.2014 அன்று நிறைவேற்றப்பட்ட சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாததால், அதை ஒரு சாட்சியமாக ஏற்க முடியாது. எனவே, பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொடரப்பட்ட இந்த ஒப்பந்தச் செயல் நிறைவேற்றக் கோரும் (குறிப்பிட்ட நிவாரண) தாவா செல்லத்தக்கதல்ல.

11. மேற்கூறிய முடிவுகளின் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது. அந்தத் தீர்ப்பு மற்றும் ஆணையை (Judgment and Decree) எதிர்த்து, வாதியால் தற்போது இந்த முதல் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(இ) பரிசீலனைக்கான வினாக்கள்:**

a) சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்பட்டதை வாதி நிரூபித்துள்ளாரா?

b) சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் பணப் பரிமாற்றம் நடைபெற்றதை வாதி நிரூபித்துள்ளாரா?

c) ஒப்பந்தத்தின் தனது கடமைகளை நிறைவேற்ற வாதி எப்போதும் தயாராகவும் மன விருப்பத்துடனும் இருந்தாரா?

d) வாதிக்கு மாற்றாக, தான் வழங்கிய முன் பணத்தைத் திரும்பப் பெறும் நிவாரணம் கிடைக்கப் பெற தகுதியுள்ளவரா?

(D) இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள்

12. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்: பிரதி

வாதியின் தாயார் வாதிக்கு ஒரு பெரும் தொகையைக் கடன்பட்டிருந்தார்; அதன் காரணமாக வாதி அவர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டிருந்தார். அந்நடவடிக்கையைத் தவிர்க்கும் பொருட்டு, பிரதிவாதி முன்வந்து வாதிக்குச் சாதகமாக இந்த விற்பனை ஒப்பந்தத்தை எழுதிக் கொடுத்தார். 08.11.2014 அன்று இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, அந்த கடன் தொகையே விற்பனைத் தொகையாக கருதப் பட்டது. வாதி எப்போது கோருகிறாரோ அப்போது விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்ற பிரதிவாதி சம்மதித்திருந்தார். விற்பனைத் தொகை கைமாற வில்லை என்றும், பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடனை வாதி நிரூபிக்கத் தவறிவிட்டார் என்றும் விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவு சரியல்ல. உண்மையில், வாதி தன்னை ம.த.சா1–ஆகவும், சாட்சிக் கையெழுத்திட்டவர் ம.த.சா2–ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடன் குறித்துத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளனர். வாதி விற்பனைத் தொகையை உறுதிப்படுத்திய நிலையில், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கைத் தீர்ப்பளித்திருக்க வேண்டும்.

13. பிரதிவாதி தனது கையெழுத்தை மறுப்பது என்பது, விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றுவதிலிருந்து தப்பிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே என்று மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் மேலும் வாதிட்டார். சா.ஆ.ஏ1–ல் உள்ள கையெழுத்தை, வழக்குத் தாக்கல் செய்த பிறகு உருவாக்கப்பட்ட ஆவணங்களான வக்காலத்து, பதில் மனு மற்றும் பிற நீதிமன்ற ஆவணங்களில் உள்ள கையெழுத்துடன் விசாரணை நீதிமன்றம் ஒப்பிட்டுப் பார்த்தது சரியல்ல.

14. தனது தாயாரைச் சட்ட நடவடிக்கைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக வாதிக்கு விற்பனை ஒப்பந்தம் செய்து கொடுத்த பிறகு, தற்போது விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றுவதைத் தவிர்ப்பதற்காகப் பிரதிவாதியும் அவரது தாயாரும் கூட்டுச் சதி செய்துள்ளனர் என்று மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர் மேலும் வாதிட்டார். பிரதிவாதியிடம் மட்டுமே அவரது அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துகள் இருக்கும்; அவற்றைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, சர்ச்சைக்குரிய சா.ஆ.ஏ1–ல் உள்ள கையெழுத்துடன் ஒப்பிடச் செய்திருக்க வேண்டும். பிரதிவாதி தனது அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்து ஆவணங்களைத் தாக்கல் செய்யாத நிலையில், சா.ஆ.ஏ1–ன் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் சுமையை நீதிமன்றம் வாதி மீது சுமத்தியிருக்கக் கூடாது.

15. சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தமே, பிரதிவாதியின் தாயார் வாதியிடமிருந்து ரூ.45,00,000/– கடன் பெற்றார் என்பதற்கான ஒரு அங்கீகாரமாகும். எனவே, பிரதிவாதியின் தாயாருக்கு அத்தொகையை வழங்கியதை வாதி மீண்டும் தனியாக நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

16. முழு விற்பனைத் தொகையும் ஏற்கனவே பிரதிவாதியின் தாயார் பெற்ற கடனில் சரி செய்யப் பட்டு விட்டது. வாதி தரப்பில் செய்வதற்கு இனி வேறொன்றும் இல்லை. எனவே, ஒப்பந்தத்தை நிறைவேற்ற வாதிக்குத் தயார் நிலையும் மன விருப்பமும் இல்லை என்று விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவு சரியானதல்ல.

17. சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதன் மூலம் கடன் தொகை சரிசெய்யப்பட்டு விட்டதால், பிரதிவாதியின் தாயார் தனது திவால் மனுவில் வாதியை ஒரு தரப்பினராகச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று மேல்முறையீட்டாளர்தரப்பு வழக்கறிஞர் மேலும் சமர்ப்பித்தார். எனவே, அத்திவால் மனுவில் வாதி சேர்க்கப்படாதது மட்டுமே, வாதிக்கும் பிரதிவாதியின் தாயாருக்கும் இடையே எவ்வித பணப் பரிமாற்றமும் நடைபெறவில்லை என்று முடிவு செய்வதற்குப் போதுமானதாகாது. ஆகவே, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்துவிட்டு, ஒப்பந்தச் செயல் நிறைவேற்றத் தாவாவிற்கு அனுமதி அளிக்குமாறு அவர் கோரினார்.

18. இதற்கு மறுப்பாக, பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பித்ததாவது: பிரதிவாதி தனது பதில் மனுவிலேயே தனது கையெழுத்து போலியானது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து, அவ்வாவணத்தை நிபுணர் ஆய்வுக்கு அனுப்பக் கோரியுள்ளார். இருப்பினும், வாதி அவ்வாவணம் நிறைவேற்றப்பட்டதை நிரூபிக்கத் தவறி விட்டார். பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடனே இந்த விற்பனை ஒப்பந்தத்திற்கான மறுபயன் என்பது வாதியின் வாதம். அவ்வாறிருக்கையில், அக் கடன் பெறப்பட்டதை உறுதி செய்யாதவரை,

சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தமானது மறுபயன் இல்லாத ஒன்றாகவே கருதப்படும். ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதோ அல்லது பணப் பரிமாற்றம் நடைபெற்றதோ நிரூபிக்கப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவு சரியானது என்று அவர் வாதிட்டார். மேலும், வாதி (க.ஙி.1) அளித்த சாட்சியத்தின் அடிப்படையிலேயே வாதி தனது வழக்கை நிரூபிக்கத் தவறியது உறுதி யாவதாகக் கூறி, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்யுமாறு அவர் கோரினார்.

19. இருதரப்பு வாதங்களையும் நாங்கள் கவனமாகப் பரிசீலித்தோம் மற்றும் ஆவணங் களைப் பதிவு செய்தோம்.

**(உ) விவாதம்**

20. 08.11.2014 தேதியிட்ட சா.ஆ.ஏ1 விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தாயார் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் ஏற்பட்ட சமரசத்தின் விளைவாக, பிரதிவாதி தனது சொத்தை ரூ. 45,00,000/– மதிப்பிற்கு விற்பனை செய்ய ஒப்புக் கொண்டதாக அவ்வாவணத்தில் கூறப் பட்டுள்ளது. இதற்கான முழுத் தொகையும் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகவும் அதில் பதிவாகியுள்ளது. பிரதிவாதியின் தாயாருடன் தனக்குக் கருத்து வேறுபாடு இருப்பதால் அவருடன் தொடர்பில் இல்லை என்பதும், தான் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொடுக்கவில்லை என்பதுமே பிரதிவாதியின் முக்கியத் தரப்பு வாதமாகும். மேலும், தனது தாயார் வாங்கிய கடனால் தான் எந்தப் பயனும் பெறவில்லை என்றும் அவர் கூறுகிறார். எனவே, சா.ஆ.ஏ1 ஒப்பந்தம் பிரதிவாதியால் தான் நிறைவேற்றப் பட்டது என்பதையும், அதற்கான பணப் பரிமாற்றம் நடைபெற்றதையும் நிரூபிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் வாதியையே சாரும்.

21. வாதி (ம.த.சா1) அளித்த சாட்சியத்தின் படி, வங்கியில் ரூ.5,00,00,000/- கடன் பெற்றுத் தருவதற்காகப் பிரதிவாதியின் தாயாருக்கு தரகுத் தொகையாக ரூ.45,00,000/– வழங்கப் பட்டதாகத் தெரிகிறது. முதலில் ரூ.15,00,000/- மற்றும் பின்னர் ரூ.5,00,00,00/- என வழங்கப் பட்ட அத்தொகைக்கு ஈடாகப் பிரதிவாதியின் தாயார் இரண்டு காசோலைகளை வழங்கி யுள்ளார். அக்காசோலைகள் வங்கியில் போதிய பணமின்றித் திரும்ப வந்துள்ளன. அதன்பின் ரூ. 45,00,000/– மதிப்பிற்குப் பிரதிவாதியின் தாயார் மற்றொரு காசோலையை வழங்கிய தாகவும், அது வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் வாதி கூறுகிறார். மேலும், மூன்று கடன் பத்திரங்கள் மற்றும் ஒரு உறுதிமொழி ஆவணம் ஆகியவை தன்னிடம் இருப்பதாக வாதி கூறுகிறார். ஆனால், காசோலைத் திரும்பியது குறித்தோ அல்லது கடனைத் திரும்பக் கேட்டோ வாதி எந்த ஒரு சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை.

22. சா.ஆ.ஏ1 ஒப்பந்தம் செய்யப்பட்ட அதே நாளில், பிரதிவாதியின் தாயார் தனக்கு மற்றொரு உறுதிமொழிப் பத்திரத்தை எழுதித் தந்ததாக வாதி (ம.த.சா1) ஒப்புக்கொண்டார். அந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அச்சொத்தின் மீது வங்கிக் கடன் இருப்பது தமக்குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

23.சா.ஆ.ஏ1 ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில், சொத்தை வாங்கும் எண்ணம் தமக்கு இருக்கவில்லை என்றும், தான் வழங்கிய பணத்தைத் திரும்பப் பெறுவதே தனது நோக்கம் என்றும் வாதி சாட்சியம் அளித்துள்ளார். ஒப்பந்தத்தின் போது, மூன்று மாத காலத்திற்குள் ரூ.45,00,000/- தொகையைத் திருப்பித் தந்து விடுவதாகப் பிரதிவாதியின் தாயார் கூறியதாக வும், அது அன்றைய தினமே ஒரு உறுதிமொழிப் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும் வாதி கூறியுள்ளார். மேலும், ஒப்பந்தத்தின்போது பிரதிவாதி டெல்லியில் இருந்ததாகவும், அவரது டெல்லி முகவரி தனக்குத் தெரியாது என்றும் வாதி கூறியுள்ளார்.

24. பிரதிவாதியின் தாயார் 11 நபர்களுக்கு எதிராகத் திவால் மனு தாக்கல் செய்துள்ளதாக வும், அதில் தான் ஒரு தரப்பினர் அல்ல என்றும் வாதி கூறியுள்ளார். தான் வழங்கிய கடன் தொகை பிரதிவாதிக்குப் பயன்பட்டதா என்பது தனக்குத் தெரியாது என்றும், தான் பிரதிவாதிக்கு நேரடியாக எந்தப் பணமும் வழங்கவில்லை என்றும் வாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

25. சா.ஆ.ஏ1 ஒப்பந்தம் மற்றும் வாதியின் (ம.த.சா1) சாட்சியத்தைச் சேர்த்துப் பார்க்கும்

போது பின்வரும் உண்மைகள் தெளிவாகின்றன:

a) கடன் பத்திரங்கள் மற்றும் காசோலைகள் கைவசம் இருந்தும் வாதி அவற்றைத் தாக்கல் செய்யவில்லை. அவை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பணப் பரிமாற்றம் நடந்ததை உறுதி செய்திருக்க முடியும். எனவே, பணப் பரிமாற்றம் நடந்ததை வாதி நிரூபிக்கத் தவறி விட்டார்.

b) சொத்தை வாங்கும் எண்ணம் வாதிக்கு எப்போதும் இருந்ததில்லை என்பது அவரது சாட்சியத்தில் உறுதியாகிறது. இப்பாவணம் வெறும் கடன் பாதுகாப்பிற்காகப் பெறப்பட்டதே தவிர, சொத்தை வாங்குவதற்காக அல்ல என்பது தெளிவாகிறது.

c) பிரதிவாதி தனது கையெழுத்தை மறுத்த போதும், அதை நிபுணர் ஆய்வுக்கு அனுப்ப வாதி எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இதன் மூலம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்யும் கடமையிலிருந்து வாதி தவறிவிட்டார்.

26. வாதியின் தெளிவான வாக்குமூலத்தின் அடிப்படையில், ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதையோ அல்லது அதற்கான பணப் பரிமாற்றத்தையோ நிரூபிக்க வாதி முற்றிலும் தவறிவிட்டார் என்பது உறுதியாகிறது. எனவே, விசாரணை நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்தது சரியானது.

27. பிரதிவாதிக்குத் தான் நேரடியாக எந்தப் பணமும் வழங்கவில்லை என்று வாதியே ஒப்புக் கொண்டதாலும், இவ்வொப்பந்தம் கடன் பாதுகாப்பிற்காக மட்டுமே பெறப்பட்டது என்பதாலும், முன் பணத்தைத் திரும்பப் பெறும் வாதியின் மாற்று கோரிக்கையையும் விசாரணை நீதிமன்றம் நிராகரித்தது சரியானது.

**(ஊ) முடிவு**

28. மேற்கூறிய விவாதங்களின் அடிப்படையில், இந்த முதல் மேல்முறையீட்டில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் ஆணை உறுதி செய்யப்படுகிறது; இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்குச் செலவுகள் ஏதுமில்லை. இதனுடன் தொடர்புடைய இதர மனுக்கள் முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

**'புலி' திரைப்பட வருவாய் விவகாரத்தில் வருமான வரித் துறை**

## விஜய்க்கு விதித்த ரூ.1.5 கோடி அபராதம் செல்லும்

**சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு**

வருமான வரித் துறை நடிகர் விஜய்க்கு விதித்த ரூ.1.50 கோடி அபராதம் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2015-16ஆம் நிதியாண்டில் ரூ.35 கோடியே 42 லட்சத்து 91,890 என நடிகர் விஜய் வருமான வரிக் கணக்கு காட்டியிருந்தார். அதை மதிப்பீடு செய்த வருமான வரித் துறை அதிகாரிகள், விஜய் வீட்டில் 2015ஆம் ஆண்டு சோதனை நடத்தினர். அப்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு, 'புலி' படத்துக்காக விஜய் பெற்ற ரூ.15 கோடியை கணக்கில் காட்டவில்லை எனக் கூறி 2022 ஜுன் 30 அன்று ரூ.1.50 கோடியை அபராதமாக விதித்தனர். அந்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தொடரப் பட்டது.இந்த வழக்கு, நீதிபதி செந்தில்குமார் ராம மூர்த்தி முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, விஜய் தரப்பில், சட்டப்படி அபராதம் விதித்து பிறப்பித்த உத்தரவை 2019 ஜுன் 30ஆம் தேதிக்கு முன்பாகவே பிறப்பித்திருக்க வேண்டும். 6 ஆண்டுகள் கால தாமதமாக 2022ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

வருமான வரித் துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஏ.பி.ஸ்ரீநிவாஸ் "வருமான வரி மதிப்பீட்டை எதிர்க்கும் மேல்முறையீட்டு காலம் முடிந்த பிறகு, 6 மாத கால அவகாசத்துக்குள் இந்த அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச் சட்டப்படி வருமானத்தை மறைத்த குற்றத்துக்காக நடிகர் விஜய்க்கு ரூ.1.50 கோடி அபராதம் விதித்தது சரிதான். எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்" என வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கின் தீர்ப்பை நீதிபதி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்திருந்தார். இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி, நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து, உரிய கால அவகாசத்துக் குள்ளாகவே வருமான வரித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. ரூ.1.50 கோடி அபராதம் விதித்த உத்தரவில் எந்த சட்டவிரோதமும் இல்லை. அந்த உத்தரவு செல்லும். எனவே, இதில் நீதிமன்றம் தலையிட எந்தக் காரணமும் இல்லை எனக் கூறி விஜய் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்தார்.

இந்த விவகாரத்தில் வருமான வரித் துறையில் மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று விஜய் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. நீதிபதி, இது தொடர்பாக வருமான வரித் துறையின் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் முறையிட விஜய்க்கு அனுமதியளித்தார். மேலும், அபராதம் விதித்த உத்தரவு தாமதமாக பிறப்பிக்கப்பட்டது என்ற காரணத்தையே மீண்டும் கூறி மேல்முறையீடு செய்யக் கூடாது என்றும் மற்றக் காரணங்களை கூறி மேல்முறையீடு செய்யலாம் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

**நன்றி: இந்து தமிழ் 7.2.2026**

# AI யுகத்தில் தொழில் உறவுகள் சட்டம் வேலை பாதுகாப்பை சமநிலைப்படுத்த வேண்டும்

கோபால்கிருஷ்ணராய்

அரசாங்கம் தொழிலாளர் சந்தை நிலவரங்களைக் கண்காணிக்க வேண்டும், விருப்பப்படி தலையிடும் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும், மேலும் வேலை இழப்புகள் அதிகரித்தால் வேலைவாய்ப்பு பாதுகாப்பு விதிகளின் வரம்பைத் தற்காலிகமாக விரிவுபடுத்த வேண்டும்.

மத்திய அரசு, தொழில் உறவுகள் சட்டம், 2020 உள்ளிட்ட நான்கு தொழிலாளர் சட்டங்களை நவம்பர் 21, 2025 முதல் அமல்படுத்துவதாக சமீபத்தில் அறிவித்தது. இவை ஏப்ரல் 2026-க்குள் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தொழில் உறவுகள் சட்டம், தொழில் தகராறுகளைத் தீர்ப்பதுடன், தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு பாதுகாப்பு விதிகளையும் வகுத்துள்ளது.

1947-ஆம் ஆண்டின் தொழில்துறை தகராறுகள் சட்டத்தை விட, தொழில் உறவுகள் சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு முக்கியமான மாற்றம் வேலை பாதுகாப்பு வரம்பைத் தளர்த்தி யிருப்பதாகும். முன்னதாக, 100-க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே அரசின் அனுமதியின்றி ஆட்குறைப்பு அல்லது நிறுவன மூடுதலைச் செய்ய முடிந்தது. தற்போது இந்த வரம்பு 300 தொழிலாளர்கள் வரை உயர்த்தப்பட்டுள்ளது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் போன்ற பல மாநிலங்கள் ஏற்கனவே தங்கள் சட்டங்களில் இந்த மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தாலும், இது தேசிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு (AI) வளர்ந்து வரும் இந்த காலத்தில், இத்தகைய விதிகள் ஏன் உருவாக்கப்பட்டன என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். 1947-ஆம் ஆண்டு சட்டத்தில் இத்தகைய வரம்புகள் ஆரம்பத்தில் இல்லை. நெருக்கடி நிலை காலத்தில் ஏற்பட்ட கடுமையான வேலை இழப்புகளைத் தொடர்ந்தே, 1976-இல் கொண்டுவரப்பட்ட திருத்தம் மூலம் 300 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு அரசின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டது. எனவே, இவை வெறும் நிர்வாகத் தடைகள் அல்ல; பொருளாதார அல்லது தொழில்நுட்ப மாற்றங்களினால் நிகழும் அதிர்வுகளின் போது தொழிலாளர்களைப் பாதுகாக்கும் கருவிகளாகவே உருவாக்கப்பட்டன. பின்னர் 1982-இல் இந்த வரம்பு 100 தொழிலாளர்களாகக் குறைக்கப்பட்டது.

தற்போது இயந்திரமயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால், மனித உழைப்புக்கு பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தும் அழுத்தம் அதிகரித்துள்ளது. குறிப்பாக, திறமையான சேவைகள் மற்றும் மேற்பார்வை பணிகளிலும் செயற்கை நுண்ணறிவு ஊடுருவுவதால் வேலை பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. புதிய சட்டத்தின் கீழ் 300 தொழிலாளர்கள் என்ற வரம்பு, நிறுவனங்கள் எளிதாக ஆட்குறைப்பு செய்துவிட்டு செயற்கை நுண்ணறிவு அமைப்புகளைப் புகுத்த வழிவகை செய்கிறது.

### வணிகத்திற்கு உகந்த தொழிலாளர் முறை

மத்திய அரசின் இந்த முடிவு, இந்தியாவை வணிகத்திற்கு உகந்த நாடாகக் காட்டுவதற்கான ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகத் தெரிகிறது. இருப்பினும், வேலை இழப்புகள் அதிகரிக்கும்போது பாதுகாப்பை விரிவுபடுத்தும் அதிகாரம் அரசிடம் இருக்க வேண்டும். ஜார்கண்ட் மற்றும் ஹரியானா மாநிலங்கள் ஏற்கனவே இத்தகைய பாதுகாப்பு அம்சங்களைத் தங்கள் சட்டங்களில் வைத்துள்ளன.

ஒருபுறம் நெகிழ்வுத்தன்மையை வழங்கினாலும், மறுபுறம் பொது நலன் கருதி வேலை பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு அரசுக்கு உண்டு. இதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள 'தொழிலாளர் மறுதிறன் மேம்பாட்டு நிதி' ஒரு நல்ல முயற்சியாகும். ஆட்குறைப்பு செய்யப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 15 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை முதலாளிகள் இந்த நிதிக்கு வழங்க வேண்டும். இது தொழிலாளர்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும்.

மேலும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் கிக் தொழிலாளர்களுக்கும் முதலாளி–தொழிலாளி உறவை வரையறுப்பதில் தெளிவான விதிகள் தேவை. நவீன கால வேலை முறைகளுக்கு ஏற்ப சட்ட வழிகாட்டுதல்கள் இருந்தால் மட்டுமே குழப்பங்களைத் தவிர்த்து தொழிலாளர் நலனைப் பாதுகாக்க முடியும்.

**நன்றி: தி இந்து - கட்டுரையாளர் மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் பொருளாதார உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.**

**– மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## மேற்கு வங்க எஸ்ஐஆர் நீதிபதிகளைப் பணியமர்த்த உச்சநீதிமன்றம் உத்தரவு

மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில் இந்நாள், முன்னாள் மாவட்ட நீதிபதிகளை பணியமர்த்த உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

மேற்கு வங்கத்தில் எஸ்ஐஆர் பணி தொடர்பாக மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உள்பட பலர் தாக்கல் செய்த மனுக்கள், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தன. அப்போது எஸ்ஐஆர் பணிக்காக மிகவும் தகுதி வாய்ந்த அதிகாரிகளை மாநில அரசு அனுப்பவில்லை என்று தேர்தல் ஆணையம் குற்றஞ்சாட்டியது.

இந்தக் குற்றஞ்சாட்டை நீதிபதிகள் தீவிரமாக கவனத்தில் எடுத்துக் கொண்டு கூறியதாவது; மேற்கு வங்க எஸ்ஐஆர் விவகாரத்தில் மாநில அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் இடையே போதிய ஒத்துழைப்பு இல்லை. ஒருவர் மீது மற்றொருவர் பழிசுமத்துவது இரு தரப்புக்கும் இடையே அவநம்பிக்கை இருப்பதை சுட்டிக் காட்டுகிறது. பெற்றோர் பெயர், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு இடையே 15 வயதுக்கும் குறைவாக வயது வித்தியாசம் இருப்பது உள்ளிட்ட காரணங்களால் தகவல்கள் முரண்பாடாக உள்ளது. மாநில அரசுக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் இடையே நிலவும் அவநம்பிக்கை காரணமாக அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களின் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபங்களைப் பெறும் கட்டத்தில் எஸ்ஐஆர் பணி தேங்கியுள்ளது.தேர்தல் ஆணையத்தின் நோட்டீஸை பெற்றவர்களில் பெரும்பாலானோர், வாக்கர் பட்டியலில் மீண்டும் தங்கள் பெயரைச் சேர்க்கக் கோரி, உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளை ஆராய்ந்து ஆவணங்களின் உண்மைத்தன்மையைச் சரிபார்த்து பட்டியலில் மீண்டும் பெயரைச் சேர்ப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்வது நியாயமான முறையில் நடைபெற வேண்டும். எனவே அந்தப் பணியில் சில மாவட்ட அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதிகளைப் பணியமர்த்த வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சுஜய் பாலிடம் கேட்டுக் கொள்கிறோம். அதேவேளையில், அந்தப் பணியில் ஈடுபடுத்த முன்னாள் மாவட்ட நீதிபதி களைக் கண்டறியுமாறும் இந்த விவகாரத்தில் வேறு வழியின்றியும், மாநில அரசு மற்றும் தேர்தல் ஆணையம் ஒப்புக் கொண்டதாலும் மாவட்ட நீதிபதிகளைப் பணியமர்த்துமாறு கோரியுள்ளோம்.

இதன் மூலம், தகவல்களில் முரண்பாடுகள் உள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் கோரிக்கைகளை மறுபரிசீலனை செய்வதா அல்லது கைவிடுவதா என்பதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிபதிகள் உதவுவர். இந்த நீதிபதிகளுக்குத் தேவையான உதவிகள் மற்றும் பாதுகாப்பை மாநிலத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் அளிக்க வேண்டும். எஸ்ஐஆர் பணியில் ஈடுபட உள்ள நீதிபதிகள் அந்தப் பணி தொடர்பாகப் பிறப்பிக்கும் உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு களைக் கருத வேண்டும் என்று ஆணையிட்டனர்.

இந்த உத்தரவை மேற்கு வங்கத்தில் ஆட்சியில் உள்ள திரிணாமூல் காங்கிரஸ் கட்சி வரவேற்றது. தேர்தல் ஆணையத்தின் ஆணவத்தை இந்த உத்தரவு தகர்த்தவுள்ளதாக அக்கட்சி சமூக ஊடகத்தில் பதிவிட்டது.

**நன்றி: தினமணி 21.02.2026**

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கடு செய்தல்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 4/2009)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Arunthathiyars (Special Reservation of seats in Educational Institutions including Private Educational Institutions and of appointments or posts in the services under the State within the Reservation for the Scheduled Castes) Act, 2009
## (Tamil Nadu Act No.4 of 2009)

**(as on 31st October, 2023)**

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2009ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**இம்மாநிலத்திலுள்ள தனியார் கல்விநிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளைப் பட்டியல் சாதியினருக்கான ஒதுக்கீடான பதினெட்டு சதவீதத்திற்குள்ளாக தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அருந்ததியர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்களின் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதிலும் அரசின்கீழ் வருகின்ற பணிகளுக்கான நியமனங்களிலும் ஒதுக்கீடு செய்வதற்கான கொள்கை ஒன்று தமிழ்நாடு மாநிலத்தில் நெடுங்காலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதாலும்.

தமிழ்நாடு மாநிலமானது, சமுதாயத்தின் அடிநிலையில் உள்ள மக்களுக்க இடஒதுக்கீடு வழங்குவதில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வந்திருப்பதாலும், பின்தங்கிய சமூகங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற முதலாவது அரசாணையானது 1921ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டு தமிழ்நாடு மாநிலத்தில், 1927ஆம் ஆண்டு சமூகங்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது என்பதாலும்.

பல ஆண்டுகளாக சமூக மற்றும் கல்வித் துறைகளில் பிற்பட்ட நிலையில் உழன்று வந்துள்ள தமிழ்நாட்டின் மக்கள் தொகையின் பெருமளவு சதவீதத்தினர் மேற்சொன்ன இடஒதுக்கீட்டுக் கொள்கையின் பயன்களைத் துய்க்க தொடங்கியுள்ளதோடு அவர்கள் தங்கள் நிலையினை மேம்படுத்திக் கொள்ளவும், உயர்ந்த வாழ்க்கைத் தரங்களை எய்தவும் இயன்றுள்ளது என்பதாலும்.

1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 45/1994) தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது என்பதாலும்.

1994ஆம் ஆண்டு அரசமைப்பு (எழுபத்து ஆறாம் திருத்தச்) சட்டத்தின் மூலம் தமிழ்நாடு சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்தவர்களுக்கும் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின்கீழ் வருகின்ற பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994) என்பதான மாநிலச் சட்டத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அதனை அரசமைப்பின் அமைப்புவிதி 31-Bஇன் கீழ் IXஆம் இணைப்புப் பட்டியலில் சேர்த்திருப்பதாலும்

அரசமைப்பின் 14ஆம் அமைப்புவிதியின்படி சமமானவர்கள் சமமற்றவர்களுடன் சமமாகக் கருதி நடத்தப்படுதல் இயலாது மற்றம் வேறுபட்ட முறையில் நடத்துவதானது அது அடைய விரும்பும் நோக்கத்துடன் பகுத்தறிவுக்கு உகந்த தொடர்பினைப் பெற்றிருக்குமானால் வேற்றுமைப்படுத்தி பாகுபாடு செய்வதாகக் கூற இயலாது என்பதாலும்.

அரசமைப்பின் 14ஆம் அமைப்பு விதியின்படி சமமானவர்கள் சமமற்றவர்களுடன் சமமாகக் கருதி நடத்தப்படுதல் இயலாது மற்றும் வேறுபட்ட முறையில் நடத்துவதானது அது அடைய விரும்பும் நோக்கத்துடன் பகுத்தறிவுக்கு உகந்த தொடர்பினைப் பெற்றிருக்குமானால் வேற்றுமைப்படுத்தி பாகுபாடு செய்வதாகக் கூற இயலாது என்பதாலும்;

அரசமைப்பின் 15ஆம் அமைப்பு விதி கூறு (4)ஐ உள்ளடக்கிய 1951ஆம் ஆண்டு அரசமைப்பு (முதலாம் திருத்தச்) சட்டமானது குடிமக்களின் சமூக அளவில் அல்லது கல்வி அளவில் பின்தங்கிய வகுப்பினரின் அல்லது கல்வி அளவில் பின்தங்கிய வகுப்பினரின் மேம்பாட்டிற்காக அல்லது பட்டியல் சாதியினருக்காவும் பட்டியல் பழங்குடியினருக்காவும் தனி வகைமுறைகளை உருவாக்க இயலச் செய்கிறது என்பதாலும்.

அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் கூறு(1)இல் குறிப்பிடப்பட்ட சிறுபான்மை கல்வி நிலையங்கள் அல்லாத அரசின் உதவி பெறும் அல்லது அரசின் உதவி பெறாத தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களுக்கு, குடிமக்களில் சமூக நிலையில் அல்லது கல்வி நிலையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் அல்லது பட்டியல் சாதியினரின் அல்லது பட்டியல் பழங்குடிகளின் மாணவர் சேர்க்கை தொடர்பாக தனி வகைமுறைகள் எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவர்தம் மேம்பாட்டுக்காகச் சட்டத்தின் வாயிலாக தனி வகைமுறைகள் எதனையும் செய்வதற்கு, அரசமைப்பின் 15ஆம் அமைப்பு விதியின் கூறு (5)ஐ உள்ளடக்கிய 2005ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று மூன்றாம் திருத்தச்) சட்டமானது இயலச் செய்கிறது என்பதாலும்.

அரசமைப்பின் 15ஆம் அமைப்பு விதியின் கூறு(5)இன் காரணமாகவும் தமிழ்நாடு மாநிலத்தில் பெரும்பான்மை மக்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக வேண்டியும், குடிமக்களில் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பட்டியல் சாதிகளையும், பட்டியல் பழங்குடிகளையும் சேர்ந்த நபர்களுக்கும், அரசமைப்பின் 30ஆம் அமைப்பு விதியின் கூறு(1)இல் குறிப்பிடப்பட்ட இம்மாநிலத்திலுள்ள சிறுபான்மையினர் கல்வி நிலையங்களின் மாணவர்

சேர்க்கையில் தற்போதுள்ள அறுபத்து ஒன்பது சதவீத இடஒதுக்கீட்டினைத் தொடர்தல் வேண்டுமெனக் கொள்கை முடிவொன்றை எடுத்ததற்குப் பின்னர், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு செய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 12/2006) தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாலும்;

அரசமைப்பின் 16ஆம் அமைப்பு விதியின் கூறு (4)ஆனது. அரசின் கீழ்வரும் பணிகளில் போதுமான அளவிற்குப் பிரதிநிதித்துவம் செய்யப்படாத குடிமக்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீட்டை ஏற்படுத்த இயலச் செய்கிறது என்பதாலும்;

அரசின் கீழ்வரும் பணிகளில் உள்ள பதவி இடங்களின் வகை எதிலுமோ அல்லது வகைகள் எவற்றிலுமோ பதவி உயர்வும் அதனுடன் இணைந்த பணிமூப்பு என்ற பொருட்பாட்டில் அரசின் கீழ்வரும் பணிகளில் போதுமான அளவிற்கு பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லையென அரசின் கருத்திலுள்ள பட்டியல் சாதிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக வகைமுறை ஏதேனும் செய்வதற்கு அரசமைப்பின் 16ஆம் அமைப்பு விதியின் கூறு (4-A) ஆனது இயலச் செய்கிறது என்பதாலும்.

அரசமைப்பின் 38ஆம் அமைப்பு விதியின் கூறு (1)இன்படி, அரசானது, தேசிய வாழ்வின் அங்கங்கள் அனைத்திலும் நீதி, சமுதாய, பொருளியல் மற்றும் அரசியல் ஆகியவை நிறைந்து நிலவுவதான ஒரு சமுதாய முறையைப் பயனுற அடைந்து பாதுகாத்து மக்களின் நலனை வளர்த்திட கடுமையாக முயலுதல் வேண்டும் என்பதாலும்.

அரசமைப்பின் 38ஆம் அமைப்பு விதியின் கூறு(2)இன்படி, அரசானது, தனி மனிதர்களுக்கிடையே மட்டுமின்றி வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அல்லது வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பிரிவினருக்கிடையே, குறிப்பாக, வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை இயன்றளவு குறைப்பதற்கு கடுமையாக முயற்சி மேற்கொள்வதோடு, அவர்களின் சமுதாயப்படிநிலை, வளவசதிகள், வாய்ப்பு நலன்கள் ஆகியவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கும் பெரும் முயற்சி செய்தல் வேண்டும் என்பதாலும்.

அரசமைப்பின் 39ஆம் அமைப்பு விதியின் கூறு(b)இன்படி, சமுதாயத்தின் பொருள் வளங்கள் மீதான உரிமையையும், கட்டுப்பாட்டினையும் பகிர்ந்தளிப்பதை உறுதி செய்யும் வகையில் அரசானது, குறிப்பாக, பொதுநலன் சிறக்க உதவும் வகையில் தனது கொள்கையை நெறிப்படுத்துதல் வேண்டும் என்பதாலும்.

அரசமைப்பின் 39ஆம் அமைப்பு விதியின் கூறு(c)இன்படி, செல்வவளமும், உற்பத்திச் சாதனங்களும் பொதுநலனுக்கு கேடு விளைவிக்கும் வகையில் ஒரு சிலரிடம் குவிந்து விடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக அரசானது, குறிப்பாக பொருளாதார செயல்பாட்டினால் அதன் கொள்கையை நெறிப்படுத்துதல் வேண்டும் என்பதாலும்.

உச்சநீதிமன்றத்தின் கருத்தில், ‘‘ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் அலுவல்கள் தொடர்பாக பணியிடங்களுக்கும் பதவிகளுக்கும் நியமனம் செய்வதில் நிருவாகத் திறமையைப் பேணுவதற்கும் உதவும் வகையில் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஆகியோரின் கோருரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்’’ என விதிக்கிற அமைப்பு விதி 335 ஆனது, மக்களில் நலிந்த பிரிவினர் குறிப்பாக பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளியல் நலன்களை அரசானது தனிப்பொறுப்புடன் வளர்த்தல் வேண்டும். மேலும் சமுதாய அநீதியிலிருந்தும் அனைத்து வகைப்பட்ட சுரண்டல்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும் என

(நெறிப்படுத்தும் கோட்பாடாக) வகை செய்கிற அமைப்பு விதி 46 உடன் இணைந்து படிக்கப்படுதல் வேண்டும் என்பதாலும்

அரசமைப்பின் 341ஆம் அமைப்பு விதியானது மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு தொடர்பாக பட்டியல் சாதிகளைக் கணக்கிட்டுப் பட்டியலிடுவதற்கும் அத்தகைய சாதிகளைப் பொறுத்த அளவில் அறிவிக்கை ஒன்றைப் பிறப்பிக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கிறது என்பதாலும்

அரசமைப்பின் 15ஆம் அமைப்பு விதியின் கூறுகள் (4) மற்றும் (5)களின்படியும் அமைப்பு விதி 16இன் கூறுகள் (4), (4-A) ஆகியவைகளின்படியும் அமைந்த இடஒதுக்கீடுகள் தொடர்பாக, அருந்ததியர்கள், சமுதாயத்தின் சமூக மற்றும் கல்வி நிலைகளில் மிகவும் கீழ்மட்ட நிலையில் இருப்பதால் பட்டியல் சாதிகளுக்கு என வகை செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டுக்குள்ளாக அருந்ததியர்களின் குழுவிற்கு, இட ஒதுக்கீடு செய்வதற்குத் தனி வகைமுறை ஒன்றைச் செய்வதற்கு பரிசீலனை செய்யுமாறும், அவர்களின் நலன்களைப் போதுமான அளவிற்குப் பாதுகாக்குமாறும் பல்வேறு பிரதிநிதித்துவம் செய்கின்ற சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாலும்

அருந்ததியர்களின் கீழ்வரும் சாதிகளின் பட்டியலையும் பட்டியல் சாதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்குள்ளாக அருந்ததியர்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் அவர்களுக்கு வகை செய்யப்பட வேண்டிய இட ஒதுக்கீட்டின் சதவீதத்தினையும் விரிவாக ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஒருநபர் குழுவானது, இம்மாநிலத்தின் பட்டியல் சாதியினரின் மொத்த மக்கள் தொகையில் பதினாறு சதவீதத்தினரைக் கொண்டு பட்டியல் சாதியினரின் கடைநிலையில் அருந்ததியர்கள் இருக்கிறார்கள் எனவும், அவர்கள் சமூக அளவிலும் கல்வி அளவிலும பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். எனவும் தமிழ்நாடு மாநிலத்தில் அவர்தம் மக்கள் தொகையின் விகிதத்திற்கேற்ப அரசின் கீழ்வரும் பணிகளில் அவர்கள் போதுமான அளவில் பிரதிநிதித்துவம் செய்யப்படவில்லை எனவும் மாநில அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது என்பதாலும்

பட்டியல் சாதியினருக்கான இடஒதுக்கீட்டுக்குள்ளாக கல்வி நிலையங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான இடங்களையோ அல்லது அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களையோ அல்லது பதவி இடங்களையோ ஒதுக்கீடு செய்வதில் அருந்ததியர்களுக்கு முன்னுரிமை தரப்படுதல் வேண்டுமென மேற்சொன்ன ஒருநபர் குழுவானது பரிந்துரை செய்துள்ளது; மற்றும் அருந்ததியர் என்னும் சொல்லானது அருந்ததியர்களை மட்டுமல்லாமல் சக்கிலியன், மாதாரி, மடிகா, பகடை, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகியோரையும் உள்ளடக்கும் எனவும் கூட பரிந்துரை செய்துள்ளது என்பதாலும்.

மாநில அரசானது கவனமான பரிசீலனைக்குப் பின்னர், பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டுக்குள்ளாக கல்வி நிலையங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கான இடங்களையோ அல்லது அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவி இடங்களையோ ஒதுக்கீடு செய்வதில் அருந்ததியர்களின் குழுவிற்கு முன்னுரிமை தருவதற்கு வகை செய்வதற்கு மேற்சொன்ன ஒருநபர் குழு செய்துள்ள பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வது எனவும், அருந்ததியர்களின் குழுவில், அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மடிகா, பகடை, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகியோரைக் கொண்ட சாதிகளை வகைப்படுத்துவது எனவும் கொள்கை முடிவு ஒன்றினை எடுத்துள்ளது என்பதாலும்

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்**: இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

(a) ‘‘அருந்ததியர்கள்’’ என்பது, அவ்வப்போது திருத்தப்பட்டவாறான, 1950ஆம் ஆண்டு அரசமைப்பு (பட்டியல் சாதிகள்) ஆணையின் மூலமாக இந்தியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கை செய்யப்பட்ட 76 பட்டியல் சாதிகளின் பட்டியலுக்குள்ளாக வருகின்ற அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மடிகா, பகடை, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகிய சாதிகள் எனப் பொருள்படும்.

(b) ‘‘தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு’’ என்பது, பிரிவு 9இன் கீழ் நியமிக்கப்பட்ட தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு எனப் பொருள்படும்.

(c) ‘‘கல்வி நிலையங்கள்’’ என்பது, 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 45/1994) (இதன் பின்பு 1994ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) பொருள்வரையறை செய்யப்பட்ட அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

(d) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(e) ‘‘தனியார் கல்வி நிலையம்’’ என்பது, 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு (தனியார் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 12/2006) (இதன் பின்பு 2006ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பொருள்வரையறை செய்யப்பட்ட அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

(f) ‘‘பட்டியல் சாதிகள் என்பது, இந்திய அரசமைப்பின் 341ஆம் அமைப்பு விதியின் உடன் இணைந்து படிக்கப்பட்ட அமைப்பு விதி 366(24)இல் உள்ளவாறான அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

**3. தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்தல் :** 1994ஆம் ஆண்டுச் சட்டத்திலோ, 2006ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலுமோ அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், பட்டியல் சாதிகளில் உள்ளடங்கிய அருந்ததியினரின் சமூக மற்றும் கல்வி அளவிலான பின்தங்கிய நிலையினைக் கருத்தில் கொண்டு, வகுத்துரைக்கப்படும் முறையில் பட்டியல் சாதியினருக்கிடையே முன்னுரிமை அடிப்படையில் தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான, கல்வி நிலையங்களில்

மாணவர் சேர்க்கைக்கான பாடப்பிரிவு அல்லது புலம் ஒவ்வொன்றிலும் ஆண்டொன்றுக்கு அனுமதிக்கப்படும் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் இடமிருப்பின், பட்டியல் சாதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் பதினாறு சதவீதமானது அருந்ததியர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

4. அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல் 1994ஆம் ஆண்டுச் சட்டத்திலோ, 2006ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற அதிகார அமைப்பு எதனின், தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், பட்டியல் சாதிகளில் உள்ளடங்கிய அருந்ததியினரின் சமூக மற்றும் கல்வி அளவிலான பின்தங்கிய நிலையினைக் கருத்தில் கொண்டு வகுத்துரைக்கப்படும் முறையில் பட்டியல் சாதியினருக்கிடையே முன்னுரிமை அடிப்படையில், அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை அதற்கு இடமிருப்பின், பட்டியல் சாதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நியமனங்களில் அல்லது இடங்களில் பதினாறு சதவீதமானது அருந்ததியர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்: இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, அரசின் கீழ்வருகின்ற பணி என்பது.

(i) அரசின் கீழ்

(ii) இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றத்தின் கீழ்

(iii) உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனின் கீழ்

(iv) அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் அல்லது நிறுமம் எதனின் கீழ் அல்லது

(v) இம்மாநிலச் சட்டமன்றம், சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற பிற அதிகார அமைப்பு எதனின் கீழ், வருகின்ற பணிகளை உள்ளடக்கும்.

5. முன்னுரிமை இல்லாத இடங்களுக்கு, நியமனங்களுக்கு அல்லது பதவிகளுக்குப் போட்டியிடும் உரிமையானது பாதிக்கப்படுதல் கூடாது. 1994ஆம் ஆண்டுச் சட்டத்திலோ, 2006ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலுமோ அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின், தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அருந்ததியினரின் சமூக மற்றும் கல்வி அளவிலான பின்தங்கிய நிலையினைக் கருத்தில் கொண்டு, அரசின் கீழ்வரும் பணிகளில், நியமனங்களில் அல்லது பதவிகளில் அல்லது தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட கல்வி நிலையங்களில் செய்யப்படும் மாணவர் சேர்க்கையில், முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்குத் தேவைப்படும் சதவீதத்தினரை நிரப்பியதற்கு பின்னரும், தகுதி வாய்ந்த அருந்ததியர்கள் அதிக எண்ணிக்கையுல் அமைந்த அருந்ததியர்கள், அருந்ததியர்கள் அல்லாத பட்டியல் சாதியினருடன், அவர்களுக்கிடையில் அமைந்த தகுதியின் பேரிலான இடைநிலையில் போட்டியிடுவதற்கு உரிமை உடையவர்களாக வேண்டும்.

**6. பட்டியல் சாதியினருக்கான காலியிடங்களை வைத்திருந்து வழங்கும உரிமையானது பாதிக்கப் படுதல் கூடாது**: இந்தச் சட்டத்திலோ அல்லது 1994ஆம் ஆண்டுச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலுமோ அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின், தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலுமோ என்ன அடங்கியிருந்த போதிலும், அருந்ததியினரின் சமூக மற்றும் கல்வி அளவிலான பின்தங்கிய நிலையினைக்

கருத்தில்கொண்டு, அருந்ததியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகள் ஆகியவை. தகுதி வாய்ந்தவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததால் நிரப்பப் படாமல் இருந்தால், அருந்ததியருக்கான காலியிடங்களை வைத்திருந்து வழங்குவது என்பது அல்லாமல் அருந்ததியர்கள் அல்லாத பிற பட்டியல் சாதியினரால் நிரப்பப்பட வேண்டும் மற்றும் பட்டியல் சாதியினருக்கான மொத்த இட ஒதுக்கீடான பதினெட்டு சதவீதமானது பட்டியல் சாதியினரைக் கொண்டு நிரப்புவதற்குட்பட்டு உள்ளபடியேயான காலியிடங்கள் ஏற்பட்ட அந்த ஆண்டிலேயே நிரப்பப்பட வேண்டும் மற்றும் அருந்ததினருக்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமையானது பொதுவாகப் பட்டியல் சாதியினருக்கான காலியிடங்களை வைத்திருந்து வழங்குதல் என்னும் தற்போதுள்ள கொள்கையை எந்தவிதத்திலும் பாதித்தல் கூடாது.

**7. அடையாளச் சான்றிதழ்**: இந்தச் சட்டத்தின்படி பொருள்வரையறை செய்யப்பட்ட அருந்ததியர் களைச் சேர்ந்த உறுப்பினர் எனக் கோருகிற நபர் ஒருவர், தமது கோரிக்கைக்கு ஆதாரமாக, அவ்வப் போது தமிழ்நாடு மாநிலத்திற்காக இந்தியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கை செய்யப்படும் 1950ஆம் ஆண்டு அரசமைப்பு (பட்டியல் சாதிகள்) ஆணையின்படி வழங்கப்பட்ட சாதி அடையாளச் சான்றிதழை வைத்திருத்தல் வேண்டும்.

8. ஒதுக்கீடானது பாதிக்கப்படுதல் கூடாது – இந்தச் சட்டத்தின் பிரிவு 3, 4, 5 மற்றும் 6 ஆகியவைகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அருந்ததியர்களைச் சேர்ந்த மாணவர்கள் அல்லது உறுப்பினர்களின் கோரிக்கைகளானவை, தகுதியின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டிய ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களுக்கு நியமனங்களுக்கு அல்லது பதவிகளுக்குப் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அருந்ததியர்களைச் சேர்ந்த மாணவர் அல்லது உறுப்பினர் ஒருவர் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும்போது, அருந்ததியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், நியமனங்கள் அல்லது பதவிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படுதல் கூடாது.

**9. தகுதி வாய்ந்த அலுவலர்**: (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் இந்தச் சட்டத்தின் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காகத் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கலாம்.

(2) தகுதி வாய்ந்த அலுவலர், வகுத்துரைக்கப்படும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

10. பணிப்புரை வழங்குவதற்கான அரசின் அதிகாரம் (1) அரசானது, ஆணையின் வாயிலாக, பொதுநலனை முன்னிட்டு, அந்த ஆணையில் குறிப்பிடப்படும் நிகழ்வு எதிலும், இந்தச் சட்டத்தின்படி தகுதி வாய்ந்த அலுவலர் விசாரணை ஒன்றைச் செய்வதற்கோ அல்லது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ, பணிக்கலாம் மற்றும் தகுதி வாய்ந்த அலுவலர் அதனால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவைக் குறித்தோ அல்லது அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முடிவைக் குறித்தோ வகுத்துரைக்கப்படம் அத்தகைய கால அளவிற்குள், அரசுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன்பேரில், அரசானது, அது பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பணிப்புரையானது இறுதியானதாகவும், கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

**11. தகுதி வாய்ந்த அலுவலர் பொது ஊழியராதல்** : பிரிவு 9இன்படி நியமிக்கப்பட்ட அலுவலர், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**12. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு**: இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதன்படியோ, நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட செயல் எதற்காகவும் தகுதி வாய்ந்த அலுவலருக்கோ, அரசுக்கோ அல்லது அதன் அலுவலர்கள் எவருக்குமோ எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் கூடாது.

**13. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) இந்த அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டால் அன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அல்லது அதற்கு அடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமானால் அல்லது அப்பேரவை அந்த விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால், அல்லது அப்பேரவை அந்த விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமானால், அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்குப் பின்னர் அவ்வாற மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

14. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்: இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் ஆணை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றக் கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரை : ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டமானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு கால அளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 8/2007)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act, 2007 (Tamil Nadu Act No.8 of 2007) (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2007ஆம் ஆண்டு மே திங்கள் 22ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

**பொதுப் பணித் துறையின் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மையின்கீழ் உள்ள ஏரிகளில் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், ஆக்கிரமிப்பைத் தடுத்து அகற்றுவதற்காகவும் இத்தகைய ஏரிகளைப் பாதுகாப்பதற்கும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்குமான நடவடிக்கைகளுக்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் ஐம்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:** (1) இந்தச் சட்டம் 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்:** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

(a) ''ஆயக்கட்டுப் பரப்பு'' என்பது, எந்த ஒரு பாசன அமைப்பின் மூலமும் அதன் ஆளுகையின்கீழ் பாசனம் பெறக் கூடிய பாசனப் பரப்பு எனப் பொருள்படும்.

(b) ''வயல் வாய்க்கால்'' என்பது, பாசனத்திற்காக நீரைப் பெறுவதற்காகவும் பகிர்ந்தளிப்பதற்காகவும், தற்போது இருக்கின்ற வாய்க்கால் அல்லது இனிக் கட்டப்பட இருக்கின்ற ஒரு வாய்க்கால் எனப் பொருள்படும்.

(c) ''வயல் வடிகால்'' என்பது, நிலத்திலிருந்து உதவாத கழிவுநீர் அல்லது உபரிநீரை வெளியேற்றம் நீர் செல்லும் வழி எனப் பொருள்படும்.

(d) ''முன்கரைப் பரப்பு'' என்பது, ஏரிக்கரையின் நீர்வரத்துப் பக்கப் பகுதியில் உள்ள முழுநீர் மட்ட அளவிற்கு மேலுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதியை ஒட்டிய நிலப்பகுதி எனப் பொருள்படும்.

(e) ''ஏரியின் முழு நீர்மட்டம்'' என்பது, உபரிநீரை வெளியேற்றும் கட்டமைப்பின் நீர் வழிந்தோடும் மட்டத்தின் வரை தேக்கி வைக்கப்படும் நீரின் மட்டம் எனப் பொருள்படும்.

(f) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(g) ''நிலம்'' என்பது, நிலத்திலிருந்து பெறும் நலப்பயன்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பொருள்களையோ அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட எவற்றுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட எதுவும் எனப் பொருள்படும்.

(h) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும்.

(i) ''வழங்கு வாய்க்கால்'' என்பது, நீர் ஆதாரம் ஒன்றிலிருந்து நீரினைப் பெற்று, கீழ்மட்டத்தில் உள்ள ஏரிக்கு வழங்கும் ஒரு வாய்க்கால் எனப் பொருள்படும்.

(j) ''உபரிநீர் செல்லும்வழி'' என்பது, ஓர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரிநீரை, கீழ் மட்டத்தில் உள்ள அடுத்த ஏரிக்கோ அல்லது ஆற்றுக்கோ எடுத்துச் செல்லும் வாய்க்கால் எனப் பொருள்படும்.

(k) ''உபரிநீர் கட்டமைப்பு'' என்பது, ஏரியின் தேவையற்ற உபரிநீரை, ஏரியின் பாதுகாப்பின் பொருட்டு கீழ்மட்டத்தில் உள்ள ஆறு அல்லது ஏரிக்கு வெளியேற்றும் ஓர் ஏற்பாடு எனப் பொருள்படும்.

(l) ''ஏரி'' என்பது, நீரினைப் பயன்படுத்துவதற்குத் தேக்கி வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பு மற்றும் வழங்கு வாய்க்கால் மற்றும் அதனைச் சார்ந்த கட்டுமானங்கள், ஏரி மதகு, உபரிநீர் கட்டமைப்பு, உபரிநீர் செல்லும் வழி மற்றும் அதனைச் சார்ந்த கட்டுமானங்கள், வயல் வாய்க்கால் மற்றும் அதனைச் சார்ந்த கட்டமைப்புகளை உள்ளடக்கியதாகும். இது தவிர, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மையில் உள்ள வடிகால்கள் மற்றும் ஏரியின் புறம்போக்கு நிலங்கள் எனப் பொருள்படும்.

(m) ''ஏரிக்கரை'' என்பது, ஒரு சிறிய நிலையான மண் அணை எனப் பொருள்படும்.

(n) ''ஏரி மதகு'' என்பது, ஏரியிலிருந்து நீரினை வழங்கும் நோக்கத்திற்காக வகை செய்யப்பட்ட போக்குவழி எனப் பொருள்படும்.

(o) ''நீர்ப்பிடிப்பு பரப்பு'' என்பது, ஏரியின் முழு நீர்மட்ட அளவில் பரவியுள்ள நீரின் பரப்பு எனப் பொருள்படும்.

**3. ஏரிகளை அளப்பதற்குப் பணிப்புரை வழங்குவதற்கான அதிகாரம்** : அரசானது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஏரிகள் தொடர்பான பரப்பிடங்களைப் பொறுத்த வரையிலான எல்லைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக வருவாய்த் துறையில் கிடைக்கக் கூடிய பதிவுருக்களின்படி நில அளவை செய்வதற்குப் பணிப்பாணை பிறப்பிக்கலாம் மற்றும் எல்லைகளை அடையாளம் காணும் நோக்கத்திற்காக வாய்க்கால், அனைத்து நாற்புற எல்லைகள், அடையாளங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு காட்டுகின்ற விளக்கப்படங்களும் பதிவேடுகளும் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

**4. நில அளவை அலுவலர்களை நியமித்தல்** : (1) அரசு அல்லது அரசால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவரும் ஆணையில் குறித்துரைக்கப்படும் அத்தகைய வட்டார எல்லைகளுக்குள்ளாக இருக்கும் ஏரிகளை நில அளவை செய்வதற்காக வட்டாட்சி நில அளவையர் நிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் நிலஅளவை அலுவலராக ஆணை வாயிலாக நியமிக்கலாம்.

(2) நில அளவையர் வகுத்துரைக்கப்படும் முறையில் ஏரிகளை நில அளவை செய்வதை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) ஏரிகளைக் கட்டுப்படுத்தும் பொதுப்பணித் துறையின் அலுவலர்கள் நில அளவை அலுவலருக்கு உதவி புரிதல் வேண்டும்.

**5. நுழைவதற்கான அதிகாரம்**: நிலஅளவை அலுவலர் மற்றம் நிலஅளவை அலுவலருக்கு உதவி செய்யும் அலுவலர்கள் ஏரிகளை நிலஅளவை செய்வதற்காக நிலம் எதிலும் நுழைவதற்கும் மற்றும் தேவைப்படக் கூடிய அனைத்துச் செயல்களையும் செய்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

**6. நிலஅளவை அலுவலரின் அறிக்கை**: (1) நிலஅளவை அலுவலர், ஏரிகளை அளக்கும் பணி முடிந்தபின்பு, அவைகளின் எல்லைகளை அடையாளம் காணும் நோக்கத்திற்காக ஏரிகளின் எல்லைகளையும் தேவைப்படும் பிற தகவல்களையும் குறிக்கிற விளக்கப்படம் ஒன்றையும், பதிவுரு ஒன்றையும் தயார் செய்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி தயாரிக்கப்பட்ட விளக்கப்படம் மற்றும் பதிவுருவானது அரசால் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய ஏரிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிற பொதுப்பணித் துறை அலுவலர் ஒருவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.ங

(3) உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர், விளக்கப்படம் மற்றும் பதிவுருக்கானது ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஏரியின் எல்லைகளைக் குறிப்பிட்டு வகுத்துரைக்கப்பட்ட முறையில் அறிவிப்பு ஒன்றினை வெளியிடுவதல் வேண்டும்.

**7. ஆக்கிரமிப்பை அகற்றுதல்:** (1) பிரிவு 6 உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்ட அலுவலர், நபர் எவரும் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர், நபர் எவரும் ஏரியின் எல்லைகளுக்குள்ளாக நிலம் எதையும் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார் எனவும் மற்றும் ஆக்கிரமிப்பாளர் அகற்றப்பட வேண்டும் எனவும் கருதுவாரானால், அந்த அலுவலர் வகுத்துரைக்கப்பட்ட முறையில் அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் தேதிக்கு முன்னர் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தொடர்புடைய நபருக்கு அறிவிப்பு ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி அறிவிப்பில் குறித்துரைக்கப்படும் கால அளவிற்குள்ளாக ஆக்கிரமிப்பாளர் ஆக்கிரமிப்பை அகற்றாதலும் மற்றும் ஏரியின் எல்லைகளுக்குள்ளாக அமைந்த நிலத்தை விட்டுச் செல்லாமலும் இருக்கிற நிலையில், பிரிவு 6இன் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர், தேவைப்படும் காவலரின் உதவியைப் பெற்று ஆக்கிரமிப்பை அகற்றி ஏரியின் எல்லைகளுக்காக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின் உடைமையை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக எந்தக் காவல் அலுவலரிக் உதவியானது தேவைப்படுகிறதோ அவர் அந்த அலுவலருக்குத் தேவையான உதவியைச் செய்தல் வேண்டும்.

(3) ஏரியின் எல்லைகளுக்குள்ளாக, நிலத்தின் மீது விளைந்த பயிர் அல்லது எழுப்பப்பட்ட பிற கட்டமைப்பு எதுவும் தண்ட இழப்புக்கு உள்ளாதல் வேண்டும்; மற்றும் உட்பிரிவு (1)இன்படியான அறிவிப்புக்குப் பின்பு ஆக்கிரமிப்பாளரால் கட்டப்பட்ட கட்டடம் அல்லது எழுப்பப்பட்ட பிற கட்டுமானம் எதுவும் அல்லது அதில் சேகரித்து வைக்கப்பட்ட எதையும் ஆக்கிரமிப்பாளர் அகற்றாது இருப்பின் அவையும் தண்ட இழப்பிற்கு உள்ளாகுதல் வேண்டும்.

**8. குற்றங்களும் தண்டங்களும்:**

(a) சட்டப்படியான அதிகாரமின்றி தண்ணீர் சூழப்பட்ட நிலத்திலும் ஏரியின் நீர்க்கரைப் பரப்பிடங்களில் நுழைகிற;

(b) சட்டப்படியான அதிகாரமின்றி பயிர் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிற;

(c) சட்டப்படியான அதிகாரமின்றி மரங்களை விளைவித்திருக்கிற;

(d) ஏரிக்கரையை, ஏரி மதகுகளை, உபரி நீர் கட்டமைப்புகளைப் பிறவாறு கட்டப்பட்ட கட்டமைப்புகளைச் சேதப்படுத்துகிற;

(e) இந்தச் சட்டத்தின்படி அலுவலர்கள் தங்களுடைய பணியினைச் செய்வதைத் தடுக்கிற;

(f) ஏரிகளை நிரப்புவதற்கு நீர் வழங்கும் வாய்க்காலின் நீரோட்டத்தைத் தடுக்கிற வகையில் இடையீடு செய்து அருகிலுள்ள வாய்க்காய் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிக்கிற;

(g) ஆயக்கட்டு பரப்பிடத்தை நிரப்புவதற்கு ஏரி மதகிலிருந்து மாற்றி வாய்க்கால்களுக்கான நீரோட்டத்தைத் தடுக்கிற;

(h) வயல் வாய்க்கால்களில் அமைந்துள்ள பகிர்ந்தளிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் அமைப்புகளைச் சேதப்படுத்துகிற;

(i) வயல் வாய்க்கால் அமைப்புகளில் உள்ள நீரோட்டத்தைச் சேதப்படுத்தித் தடுக்கிற;

(j) பயிர் செய்வதற்காக இயந்திர மற்றும் மின்சார சாதனங்கள் மூலமாக ஏரியிலிருந்து நீரை இழுத்து எடுக்கிற.

எவரொருவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவிற்கான சிறைத் தண்டனையோ அல்லது ஐயாயிரம் ரூபாய் வரையிலான பணத் தண்டமோ அல்லது இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**9. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு** : இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை ஒன்றின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதும் ஏதொன்றிற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் கூடாது.

**10. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**: (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழின் அறிவிக்கையின் மூலமாக, அந்த இடர்ப்பாடகளை நீக்குவதற்குத் தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத் தோன்றக் கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் செய்தல் கூடாது.

**11. பிற சட்டங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல் கூடாது** : இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனைக் குறைவுபடுத்துதல் கூடாது.

**12. புறம்போக்கு நிலங்களை உடைமை மாற்றம் செய்தல்** : சேமிப்புக் கொள்ளளவு, நீரின் தன்மை இவற்றுடன் குறுக்கீடு ஏதுமின்றிப் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏரிப் புறம்போக்கு நிலத்தின் பகுதி எதனையும், அரசுப் பொதுநலனுக்காக உடைமை மாற்றம் செய்யலாம்.

**13. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**: (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ நிறைவேற்றுவதற்கான விகிளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டால் அன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்ற பேரவையின் முன்பு வைக்கப்பட வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட அல்லது அந்தக்கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவையானது அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவையானது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கக் கூடாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அதற்குப் பின் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அவ்வாறு மாற்றப்பட்ட வடிவில்தான் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்வுக்கேற்ப அது செல்திறன் அற்றுப்போதல் வேண்டும். ஆயினும் அத்தகைய மாற்றமோ அல்லது செல்திறன் அற்றுப்போவதோ, அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

# PRESS & REGISTRATION OF BOOKS ACT

**Registration of Newspapers (Central) Rules, 1957**

**FORM - IV (See Rule 8)**

**Statement about ownership and other particulars about "Sattakadir"**

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | **SATTAKADIR**<br>3/2, Swathi Towers, Jupiter Campus,<br>3, Durgabai Deshmukh Road,<br>Raja Annamalaipuram,<br>Chennai - 600 028. |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | Thiru.I.Stephen |
| Nationality | : | Indian |
| Address | : | Canaan Press (P) Ltd.<br>62/1, Peters Road,<br>Royapettah,<br>Chennai - 600 014. |
| 4. Publisher's Name | : | Dr. V.R.S. Sampath |
| Nationality | : | Indian |
| Address | : | 3/2, Swathi Towers, Jupiter Campus,<br>3, Durgabai Deshmukh Road,<br>Raja Annamalaipuram,<br>Chennai - 600 028. |
| 5. Editor's Name | : | Dr. V.R.S. Sampath |
| Nationality | : | Indian |
| Address | : | 3/2, Swathi Towers, Jupiter Campus,<br>3, Durgabai Deshmukh Road,<br>Raja Annamalaipuram,<br>Chennai - 600 028. |
| 6. Name and Address of Individuals who own the newspaper and partners or share holders and holding more than one percent of the total capital. | : | Dr. V.R.S. Sampath<br>C-4, Lloyds Estate, Lloyds Road,<br>Royapettah, Chennai - 600 014. |

I. Dr. V.R.S.Sampath hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date : 01.03.2026 **Dr. V.R.S. Sampath**
Place : Chennai Signature of Editor/Publisher



THINK AHEAD. STAY AHEAD.
Bharath UNIVERSITY
30 YEARS OF EXCELLENCE
RATING AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in ]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[ Full time and Part time ]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. PA
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme | Scheduled Caste / Scheduled Tribe candidate | Parent being an Ex-serviceman | Physically Handicapped candidate | First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: in person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/- Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of March 2026**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly March 2026 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**



டாக்டர் மோனிகா கார்த்திக் குழுவினர் சார்பில் மகளிர் விருது வழங்கிய விழாவில் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். உடன் டாக்டர் விஜி சந்தோசம் , தலைவர் விஜிபி குழுமம் மற்றும் விருதாளர்கள்



கோலாலம்பூரில் நடைபெற்ற 11வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களை டத்தோ சகோதேவன் விருந்தளித்து சிறப்புச் செய்தார்.



12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை வாஷிங்டனில் நடத்த உடன் இருந்து பணியாற்றிய திரு. செல்வா ஜெயராமன் அவர்களுக்கு டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் மற்றும் குழுவினர் சிறப்புச் செய்தனர்.

On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**